ANGLO ASIAN
MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 6 18 – 24 மே 2000 முழக்கம்: 279

AYNGARAN VIDEO
உங்களுக்குத் தேவையான
ORIGINAL VIDEO, VCD, DVD, CD
மற்றும் தொலைக்காட்சி
நாடகங்கள், பிரபல மேடை
நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள்
விற்பனைக்கும் வாடகைக்கும்
பெற்றுக் கொள்ளலாம்.
(அனைத்தும் ORIGINAL பிரதிகள்)
80, Burlington Road
New Malden
SURREY KT3 4NU
Tel: 07939238296
Pub.

# புலிகளின் பொறி வலைக்குள் சிங்கள இராணுவம்

(15.05.00)

ஓயாத அலைகள்-3 இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளினால் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து விடுதலைப் புலிகள் யாழ்.குடாவை முற்றாக மீட்டெடுத்துக் கொள்வார்களா என்ற ஊகங்களே சர்வதேச இராணுவ ஆய்வாளர்கள் மத்தியிலும் சர்வதேச நாடுகள் மத்தியிலும், நிலவி வந்தன. ஆனையிறவுப் பெருந்தளத்தின் மீதான தாக்குதலுக்குப் பின்னர் தென்மராட்சியின் பல பகுதிகளையும் மீட்டெடுத்த விடுதலைப் புலிகள் தற்பொழுது யாழ். குடாவினை சிறீலங்கா இராணுவத்திடம் இருந்து முற்றாக மீட்டெடுக்கும் யுத்த வியூகத்தினை வகுத்துள்ளார்கள். இதற்காக விடுதலைப் புலிகளின் பல அணிகள் வன்னியில் இருந்து யாழ். நகரை நோக்கி நகர்த்தப்பட்டு வருகின்றனர்.

தற்பொழுது யாழ். நகரில் கரையோரப் பகுதிகளான அரியாலை, மணியந்தோட்டம், கொழும்புத்துறை, புங்கங்குளம், நெடுங்குளம், பாஷையூரின் சில பகுதிகள் ஆகிய பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் நிலைகொண்டுள்ளனர். முன்னதாக இப்பகுதிகளில் சிறீலங்கா இராணுவம் நிலைகொண்டிருந்தது. கடந்த வாரம் விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த அறிவித்தலை சிறீலங்கா அரசு நிராகரித்ததையடுத்து மீண்டும் தமது இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த விடுதலைப் புலிகள், சாவகச்சேரிப் பகுதியில் இரு இராணுவத் தளங்

(☞ 2ம் பக்கம்)



## ஊரடங்கு பிறப்பித்து மக்களை வெளியேறவிடாது மனித கவசங்களாக்கும் இராணுவம்

(15.05.00)

யாழ். நகர் மீதான விடுதலைப் புலிகளின் இறுதிக்கட்ட தாக்குதல்களுக்கான ஏற்பாடுகள் தயார் நிலையில் இருந்தாலும் மக்களின் பாதுகாப்புக் கருதி அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறும் வரை இராணுவத்தின் மீதான தாக்குதல்களை விடுதலைப் புலிகள் தாமதப்படுத்திவருவதாக யாழ்.நகரச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதுகுறித்து யாழ். நகரில் உள்ள சமூகசேவைப் பிரமுகர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், மக்களின் பாதுகாப்பினை விடுதலைப் புலிகள் தமது தலையாய கடமையாகக் கருதுவதால், தமது தாக்குதல் நடவடிக்கைகளைச் சற்று தாமதப்படுத்தி வருகின்றார்கள் என தான் நம்புவதாகவும், சிறீலங்கா அரச இராணுவம், தாம் தமிழ் மக்களை பாதுகாக்கவே யாழில் நிலைகொண்டிருப்பதாகக் கூறுவதை எந்தப் புத்திசுவாதீனம் உள்ள மனிதனும் ஏற்றுக்கொள்ள

(☞ 2ம் பக்கம்)

## சந்திரிகாவின் சர்வகட்சிக் கூட்டம்

(15.05.00)

யாழ். குடாமீது விடுதலைப் புலிகளின் பிடி நாளுக்குநாள் இறுகுவதையடுத்து, சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா யாழ். நிலைமை உட்பட வடக்கில் தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமை குறித்து ஆராய சர்வகட்சி கூட்டம் ஒன்றினை இன்று அலரி மாளிகையில் கூட்டியுள்ளார். பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளில் இருந்து தலா இரு பிரதிநிதிகளை இக் கூட்டத்திற்கு அழைத்திருந்த சந்திரிகா, யாழ். நிலைமை பற்றி அவர்களு

(☞ 3ம் பக்கம்)

## பூவரசன்தீவில் தாக்குதல் முகாமைவிட்டு பொலிசார் தப்பியோட்டம்

(15.05.00)

திருமலைக்குத் தென்மேற்கே உள்ள பூவரசன்தீவிலுள்ள அல் அமீனா வித்தியாலயத்தில் முகாமிட்டிருந்த விசேட பயிற்சி பெற்ற சிறிலங்காப் பொலிசார் நிலைகொண்டிருந்த முகாம்மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் இரு பொலிசார் கொல்லப்பட்டதுடன் ஆறு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை1.30 மணியளவில் பொலிஸ் முகாம் மீது திடீர் அதரடித் தாக்குதலை நடாத்திய விடுதலைப் புலிகளின் அணிகள் முகாமை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். இதன்போது கொல்லப்பட்ட, காயமடைந்த தமது சாகக்களையும் தூக்கிக்கொண்டு ஏனைய

(☞ 2ம் பக்கம்)

## பாரிசில் ஆனையிறவு வெற்றி விழா

(15.05.00)

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றின் மிகப்பெரும் வெற்றியான ஆனையிறவுத்தளம் ஓயாத அலைகள் படையணிகளால் ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்கப்பட்ட வெற்றி விழா பாரிசின் புறநகர்ப் பகுதியான லாப் பிளான் சென்டனிஸ்

(☞ 2ம் பக்கம்)

தமிழினி
பல்பொருள் அங்காடி
TAMILINI Cash and Carry
195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ
Tel: 0181-606 9900 Fax: 0181-813 8269
• எமக்கு லண்டனில் வேறு எப் பகுதியிலும் கிளைகள் எதுவும் கிடையாது!

# ஈழமுரசு

Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி: **Leama**
**Tel: 0208 2053650**
**Fax: 0208 2053651**

டென்மார்க்: T. சுரேஸ்காந்த்
Møller vcj - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin,
Swiss.
Natel: 079 635 02 16

லண்டன்:
தபாற்தொடர்பு
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0181-56 16 877
ஜெயந்தன்: - Tel: 0956908145
ஹரி - Tel: 07887874177
பாஸ்கரன் - Tel: 0181-7698302

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109
Homebush South
N.S.W 2140, Australia.
E-Mail:tccsydney@one.net.au

குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.


(1ம் பக்கத் தொடர்ச்சி)

## ஊரடங்கு...

மாட்டான் எனவும், செம்மணிப் படுகொலைககளைப் போன்ற ஏராளமான படுகொலைகளைச் செய்த இந்த இராணுவம் விரைவில் இந்த மண்ணில் இருந்து துரத்தியடிக்கப் பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, முற்றுகைக்கு உள்ளாகியிருக்கும் சிறீலங்காப் படையினர் தம்மை பாதுகாத்துக் கொள்ள மக்களை மனித கேடயங்களாக பயன்படுத்தும் முயற்சியில் மீண்டும் ஈடுபட்டுள்ளனர். இதற்காக தாக்குதல் நடைபெறும் பகுதிகளைவிட்டு பொது மக்கள் வெளியேறாத வண்ணம் ஊரடங்கு உத்தரவுகளை அடிக்கடி பிறப்பித்து வருகின்றனர். 24 மணிநேரம், 48 மணிநேரம் என இவர்கள் தொடர்ச்சியாக அமுல்ப்படுத்தி வரும் ஊரடங்கு உத்தரவினால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்வது தடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கடந்த சனியன்று படையினர் இரண்டு மணித்தியாலங்களுக்கு ஊரடங்கினை தளர்த்தியதையடுத்து, யாழ். நகரப்பகுதிகளில் வசித்த மக்கள் உடனடியாக அப்பகுதிகளை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்லத் தொடங்கினார்கள். இவர்கள் வெளியேறிச் செல்வதை படையினர் தடுக்க முயற்சித்தபோதும் அது பயனளிக்காமல் போயுள்ளது. எனினும் பொதுமக்கள் சிலர் படையினரால் தமது பாதுகாப்பிற்காக அப்பகுதிகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் மூலம் தெரிய வருகிறது.

இதேவேளை, தங்களது உயிரைப் பாதுகாத்துக்கொள்ள ஏராளமான படையினர் இடம்பெயர்ந்து செல்லும் மக்களோடு மக்களாக சென்றுகொண்டிருப்பதாகச் செய்திகளில் இருந்து அறியமுடிந்தது.

இது இவ்வாறிருக்க, போர் நடைபெறும் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்கு சென்று உயிரிழப்புக்களைத் தவிர்க்குமாறு விடுதலைப் புலிகளால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று, அப்பகுதிகளை விட்டு மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்று, ஓயாத அலைகள் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கிவருகின்றனர். மக்களின் இந்த ஒத்துழைப்பிற்கு விடுதலைப் புலிகள் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## பூவரசன்தீவில்...

வர்கள் முகாமைவிட்டு தப்பியோடியுள்ளனர். இதன்போது அங்கிருந்து 40 மி.மீ. பீரங்கிகள் நான்கு உட்பட ஏராளமான் ஆயுத தளவாடங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இதனையடுத்து முகாம் முற்றாக விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## பாரிசில்...

மண்டபத்தில் நேற்று மாலை ஐந்து மணியளவில் எழுச்சியுடன் இடம்பெற்றது.

தேசியத் தலைவரின் வழிநடத்தலில் தமிழினம் பெற்றுக் கொண்ட இப்பெரும் வெற்றி விழாவில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான மக்கள் உணர்வுடன் கலந்துகொண்டு தமது பங்களிப்புக்களை வழங்கியுள்ளனர்.

இவ்விழாவில் விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகப்பொறுப்பாளர், விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுக் கிளைப் பொறுப்பாளர், தமிழர் கூட்டமைப்புகளின் தலைவர் பேராசிரியர் செவாலியே சுகிர்தராஜ் ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்கள்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகளின்...

களை அழித்து சாவகச்சேரியின் நகர் தவிர்ந்த ஏனைய பகுதிகள் சிலவற்றை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

கடந்த 09.05.00 செவ்வாயன்று காலை வலிகாமம், தென்மராட்சி பகுதிகளில் உள்ள உயர்வலுக் கொண்ட சிறீலங்கா இராணுவ அரண்களையும் நிலைகளை ஊடறுத்து அவற்றை தகர்த்து அழித்தவாறு ஓயாத அலைகள் படையணிகள், ஆக்கிரமிக்கப் பட்ட பிரதேசங்களை மீட்டவாறு முன்னேறி அரியாலை, கிழக்கு அரியாலை உட்பட்ட பகுதிகளையும், தென்மராட்சிப் பகுதிகளையும் மீட்கும் சமரை ஆரம்பித்தன.

தென்மராட்சியில் சாவகச்சேரி நகருக்குத் தெற்கே இரண்டு மைல் தொலைவில் உள்ள தனங்கிளப்பு, மற்றும் நாவற்குழி அருகான முகாம்கள் கடும்தாக்குதலின் பின்னர் ஓயாத அலைகள் படையணியால் மீட்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவித்தன.

யாழ். நகரின் மையத்தில் இருந்து 3 மைல் தொலைவில் இருந்த ஏ9 கண்டிவீதியில் உள்ள அரியாலைப் பகுதியையும், அங்கிருந்து நாவற்குழி வரையிலான இரண்டு மைல் நீளமான கண்டி வீதியையும் ஓயாத அலைகள் படையணி ஊடறுத்து உள் நுழைந்து அப்பகுதியை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது.

இதேவேளை நாவற்குழி பகுதியில் கடந்த புதனன்று சிறீலங்கா இராணுவத்தினரின் டாங்கி ஒன்று கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. இத் தாக்குதல்களில் அதிக அளவு எண்ணிக்கையிலான படையினர் கொல்லப்பட்டு, ஏராளமானோர் காயமடைந்தனர். தென்மராட்சியில் நாவற்குழி- கேரதீவு பாதையில் உள்ள கோவிலாக்கண்டியில் உள்ள சிறீலங்கா இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் உக்கிர தாக்குதலை நடாத்தி அதனையும் கைப்பற்றி அழித்துள்ளனர்.

இதேவேளை கடற்புலிகள் அணியினர் கொழும்புத்துறை துறைமுகப் பகுதியில் தரையிறங்கி அப்பகுதியில் இருந்த இராணுவ நிலைகள் மீது கடுமையான தாக்குதலைத் தொடுத்து அப்பகுதியையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

தற்பொழுது உள்ள களநிலவரப்படி விடுதலைப் புலிகளின் யாழ்.நகர மீட்பு வியூகத்தில் சிறீலங்கா இராணுவம் முற்றாக சிக்கியிருப்பதாகத் தெரியவருகிறது. இந்நிலைமையினை அடுத்து வடபகுதிக்கான நடவடிக்கைத் தளபதியாக சந்திரிகாவினால் அண்மையில் நியமனம்பெற்ற ஜானகப்பெரேரா கொழும்பிற்கு உடனடியாகத் திரும்பி, சந்திரிகாவிடம் கள நிலவரம் பற்றி விளக்கியிருப்பதுடன், உடனடியாக இராணுவத்தினருக்கு ஆட்சேர்ப்பும், ஆயுத தளவாடங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.


## 7ம் மாத நினைவு வணக்கம்



**வீரவேங்கை அமுதா**

**செல்வி பிரியந்தி பிரபாகரன்**

ஈழத்தாயின் மடியில் 09.10.1999

புலரும் பொழுதில் மலரும் இசையமுதே

பொங்கிவரும் பசுமையான அந்தக் காலங்களே எம் இதயங்களை நிறைத்த சோலைகளே மழலைச் சொற்களால் எம்மை மெய்மறக்க வைத்து எம் குலம் காக்க வந்த பூங்குயிலே தோள் விட்டுத் தோள் மார்விட்டு மார்பு தாவிய சிட்டுக் குருவியே

பனிக்காற்றுடன் அதிகாலையில் மலரும் மலரம்மா — நீ
தேடுகின்றோம் திருவடிகள்...
என்று காண்போம் உன் பூ முகம்!
தமிழீழம் எங்கும் எம்மறவர் படையணி காத்திட
புது யுகம் படைக்கப் புறப்பட்டாய் நீயம்மா
உனது பத்துத் திங்கள் சிறைக்கு முன்பே
உன் பெற்றோர் சுதந்திர வேங்கைகளே
உன் உற்றார் சுதந்திரத்தின் மணித் தீபங்களே

தமிழன் தாயகம் விட்டு எதிரி ஓடும்
செய்தி கேட்டு மகிழ்ந்தோம்
எம் முன்னே உன் உயிர்போகும்
செய்தி கேட்டுத் துடிக்கின்றோம்
உள்ளோம் என்று உட்கார்ந்தால்
உன் முகம் அல்லவா முன் நிற்கின்றது
உறங்குவோம் என்று கண்களை மூடினால்
உன் கனவுகள் அல்லவா விழிக்க வைக்கின்றது

தாயை வடித்தெடுத்த சேயே உன் தாய்
வழியில் தாய் மண்ணைக் காத்திடப் புறப்பட்டாயே
பிள்ளைக்குத் தாயல்ல முக்கியம்
என்றாள் உன் அன்னை
உனக்குப் பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
சுற்றம் என்று வழிசமைத்தாயே
உன் அன்னை மனோகரி எம் தேசத்தின்
விடுதலையின் வித்தானாள்

உன் அன்னையின் வழியில் உன் சிறிய தந்தை
கிரிதரன் தீபச் சுடரானான்
அவர்கள் பாதையில் வீர வேங்கையாய்ச் சென்று விட்டாயோ என் மகளே பிரியந்தி
நீங்கள் மூவரும் எங்கள் பாதையில் ஒளியாவீர்
நீங்கள் மூவரும் எங்கள் பாதையில்
நீதியின் தீபச் சுடராவீர்

தமிழீழப் பாதையில் மீளாப் பயணம் தொடுத்த
ஈழத்தில் மலர்ந்த மூன்று செல்வங்களே
என்று கேட்பேன் உங்கள் குரல்
என்று காண்பேன் உங்கள் தாமரை முகம்
உங்கள் ஆன்மா அழிவதில்லை
உங்கள் அடிச் சுவடுகள் மறைவதில்லை
சென்று வாருங்கள் என் செல்வங்களே
சென்று வாருங்கள்

உங்கள் பாதையில் மீட்போம் தாயகம்
துடைப்போம் கண்ணீர்
படைப்போம் சரித்திரம்
உங்களுக்கு எங்கள்
சிரம் தாழ்த்திய வீர வணக்கங்கள்.

என்றும் உங்கள் பாசமுள்ள
தந்தை, சகோதரர்
உறவினர், நண்பர்கள்.

Pub



# ERRANCES TRAVELS

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)

# சிங்களவர்கள் விழித்தெழாவிடில் அவர்களுக்கு ஒரு நாடு இருக்காது

## பௌத்த பீடாதிபதியின் ஓலம்!

சிங்கள இனத்தையும் எமது பௌத்த நாட்டையும் காப்பாற்ற சிங்கள மக்கள் ஒன்றுபட வேண்டும். இன்று எமக்கு ஏற்பட்ட இந்த நிலைகுறித்து நாம் விழிப்பாக இருக்காவிடில் எதிர்காலத்தில் நமக்கென ஒரு நாடு இருக்காது. எனவே இந்நாட்டைப் பாதுகாக்க வேண்டியது சிங்கள மக்களின் பொறுப்பாகும். இவ்வாறு சிறீலங்காவின் அமரபுர பௌத்த பீடாதிபதி மடிகே பஞ்ஞாசீக தேரோ தெரிவித்துள்ளார்.

அண்மையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சிங்கள உறுமய கட்சித் தலைவர் மேற்படி பீடாதிபதியைச் சந்தித்து ஆசி பெறச் சென்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பீடாதிபதியைச் சந்தித்த பின்னர் உறுமய கட்சியின் செயலாளர் திலக் கருணாரத்தின அங்கு உரையாற்றியபோது சிங்கள மக்களை ஒன்றுபடுத்துவதற்காகவே சிங்கள உறுமய கட்சி அமைக்கப்பட்டது.

எதிரியைத் தோற்கடிக்க இராணுவத்திற்குத் தேவையான சக்தியை எமது கட்சி வழங்கும். முப்படையையும் பலப்படுத்த அனைத்து சிங்களவர்களும் முன்வரவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

## தமிழ் குடும்பஸ்தர் குருநாகலில் கைது

விடுதலைப் புலிகளுக்கு வாகனங்கள் கொள்வனவு செய்து கொடுத்தார் என்ற சந்தேகத்தின் பேரில் சிறீலங்காப் பொலிசார் குருநாகல் பகுதியில் 46 வயதுடைய தமிழ்க் குடும்பஸ்தரான கிருஸ்ணபிள்ளை என்பவரைக் கைதுசெய்துள்ளனர்.

இவரது கைது குறித்து பொலிசார் வெளியிட்ட பொய்ப் பிரச்சாரத்தில் இவர் ஒருவாரத்திற்கு முன்னரே செங்கலடியில் இருந்து குருநாகல் பகுதிக்கு வந்ததாகவும் விடுதலைப் புலிகளுக்காக உளவு இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்ய முயன்ற வேளை தாம் கைதுசெய்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இவர் ஒரு அப்பாவி எனவும், இவர் தனது சொந்தப் பாவிப்பிற்காக வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்ய முயன்றபோது சிறீலங்காப் பொலிசார் அவரிடம் இலஞ்சம் கேட்டதாகவும் இலஞ்சம் கொடுப்பதற்கு இவர் மறுப்புத் தெரிவித்ததாலேயே அவரைப் பொலிசார் கைதுசெய்ததுடன், பொய்க் கதையையும் பிரச்சாரம் செய்துள்ளனர்.

## நூறு நூறு பேராவது தாருங்கள் ரத்வத்தையின் கெஞ்சல்

சிறீலங்காப் படைகளில் மேலும் ஆட்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை படுதோல்வி அடைந்துவரும் நிலையில் எவ்வாறாவது 20,000 பேரை படையில் இணைத்துக் கொள்ள வேண்டும் என துடியாகத் துடிக்கிறார் சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சர். கடந்தவாரம் நடந்த பாராளுமன்றக் கூட்டத்தொடரில் அங்கிருந்த 233 பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் ஆளுக்கு நூறு, நூறு பேர் என்றாலும் சேர்த்துத் தாருங்கள் என ரத்வத்தை கேட்டுள்ளார்.

## யுத்த நிலைமையால் படையினருக்கு வெசாக் இல்லையாம்

சிறீலங்கா முப்படையினராலும், பொலிசாராலும் மேற்கொள்ளப்படவிருந்த வெசாக் கொண்டாட்டங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக சிறீலங்காப் பொலிஸ் பேச்சாளரான ரியன்லி பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போதைய யுத்த சூழ்நிலை காரணமாக முப்படையினராலும் பொலிசாராலும் மேற்கொள்ளப்படவிருந்த வெசாக் கொண்டாட்டங்கள் மற்றும் வெசாக் இரவு நிகழ்வுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இம்முறை வெசாக் நிகழ்வுகளை மிகவும் அமைதியாக நடாத்தப் படையினர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## போருக்காக 1200 கோடி ரூபாவை மேலதிகமாகத் திரட்ட அரசு அவசரத்திட்டம்

யுத்த முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல 1200 கோடி ரூபா பணத்தைத் திரட்டுவதற்கு வழி காணும் முகமாக நடப்பு வருட வரவு செலவுத் திட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் கடந்த 11ம் திகதி வியாழக்கிழமை சிறீலங்காப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இவ் வரவு செலவுத் திட்டத் திருத்தத்தில் நிதித்துறை சார்ந்த புதிய அறிவிப்புக்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. தேசிய பாதுகாப்பு வரி 5.5 சதவீதத்திலிருந்து 6.5 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கலால் வரியும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. 2000 ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு இரு மாத கால இடைவெளிக்குள் இப்புதிய திருத்தத்தினை பிரதி நிதி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

யுத்தத்திற்காக 1200 கோடி ரூபா மேலதிகமாகத் தேவைப்படுவதாகத் தெரிவித்த அமைச்சர் பீரிஸ், இச்செலவீனத்தை ஈடு செய்யவே அரசாங்கம், தனது வருமானத்தைத் திரட்டிக்கொள்ள முடிவு செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## சந்திரிகா வாஜ்பாய் தினமும் தொலைபேசியில் பேச்சு

நாட்டின் நிலவரம் தொடர்பாக சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தினமும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் தொலைபேசியில் விளக்கமளிப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இத் தகவலை சிறீலங்காவின் அமைச்சர் ஒருவர் பாராளுமன்றத்தில் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தியப் பிரதமரோடு மட்டுமல்லாது சார்க், பொதுநலவாய அமைப்புக்களின் தலைவர்களுடனும் சந்திரிகா தொலைபேசியில் தொடர்பு கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. புது டெல்லியில் நோர்வே தூதுக்குழு இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசியது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்வியொன்றிற்குப் பதிலளித்த வேளையே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மணித்தியாலமும் சர்வதேச நாடுகளிடம் ஜனாதிபதி தொடர்புகொண்டு வருகிறார் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## யாழில் புலிகள்!! செய்தி சொன்னவர்கள் கைது

விடுதலைப் புலிகள் யாழ். நகரை நோக்கி முன்னேறி வந்ததாகத் தொலைபேசி உரையாடல்களில் தெரிவித்த 5 தமிழர்கள் சிறீலங்காப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக தொலைபேசி மூலம் வதந்தி பரப்பினார்கள் என்ற குற்றச்சாட்டும் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் மூவர் கொழும்பினைச் சேர்ந்தவர்களாவர்.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக வதந்திகளைப் பரப்புபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சிறீலங்கா அரசு மீண்டும் எச்சரித்துள்ளது. இவ்வாறான வதந்திகளைப் பரப்பினால் 5 வருடம் வரையான சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும் எனவும் அத்துடன் 3 மாத காலத்திற்கு விசாரணை ஏதும் இன்றித் தடுத்துவைக்க முடியும் எனவும் அரசு எச்சரித்துள்ளது.

## பள்ளிமுனைக் குண்டு வெடிப்பில் 5 பொலிசார் காயம்

மன்னார் பள்ளிமுனைப் பகுதியில் கடந்த 11ம் திகதி காலை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் சிறீலங்காப் பொலிசார் ஐவர் படுகாயமடைந்துள்ளனர். சிறீலங்காவின் நாசகார ஒழிப்புப் பிரிவு அலுவலகம் அருகேயே இக்குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது. காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற இக்குண்டு வெடிப்பால் வீதியில் பாரிய குழி ஒன்றும் ஏற்பட்டுள்ளது. காயமடைந்த 5 பொலிசாரில் மூவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் இவர்கள் தற்பொழுது அநுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சிறீலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தலைமன்னார் கீசிலியன் குடியிருப்புப் பகுதியில் கடந்த புதன்கிழமை மாலை சிறீலங்காக் கடற்படையின் வாகனமொன்று கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்காகியதில் அதில் சென்ற படையினர் அனைவரும் காயமடைந்துள்ளனர். இத்தாக்குதலால் வாகனத்தின் பின்பகுதி முற்றாகச் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


ஈழமுரசு சந்தா




நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி: "EELAMURASU"
22, Rue Perdonnet, 75010 Paris.
Tél: 01 40 37 63 63 / Fax: 01 40 37 64 64
E.Mail-eelamurasu@aol.com

விண்ணப்பப் படிவம்

பிரான்சுக்கான சந்தா (தபாற் செலவுடன்)
12 மாதம் → 420 பிரெஞ்சு பிராங் ☐
பிரான்ஸ் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கான சந்தா (தபாற் செலவுடன்)
12 மாதம் → 520 பிரெஞ்சு பிராங் ☐
காசுக்கட்டளை, காசோலையை 'ஈழமுரசு' என்ற பெயருக்கு அனுப்பவும்.

பெயர்:......................................
முகவரி:......................................
......................................
தொலைபேசி எண்:......................................

## கோண்டாவிலில் உரப்பையினுள் சடலம்

யாழ். கோண்டாவில் பகுதியில் உரப்பை ஒன்றில், கட்டப்பட்ட நிலையில் பெண்ணொருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. வைத்தியசாலையில் இச்சடலம் அடையாளம் காணப்பட்டபோது அது பருத்தித்துறை வறாத்துப்பளையைச் சேர்ந்த பாலர் பாடசாலை ஆசிரியை சுஜாத்தா என்பவருடையது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கழுத்து நெரிக்கப்பட்டதால் இப்பெண் மரணமானார் எனப் பிரேதப் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விமானத்தினுள் வைத்து 5 தமிழர்கள் கைது

சிறீலங்காவின் கட்டுநாயக்க விமானநிலையத்தில் வெளிநாடு செல்வதற்காக விமானத்தில் ஏறியிருந்த 5 தமிழர்கள் கடந்த 9ம் திகதி மாலை விமான நிலையக் குற்றப் புலனாய்வுப் பொலிசாரினால் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் டுபாய் நாட்டில் தொழில் வாய்ப்புப் பெற்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொழில் முகவர்களினால் விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

வழமையான சோதனைகள் எல்லாம் முடித்து பயணம் செய்வதற்காக விமானத்தில் ஏறிய பின்னர் இவர்களை விமானத்தில் வைத்தே பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் வசம் இருந்த கடவுச் சீட்டுக்களும் தொழில் ஆவணங்களும் குற்றப் புலனாய்வுப் பொலிசாரினால் கைப்பற்றப் பட்டுள்ளன. இதேமாதிரியான கைது நடவடிக்கை ஒன்று கடந்த 3ம் திகதியும் விமான நிலைய பொலிசாரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழில் வாய்ப்புப் பெற்று வெளிநாடு செல்ல விமானம் ஏறிய 25 தமிழர்களை இப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

## யாழில் இருந்து வெளியேற விசேட விமானம் தாருங்கள் - தமிழ்க் குழுக்கள்

எமது கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் முக்கிய ஆதரவாளர்களை யாழிலிருந்து கொழும்பிற்கு அழைத்துவர விசேட விமான வசதிகளைச் செய்து தருமாறு கொழும்பு தமிழ்க் குழுக்கள் சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சைக் கேட்டுள்ளன. இது தொடர்பாக அவர்கள் பாதுகாப்பமைச்சுக்கு விடுத்துள்ள கோரிக்கையில் 98ம் ஆண்டு ஜனவரி மாதம் யாழில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலுடன் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எமது பிரதிநிதிகள் யாழ்.குடாவில் தங்கியிருந்தனர். ஆனால் யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைமையால் எமது பிரதிநிதிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே அவர்களைப் பாதுகாப்பாகக் கொழும்பிற்கு அழைத்துவர விசேட விமானமொன்றை ஒழுங்கு செய்து தரவேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழோசை நிறுத்தம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்திற்கு ஊடாக ஒலிபரப்புச் செய்யப்பட்ட பிபிசி சர்வதேச சேவையின் தமிழோசை மற்றும் சர்வதேச சிங்கள சேவையை தாம் இடைநிறுத்த முடிவு செய்துள்ளதாக ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தலைவர் ஜனதாச பீரிஸ் தெரிவித்துள்ளார். இம்முடிவு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கும், பி.பி.சி. சர்வதேச சேவைக்குமிடையே செய்து .கொள்ளப்பட்ட உடன்படிக்கையை மீறுவதாக இருந்தாலும் நாட்டின் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட . வேண்டியதாக இருப்பதால் இம்முடிவு எடுக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச நிருபர்கள் சங்கம் தணிக்கை குறித்து அதிருப்தி

கொழும்பிலிருந்து செய்திகளை வெளியிடும் சர்வதேச நிருபர்களின் செய்திகள் மீது சிறீலங்கா அரசு தணிக்கை முறையினை அமுல்படுத்துவது தமக்கு மிகுந்த அதிருப்தி அளித்துள்ளதாக சர்வதேச நிருபர்கள் சங்கம் அறிவித்துள்ளது. நடைமுறையில் உள்ள தணிக்கைக் கட்டுப்பாடுகளை உடனடியாக நீக்குமாறும் அரசிடம் அச் சங்கம் கோரியுள்ளது. இது குறித்து அச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில்,

சமநிலை பாதிக்கப்படாத வகையில் செய்திகளை வெளியிடும் நிருபர்கள் மீதான தணிக்கை எமது சங்கத்தினை ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தியுள்ளது. தணிக்கை காரணமாக செய்திகள் அவற்றின் நம்பகத்தன்மையினை இழந்துவிடுவதால் இத் தணிக்கை முறையினை உடனடியாக நீக்கவேண்டும் என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கொழும்பு விமான நிலையத்தில் கொள்ளை

கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த 3 1/2 இலட்சம் பெறுமதியுள்ள கடவுச் சீட்டு முத்திரைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இக்கொள்ளைச் சம்பவத்தினை அடுத்து அதிகாரி ஒருவர் பொலிசாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் தம்மைப் பதிவுசெய்துகொண்டு தொழில் நிமித்தம் வெளிநாடு செல்வோர்களின் கடவுச் சீட்டிற்கான முத்திரைகளே கொள்ளையிடப்பட்டவையாகும்.

## கிளிநொச்சியில் மேலும் 3 எலும்புக்கூடுகள் மீட்பு

கிளிநொச்சி கிழக்கு 3ம் வாய்க்கால் பன்டல் கண்டி என்ற இடத்தில் கிணறு ஒன்று துப்பரவு செய்யப்பட்டவேளை அதற்குள் இருந்து 3 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. கடந்த 11ம் திகதி மாலையே இவ் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

தற்பொழுது அடையாளம் காண்பதற்காக இவ் எலும்புக்கூடுகள் மூன்றும் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சிறீலங்கா இராணுவம் கிளிநொச்சிப் பகுதியை ஆக்கிரமித்திருந்தவேளை படுகொலை செய்த தமிழ் மக்களுடைய எலும்புக்கூடுகளே இவையாகும். அண்மையில் கிளிநொச்சிப் பகுதியில் இருந்து மொத்தமாக 47 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறீலங்காவின் பங்கு விலை 26 வீதம் வீழ்ச்சி !

சிறீலங்கா அரசு நாட்டினை யுத்த சூழ்நிலைக்குள் பிரகடனப் படுத்தியதை அடுத்து அதன் பங்கு விலைச் சுட்டெண் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகிறது. அடுத்தடுத்த இரு நாட்களில் மட்டும் 26 வீதம் இப் பங்கு விலைச் சுட்டென் வீழ்ச்சியடைந்துள்ளது. நாட்டின் யுத்த சூழ்நிலையை பங்குச் சந்தை வட்டாரங்கள் ஏற்றுக்கொள்ளாததாலேயே இவ் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பொருளாதார ஆய்வாளர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார். தெற்காசியப் பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளில் பங்குச் சந்தையில் முன்னேற்றம் இருக்கின்றபோதிலும் சிறீலங்காவின் பங்குச் சந்தையில் முன்னேற்றம் ஏற்படவில்லை எனவும் இவ்வேளையில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட யுத்தப் பிரகடனம் பங்குச் சந்தைக்கு பாரிய வீழ்ச்சியையே ஏற்படுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


## இசைக்கச்சேரி



தமிழகத்தில் இருந்து வருகை தந்திருக்கும் பிரபல இசைமேதை திருமதி பூசணி கல்யாணராமனும் அவரது குழுவினதும் இணைந்து வழங்கும் இசைக் கச்சேரி

காலம்: 21.05.2000 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 7 மணி
இடம்: அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயமண்டபம்
26, Rue du Département, 75018 Paris.
M°: La Chapelle

பாடல்: திருமதி பூசணி கல்யாணராமன்
வயலின்: பகல இராமதாஸ்
மிருதங்கம்: T.S. சுந்தரேசன்
கடம்: R.N. பிரகாஸ்

இசைப் பிரியர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அருள்மிகு முத்துமாரி அம்மன்
ஆலய நிர்வாக சபை.
தொடர்புகளுக்கு: 01 40 38 30 75



TAMIL EELAM
ALIMENTATION GENERALE
லிமோஸ் மாநகரில்
தமிழீழம் மாளிகை

உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்து மளிகைப் பொருட்களையும்
இலங்கை இந்திய கடல் உணவு வகைகளையும் குளிர்பான வகைகளையும்
புதிய பழைய திரைப்பட பிரதிகளையும் — பாடல்களையும், சர்வதேச
தொலைபேசி அட்டைகளையும் பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்

தமிழீழம் மாளிகை
21, Rue Raspail, 87000 Limoges, France
Tel: 05 55 33 31 62 - Fax: 05 55 32 22 75





ரதி ஜுவலர்ஸ்



28, Ealing Road, Wembley,
Middx HA0 4TL
Tel: 0181-9033063-Fax: 0181-9039711

'எப்பொழுதுமே மலிவு விலை'

OPEN: 7 Days a Week
Mon -Sat: காலை 10 முதல் மாலை 6.30 வரை
Sun: மதியம் 12 முதல் மாலை 6.30 வரை.

# அச்சுறுத்தலுக்கு உள்ளான நிலையில் இராணுவத்தினரை யாழ்ப்பாணத்திற்குள் வைத்திருப்பது கூடாது

## - முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக -

### கொழும்பில் இருந்து வெளிவரும் ராவய வார இதழுக்கு முன்னாள் விமானப்படை தளபதி ஹரி குணதிலக வழங்கியிருந்த செவ்வியொன்றின் முக்கியமான சில பகுதிகள்.

☺ *வடக்கு, கிழக்கு யுத்தத்தின் மூலம் சிறீலங்கா இன்று எதிர்கொள்ளும் நிலைமையை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?*

➲ சிறீலங்கா இன்று பாரதூரமான ஒரு நிலைக்கு முகம்கொடுத்திருக்கிறது. இது பற்றி நாம் பார்க்க முயலுகையில் எமக்குத் தெரிவது, கடந்த நவம்பர் மாதம் விடுதலைப் புலிகள் அமைப்பினர் வன்னியில் தங்கள் பலத்தினை நிலை நிறுத்திக் கொண்டதுதான். இதன் மூலம் அவர்கள் 1952 கிலோ மீற்றர் சதுரப் பரப்பை மீட்டுக் கொண்டார்கள். எமக்கு அந் நிலப்பகுதியை பிடிப்பதற்கு நான்கு மாதங்களுக்கு மேல் தேவைப்பட்டது. அதை மீண்டும் கைப்பற்ற அவர்களுக்கு நான்கு நாட்களுக்கு மேல் மட்டுமே சென்றது. அதன் பின்பு, டிசெம்பர் 11ம் திகதி விடுதலைப் புலிகள் ஆனையிறவின் மேல் தாக்குதலை நடாத்தத் தொடங்கினார்கள். அதன் பின் பளையை கைப்பற்றிக் கொண்டார்கள். இப்போது கிளாலிமேல் கடுமையான தாக்குதல்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இது இத்துடன் நிற்கும் என்பதுபோல் தெரியவில்லை. வடக்கு நோக்கி மென்மேலும் தொடரும் என்றே எனக்குத் தெரிகிறது. அது உண்மையானால் அங்கிருக்கும் எமது படையினரை விலக்கிக் கொள்வது தவிர வேறு வழியில்லை. இன்று அங்கு இராணுவ, விமான, கடற்படை சிப்பாய்கள் என 40,000 பேர் வரை உள்ளனர். பொலிசாருடன் சேர்ந்து 50,000 வரை ஆகின்றது. இப்போது இருக்கும் நிலைப்படி பார்த்தால், அவர்கள் அவ்வளவு பேரையும் இந்த மாதத்திற்கு உள்ளாகவே விலக்கிக் கொள்ளவேண்டிய நிலை ஏற்படும்.

☺ *இப்படியான நிலையில் சிறீலங்காவின் படைகளுக்கு உள்ள சக்தி பற்றி நீங்கள் எப்படி மதிப்பிடுகிறீர்கள்*

➲ சிறீலங்கா பாதுகாப்பு படையினரிடம் இருந்த வன்னிப் பிரதேசம் இன்று இல்லை. அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற மாவட்டங்களில் நகரப்பகுதி தவிர்ந்த மிகுதியான 80 விகிதமான நிலப் பகுதி அவர்களது கட்டப்பாட்டில் தான் உள்ளன. இப்போது ஆனையிறவு படைத்தளமும் இல்லை. இனி பிரபாகரன் நானாக இருந்தால், எனக்குப் பிடிக்க வேண்டி உள்ளது யாழ்ப்பாணமும், மற்றைய தீவுப் பகுதிகளும் மட்டுமே. இங்கு 1950 சதுரக் கிலோ மீற்றர் நிலப்பகுதி உள்ளது. 15,000 படையினர் இருந்தும் எம்மால் ஆனையிறவை மீட்டுக்கொள்ள முடியாது போயின், இந்த நிலப்பகுதியையும் விடுதலைப் புலிகள் மீட்டுக்கொள்வார்கள் என நாம் நினைப்பதும் சாதாரணம் தானே.

☺ *கடந்த சில வாரங்களுக்குள் யாழ்குடா நாட்டில் சிறீலங்கா படையினர் அடைந்துவரும் தோல்விகளும் விடுதலைப் புலிகள் அடைந்துவரும் வெற்றிகளையும் கொண்டு பார்க்கும்போது அவர்கள் பலாலித் தளம் நோக்கி கனரக எறிகணைத் தாக்குதல்களில் ஈடுபடும் சாத்தியக்கூறுகள் உண்டு. அப்படியொரு நிலை ஏற்பட்டால் தோன்றக்கூடிய நிலை என்ன?*

➲ இங்கே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். ஆனையிறவில் 15,000 படையினர் இருந்தும் எம்மால் அதைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. விடுதலைப் புலிகள் இன்று தூர இருந்தே யுத்தம் புரிகிறார்கள். இதன்மூலம் அறியப்படுவது என்னவெனில் இந்த யுத்தம் நேருக்கு நேர் செய்யப்படும் யுத்தமல்ல. இன்று பத்து பதினைந்து மைல்களுக்கு அப்பால் இருந்து குறிப்பிட்ட இடத்தை நோக்கி எறிகணைகள், மோட்டார்கள் மூலம் தாக்குதல் நடாத்துவது இயலுமாக உள்ளது.

பலாலி எனப்படுவது வடமாகாணத்தின் பிரதான இராணுவத் தளம் என்பதுபோலேயே விமானப் படைக்கும் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்தே காணப்படுகின்றன. எனக்குத் தெரிந்தவகையில் விடுதலைப் புலிகள் கிளாலியைக் கைப்பற்றி பலாலியை நோக்கி தாக்குவதற்கே முயற்சி செய்வார்கள். இன்று பிரபாகரன் பலாலித் தளத்தையும் காரை நகர் கடற்படைத் தளத்தையும் கைப்பற்றிக் கொள்வதற்கு முயற்சிகள் செய்கின்றார். அப்படியான நிலையில் பலாலித்தளம் எம்மால் இழக்கப்படுமானால் இராணுவம் என்ற ஒன்று எமக்கு இல்லாமல் போய்விடும். எமக்கு இன்று வடக்கிற்குச் செல்ல தரைப்பாதை ஒன்று இல்லை. உள்ள ஒரே ஒரு பாதை வான்வழிதான். பலாலிக்கு தாக்குதல்கள் நடாத்தப்படுமானால் அதுவும் எமக்கு இல்லாமல் போய்விடும். அதனால்தான் யாழ்ப்பாணத்தில் இருந்து இராணுவத்தை விலக்கிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இது எப்போது நடக்கும் என்பது எனக்குத் தெரியவில்லை.

☺ *பலாலிப் படைத்தளத்தின் மீது விடுதலைப் புலிகள் எறிகணை, மோட்டார் தாக்குதல்களை நடாத்துவது சாத்தியமாகும் நிலையில் அதற்கு எதிர்த் தாக்குதலை நடத்துவதோ, படைத்தளத்தைப் பாதுகாத்துக் கொள்வதோ தற்போதைய நிலையில் சிறீலங்காப் படையினரால் இயலுமா?*

➲ விடுதலைப் புலிகள் அமைப்பு எறிகணை மோட்டார்த் தாக்குதல்களை நடாத்துவது மிக நீண்ட தூரத்தில் இருந்து. நான் ஏற்கனவே கூறியிருந்தேன் இந்த யுத்தம் எதிரெதிராக நடக்கும் யுத்தம் அல்லவென. மேலும், ஆனையிறவு போல் எம்மால் பின்வாங்கிவர முடியாது. பின்வாங்குவதற்கு பலாலியில் இடமும் இல்லை. ஏனெனில் பலாலிக்கு பின் உள்ளது கடல்தான்.

☺ *இந்த பின்னடைவின் காரணமாக அரசாங்கம் இன்று மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?*

➲ இந்த யுத்தம் வெற்றியின் மூலம் முடிக்க முடியாதது என்பதை நான் சொன்னது 10 வருடங்களுக்கு முன்பு. ஆனாலும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை இவர்கள். இப்போது விழுவதைத்தவிர முன்னோக்கிச் செல்ல முடியவில்லை. நான் எப்போதும் சொல்லிவருகிறேன் இந்தப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுதான் சரியானது என்று.


## உங்கள் தலைமுடி உதிர்கின்றதா? கவலை வேண்டாம்
## இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு

**எமது புதிய அறிமுகம்**
**NATURINA 2000 வெளிவந்துவிட்டது!**



தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!
இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.
**இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.**
**Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.**
இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.
எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்மம் பளபளப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
எமது Naturina® தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் (Capsules, Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன் நிச்சயம்.
***இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!***

நீங்கள் சுவிசிலிருந்து வாங்கவிரும்பின் **Postfinance, A/ C No. 40_176111_3** என்ற வங்கிக் கணக்கு இலக்கத்திற்கும், பிரித்தானியாவிலிருந்து வாங்க விரும்பின் **Barclays Bank, Sort Code 20-40-71, A/C No. 80327069** என்ற வங்கிக்கணக்கு இலக்கத்திற்கும் உரிய பணத்தைச் செலுத்தி, பணம் செலுத்தியதற்கான அத்தாட்சியைத் தபால்மூலமோ அல்லது தொலைநகல் மூலமோ எமக்கு அனுப்பி உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.



01.08.2000 இல் இருந்து விசேட சலுகை வழங்கப்படுகின்றது.

உலகில் தினந்தோறும் ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் தமது தலைமுடிப் பிரச்சினைகளின் தீர்வாக Naturina® தயாரிப்புக்களைப் பாவிக்கின்றனர்.
**எமது நிறுவனம், Naturina 2000 புதிய தயாரிப்பின் மூலம் மேலும் பல பயன்களை அளித்து ஐரோப்பாவில் முதன்மை நிறுவனமாகத் திகழ்கின்றது.**

எம்முடன் தமிழிலும் தொடர்புகொள்ளலாம்
(வாரநாட்களில் பிற்பகல் 3-6 மணி) (ஜேர்மனி நேரம்)

**Naturina வின் விளம்பரதாரராக விரும்புகின்றீர்களா!**
ஐரோப்பிய நாடுகளில், வீட்டிலிருந்தவாறே மேலதிக வருமானம்பெற விரும்புகின்றீர்களா? விபரங்களுக்கு எம்முடன் தொடர்புகொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு:
**Intercare Handels GmbH**
**Munster str 5, 59065 Hamm-Germany**
**Tel: 0049 2381 688347 / Fax: 0049 2381 688349 - Internet: http://www.intercare-naturina.com**

பிரான்சிற்கான எமது முகவர்:
Ayngran Centre, 71, Rue Louis Blanc, 75010 Paris.
Tel: சிவா - 06 10 18 25 06.

# சிறீலங்காவின் சிங்களக் குரல்கள்

சில காலங்களுக்கு முன் எங்கள் மக்கள் தென்பகுதியின் சுவர்கள், தூண்கள், ஏன் வீதிகளைக்கூட விடவில்லை. எல்லாவற்றிலும் 'இந்தியக் குரங்குப்படையே திரும்பிப் போ' என்றுதான் எழுதிக் கொண்டிருந்தார்கள். அது போதாது என்று இந்தியப் பொருட்களையும் புறக்கணித்து வந்தார்கள். பம்பாய் வெங்காயத்தை, பெரிய வெங்காயம் என்றும் மலிவாக சாப்பிடுவதற்கு கிடைக்கக்கூடிய ஒன்றினை தடை செய்ய விரும்பாதவர்கள் மைசூர் பருப்பை சிவப்புப்பருப்பு என்றும் பெயர்மாற்றிக்கொண்டனர். அதுபோன்றுதான் மேற்கு நாடுகளின் மருந்து விற்பனையாளர்களை திருப்திப்படுத்தும் வகையில் இந்திய மருந்துப் பொருட்களையும் உதாசீனம் செய்தனர்.

சரி... இப்போது சூரியன் மீன ராசியில் இருந்து மேட ராசிக்குச் சென்றுவிட்டார். அத்துடன் விடுதலைப் புலிகள் ஆனையிறவையும் பிடித்து விட்டார்கள். எமக்கும் கால மாற்றம் ஏற்பட்டது. இப்போது நாங்கள் முற்று முழுதாக மாறுபட்ட ஒரு மனிதர். இந்திய இராணுவத்தை கொண்டுவருவதுதான் எங்களது முழுமையான முயற்சி. நாளையோ மறு நாளோ நாங்கள் எங்கள் சுவர்களில் இப்படி எழுதினாலும் எழுதுவோம்.

***இந்திய ஆஞ்சநேயர் படையினரே உடனடியாக இலங்கைக்கு வாருங்கள்.***

***எங்களைக் காப்பாற்றுங்கள் !***

★ ★ ★

கொழும்பிலே எல்லாப் பக்கங்களிலும் இப்போது பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய அமைப்பு எனும் பெயரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருகின்றன. அப்படியான சுவரொட்டிகளில், தாய் நிலம் புலிகளின் வாய்க்குள். சிங்களவனே விழித்தெழு! எனக்காணப்படும் சுவரொட்டிகளும் ஏராளமாகக் காணப்படுகின்றன.

இப்படியான ஒரு சுவரொட்டியை நீண்டநேரம் பார்த்துக் கொண்டிருந்த ஒரு இளைஞனை அவனது நண்பன் *'ஏன் நீண்ட நேரம் பார்க்கிறாய்?'* என வினவியதற்கு, அவன் இப்படிக் கூறினான்.

*'சுவரொட்டியில் கூறியுள்ளது போலவே நான் விழித்தெழுந்து விட்டேன். அடுத்ததாக என்ன செய்வது என்பது பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்'* என்றான். அதற்கு அந்த மற்றைய இளைஞன் *'அப்படியே விழித்துக்கொண்டு நில்.இனி என்ன செய்ய வேண்டும் என்பதை மற்றொரு சுவரொட்டியின் மூலம் சொல்வார்கள். அதன்பிறகு பார்த்துக் கொள்ளலாம்'* என்றான்.

★ ★ ★

அண்மையில் சிறீலங்காவின் மலையகப்பகுதியில் உள்ள ஓர் விகாரையில் ஒரு பதாகை தொங்கவிடப்பட்டிருந்தது. அதில்

'வடக்கில் யுத்தம் செய்யும் வீரர்களுக்காக இரத்ததானம் செய்வோம்'

இப்படிக் கூறப்பட்டிருந்தது.

சரித்திர காலம் முதற்கொண்டே வீரர்கள் எனப்படுபவர்கள் வெற்றி பெறுபவர்கள்தான் எனச் சொல்லப்பட்டு வருகிறது. அந்தச் சரித்திர வாக்கின் படியே பார்த்தோமானால் வடக்கிலே வீரர்களாக தற்போது இருப்பது விடுதலைப் புலிகள் அமைப்பினர்தான். சரி, அப்படியானால் அந்த பதாகையின் மூலம் மக்களை அழைத்திருப்பது விடுதலைப் புலிகளுக்கு இரத்தம் வழங்கத்தானோ என அங்கிருந்தவர் ஒருவர் கூறினார்.

★ ★ ★

அண்மையில் T.N.L தொலைக்காட்சியில் மக்கள் குரல் எனும் ஒரு நிகழ்ச்சி இடம்பெற்றது. அதில் கலந்துகொண்ட பேராசிரியர் நளின் டி சில்வா, வடக்கிலே யுத்தம் ஒன்றில்லை. அங்கு உள்ளதெல்லாம் ஆயுதமேந்திய குழப்பவாதிகளின் சிறுகுழப்பம் மட்டும்தான் எனக்கூறினார். அவர் இப்படிக் கூறியதன் அர்த்தம் விடுதலைப் புலிகளை இராணுவத்தால் ஒடுக்கமுடியாமல் போனது என்ற கோபத்தினால் இருக்கலாம். இப்படி இவர் சொல்லி வாய் மூடவில்லை. சிறீலங்கா இராணுவம் ஆனையிறவுப் படைத்தளத்தை தந்திர ரீதியாக கைவிட்டுவிட்டது. அடுத்தநாள், 126 படை வீரர்களின் உடல்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

யுத்தம் இல்லாத ஒரு பகுதியில் எப்படி இந்தப் படையினர் இறந்து போனார்கள் என்பது எமக்குப் புரியவேயில்லை. அந்தச் சந்தேகத்தை பேராசிரியர் தீர்த்து வைப்பாரானால் எவ்வளவு நன்மையாக இருக்கும்.

★ ★ ★

## இது ஒரு அரசியல் யுத்தம்

இது சாதாரண ஒரு யுத்தமென்றால் இவ்வளவு காலத்திற்குள் இதனை முடித்திருக்கலாம். ஆனால் இதுவோ அரசியல் யுத்தம். இந்த யுத்தத்தினால் ஏராளமான இளைஞர்கள் இறந்துகொண்டிருக்கின்றார்கள். எத்தனை ஆயிரம் பேர் இறந்தார்களோ? எத்தனை இளைஞர்களின் கண்கள், கைகள், கால்கள் இழக்கப்பட்டனவோ? ஆனையிறவில் கடைசி நேரம் வரையில் பின்வாங்குவதற்கான உத்தரவிற்காக காத்திருந்தார்கள். இப்போது நான் எறிகணையின் தாக்குதலால் காயமடைந்து சிகிச்சை பெறுகிறேன். இந்த யுத்தத்திற்கு எப்போது முடிவு வருமோ?

பளை படைத்தளத்தில் காயமடைந்து கொழும்பில் சிகிச்சை பெற்றுவரும் சிப்பாய் ஒருவர்.

★ ★ ★

இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் திறமையுள்ள தளபதிகள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குப் பலமில்லை. ஆனால் பலமுள்ள, அதிகாரத்திலுள்ள சிலருக்கு மூளையில்லை. அதேபோல்த்தான் காயமடைந்த படையினரை வைத்தியசாலைக்குக் கொண்டுவருவதற்கு ஒருவழிமுறை அங்கில்லை. இறந்த பின்னர் கூட உடல்களைக் கொண்டுவருவதில்லை. இப்படியான நிலைப்பாடுகளின் மத்தியில், இளைஞர்கள் படையில் சேருவதற்கு விரும்பமாட்டார்கள். இறந்தபின் எனது உடலைக்கூட வீட்டில் உள்ளவர்களால் பார்க்கமுடியாமல் போகுமே என அவர்கள் நினைக்கிறார்கள். இராணுவத்தில் எங்கள் படையினருக்கு காயம் ஏற்பட்டால் அவர்களை கொண்டு செல்லச் சரியான வாகனங்கள் இல்லை. உழவு இயந்திரங்களில் போட்டுக் கொண்டு செல்கிறார்கள். ஆனால் இராணுவத்தின் உயரதிகாரிகளின் குழந்தைகளைப் பாடசாலைகளுக்குக் கொண்டு செல்வதற்கும் அவர்களது நோனாக்களை கடைவீதிக்கு அழைத்துச் செல்லவும், ஏன் 'கோல் பேஸ்' போவதற்குக் கூட வாகனங்கள் உள்ளன. ஆனால் இதையெல்லாம் அம்மணியிடம் சொன்னால் எனது வேலை கூடப் போய்விடுமே.

பளை படைத்தளத்தில் காயமடைந்து கொழும்பில் சிகிச்சை பெற்றுவரும் சிப்பாய் ஒருவர்.

★ ★ ★

எனக்கு இப்போது வயது 19. வேலைக்கு வந்து ஒன்பது மாதங்கள்தான். எனது கிராமத்தில் நான் உதைபந்தாட்ட அணியில் விளையாடியிருக்கிறேன். இராணுவத்தில் சேருவதற்கு அந்த சான்றிதழ்தான் உதவியது. இப்போது கால் இல்லாத நிலையில் என்ன உதைபந்தாட்டத்தை விளையாடுவது...! அப்பா பாம்பு கடித்து இறந்து போனார். அம்மாவும் அக்காவும் இரண்டு தம்பிகளும், தங்கையும்தான் இருக்கிறார்கள். வீட்டிலே வேலைக்குச் சென்ற ஒரே ஒரு ஆள் நான்தான். அம்மாவும் அக்காவும் விவசாயம் செய்கின்றனர். சிறுவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது எனது கண்ணுக்காகவும் காலுக்காகவும் ஒரு இலட்சம் வரை தருவார்கள். அதில் குடும்பப்பிரச்சினைக்கு எதாவது ஒரு வழியைத் தேடிக்குடுத்துவிட்டு சாலியபுர ஊனமுற்றோர் முகாமில் இருந்து ஏதாவது உதவி செய்யலாம் என்ற எண்ணத்தில்தான் இருக்கிறேன்.

யாழ்ப்பாணத்தைப் புலிகளுக்கு பரிசு கொடுப்பதுபோல் கொடுப்பதானால், நாம் கைகளை, கால்களை, கண்களை ஏன் உயிரையே கூட இழந்ததன் அர்த்தம் என்ன? இது அரசியல்வாதிகள் எமது வாழ்க்கையுடன் விளையாடும் சதுரங்கம் என்பது தெரியவரும்போது, நாம் எவ்வளவு தூரம் முட்டாள்களாக இருக்கின்றோம் என்று மனவேதனை அடைகிறேன். முதலே இப்படித் தெரிந்திருந்தால் இந்த இராணுவத்தின் பக்கம் கூட திரும்பிப் பார்த்திருக்க மாட்டேன்.

*– சிப்பாய்*

★ ★ ★

எங்கள் இராணுவ வரலாற்றை திரும்பிப்பார்த்தோமானால் யாழ்ப்பாணம் இழக்கப்படுவதில் புதுமையெதுவும் இல்லை என்பது தெரியவரும். பூநகரி, ஜானகபுர தோல்விகளுக்கு பொறுப்பானவரான ஜெனரல் றொகான் தளுவத்தை இன்றும் யுத்தத்திற்கு தலைமைத்துவத்தை தருகின்றார். அன்று முப்படைத்தளபதியாக இருந்த சிசில் வைத்தியரட்ணா அந்தத் தோல்விக்கான காரணத்தை அறியும் விசாரணைகளின் முடிவினை ஜனாதிபதி டி.பி.வியஜதுங்காவிடம் ஒப்படைத்தபோது அதில், ஜெனரல் றொகான் தளுவத்தையை இராணுவத்தில் இருந்து வெளியேற்றுமாறு கூறியிருந்தார். ஆனால் இன்றும் கூட அவர்தான் உயர் மட்டத்தில் இருந்து உத்தரவுகளை வழங்குகிறார். அப்படியானால் தலைமைத்துவம் என்பது எங்கே? அதேபோன்றுதான் பல தோல்விகளுக்கும் காரணமா்ன தளபதிகளை முன்னணிக்கு கொண்டு வந்து திறமையான தளபதிகளை முடக்கி வைத்துள்ளார்கள். இதுதான் உண்மை நிலை. அப்படியானால் எப்படி யுத்தம் செய்வது. இப்போது முப்படைத் தளபதி கூறுகிறார், விடுதலைப் புலிகளின் தாக்குதல் திறன் அதிகமாம். இந்தக்கதையின் அர்த்தம் என்ன? அப்படியானால் எங்கள் இராணுவத் தலைவர்கள் கோடி கோடியாகச் செலவழித்து வாங்கிய ஆயுதம் எல்லாம் எங்கே? அவற்றை மோசடி செய்துவிட்டார்கள் என்றுதானே எண்ணத்தோன்றுகின்றது. அப்படி இல்லையென்றாலும் கூட மோசடி செய்யவேண்டும் என்பதற்காகவே அவசியமற்றதை கொண்டுவந்திருக்கின்றார்கள். இப்போது நாங்கள் மீண்டும் பூச்சியத்தில் இருந்து தொடங்கவேண்டியுள்ளது. இருந்தபோதிலும் வரலாற்றை மறந்து நிற்கும் எமக்கு எதிர்காலம் இருக்குமா என்பதும் சந்தேகம்தான்.

*– கொமாண்டோ படையணியின் உயரதிகாரி ஒருவர்.*

★ ★ ★

வெற்றியின் மூலம் கௌரவத்தைப் பெற்றுக் கொண்ட ரத்வத்தை தோல்விக்கும் பொறுப்பேற்க வேண்டும்.

வடக்கில் தற்போது இராணுவம் அடைந்துவரும் தோல்விகளுக்கான முழுப்பொறுப்பையும் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ரத்வத்தையே ஏற்றுக்கொள்ள வேண்டுமென அரசாங்கத்தின் உயர்மட்ட அமைச்சர்கள் தீர்மானம் ஒன்றினை கொண்டுவர உள்ளதாக கூறப்படுகிறது. அன்று வடக்கின் வெற்றிகளை தனது வெற்றியாக பத்திரிகைகள் மூலமாகவும் மற்றும் பல விற் செய்தியூடகங்களின் வாயிலாகவும் கோரி, அதன் மூலம் இலாபமடைந்த பிரதிப்பாதுகாப்பு அமைச்சர், இப்போது யுத்தத்தில் தோல்விகள் ஏற்பட்டு வரும்வேளையில், மௌனமாக இருப்பது பலரதும் ஆத்திரத்தை கிளப்பி விட்டுள்ளது. முன்னர் ஒரு தடவை வடக்கின் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வையே காணவேண்டும் என பல அமைச்சர்களும் கூறிய போது, பாதுகாப்புப் பிரதி அமைச்சர் மாத்திரம் அங்குள்ள பிரச்சினையை யுத்தத்தின் மூலம்தான் தீர்துக்கொள்ள வேண்டும் எனக்கூறினார். இன்று அதற்கான முழுப்பொறுப்பையும் அவர்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என அரசாங்க அமைச்சர்கள் கூறுகின்றனர்.

**- மாந்தன் -**

**INDO EURO MONEY EXCHANGE (SELVAM) DENMARK**

உங்கள் இலங்கை, இந்திய பணமாற்று தேவைகளை உடனுக்கு உடன் பூர்த்திசெய்ய டென்மார்க்கில் நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கை -நாணயம் மிக்க ஒரே ஸ்தாபனம் I.E. - M.E.

கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, சென்னை, திருச்சி ஆகிய இடங்களுக்கு உடனுக்குடன் கொடுக்கலாம். கனடா, லண்டன், சுவிஸ், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருக்கும் பணத்தை உடன் பெற்றுக்கொள்ளலாம்.





தொடர்புகளுக்கு:

செல்வம் (டென்மார்க்)
T.P: 96 60 09 55 Mobil: 22 64 22 30
Ikast, Herning.

குட்டிப்பாலி (கனடா)
T.P: 416 - 242 5148

Pub.

# சிங்களத்தின் தேசபிதாவும் தமிழ்தேசத்தின் சுதந்திர வேட்கையும்

தமிழ்த் தேசியத்தின் கலாச்சாரத் தலைநகரை விடுதலைப் புலிகளின் அணிகள் மிகமிக சமீபமாக நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளை அதன் தாக்கம் சிறீலங்காவின் அரசியல் களத்திலும் எதிரொலித்துக் கொண்டுதான் இருக்கின்றது. தனது அதி பயங்கரமான தோல்வியை மறைப்பதற்காக சிறீலங்கா அரசு கடுமையான வாய்ப்பூட்டுச் சட்டங்களைப் பிரகடனப்படுத்தியதாலும் சிங்கள மக்கள் மத்தியில் தாம் தமிழ்த் தேசியத்திடம் இந்த ஆக்கிரமிப்புப் போரில் வெல்லமுடியாது என்ற மனோபாவம் தலையெடுத்துவிட்டதையும் சிறீலங்காவின் அரசியல் களத்தோடு அலசும் போது புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. சிங்கள தேசம் இந்த ஆட்டத்தினைத் தொடக்கி பல தசாப்தங்களானாலும் தற்பொழுது தான் தொடக்கிய அந்த ஆட்டத்திற்கு தமிழ்த் தேசியம் முடிவுரை எழுதும் காலகட்டத்தினையும் அவர்கள் வரலாற்றில் பதிவாக்கக்கூடிய சூழ்நிலைகள் யதார்த்தமாகி விட்டன. சிங்களதேசம், தன் தேசபிதா என வர்ணித்துக்கொள்ளும் டி.எஸ். சேனநாயக்கா (இவர்தான் சிறீலங்காவின் முதலாவது பிரதம மந்திரி) தொடங்கி டட்லி சேனநாயக்கா, சேர் ஜோன் கொத்தலாவல, எஸ்.டபியூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, தஹாநாயக்கா, சிறீமாவோ பண்டாரநாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாசா, டி.பி. விஜயதுங்க, ரணில் விக்கிரமசிங்க, சந்திரிகா குமாரதுங்க ஆகிய குறிப்பிட்ட அரசியல் தலைகளை தனது தேசத்தில் ஆட்சியில் அமர்த்திப் பார்த்துள்ளது. இந்தத் தலைகளில் பெரும்பாலானோர் தமிழ்த் தேசியத்திற்குச் செய்ததெல்லாம் அராஜக நடவடிக்கைகள்தான். சிறீலங்காவின் தேசபிதா என வர்ணிக்கப்படும் சேனநாயக்கா தலைமையிலான அரசுதான் பிராஜா உரிமைச் சட்டத்தினை

**பேம்பி**

சிறீலங்காவுக்குக் கொண்டுவந்ததுடன், மலையகத் தமிழர்களுடைய பிரதிநிதித்துவத்தைப் பறித்தது. சேனநாயக்கா காலத்தில் தான் சிறீலங்காவின் முதலாவது பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த ஏழு மலையகத் தமிழர்களின் பிரதிநிதித்துவம் பறிக்கப்பட்டது. சேனநாயக்காவின் இந்த குள்ள மூளையைக் கண்டுதான் தந்தை செல்வா 1949ம் ஆண்டு தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார். இது வரலாற்றுப் பதிவான விடயம். மலையகத் தமிழர்களின் உரிமையில் கைவைத்த சிங்களப் பேரினவாதம் எமது உரிமைகளையும் நசுக்கும் என்பது தந்தை செல்வாவுக்கு உள்ளூர புரிந்ததால்தான் அவர் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார். அக்கட்சியை ஆரம்பித்தபோது தந்தை செல்வா கருத்துத்தெரிவித்தபோது 'ஒரு இனம் வாழ ஒரு தாயகம் வேண்டும், அவ் இனத்தின் சொந்த நிலம் பாதுகாக்கப்படவேண்டும்' என்று கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது.


ஆனால் அதன்பின்னர் வந்த பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டத்தினைக் கொண்டுவந்து தமிழ்த் தேசியத்தினை ஒடுக்குவதற்காக என்னென்ன கைங்கரியங்களைச் செய்தார் என்பதை நாம் பட்டியலிட்டால் அது 'அரைத்த மாவை அரைப்பதற்கே சமனாகும்'. ஏனெனில் பண்டாரநாயக்கா தமிழினத்திற்குச் செய்த பெரும் ஒடுக்குமுறை பற்றி ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளோன். இவ் உதாரணங்களை இங்கு சுட்டிக்காட்டுவது ஒரே ஒரு விடயத்தைத் தெளிவாக்கிக்கொள்வதற்குத்தான். அதாவது தமிழ்த் தேசியத்தின் வாழ்வியல் உரிமையில் சிறீலங்காவின் இரு பேரினவாதக் கட்சிகளான ஐக்கியதேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் பெரும் நசுக்குதல்களையே முனைப்புடன் செய்துவந்திருக்கின்றன என்பதைத்தான்.

ஒடுக்குமுறைக்கு உள்ளான தமிழினம் தமது சுதந்திரம்பற்றிச் சிந்தித்தபோது அதனை 'பயங்கரவாதம்' எனக் கொக்கரித்த சிறீலங்கா அரசுகள் தமிழர்களின் சுதந்திரவேட்கையை முறையிலேயே கிள்ளிவிடத் துடித்தார்கள். ஆனால் இன்று தமிழ்த் தேசியத்தின் சுதந்திரம் விழுதுகள் பரப்பிப் பெரும் விருட்சமாகியுள்ளது யதார்த்தம். பயங்கரவாதத்தை முற்றாகத் துடைத்தெறியவேண்டும் என்ற ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆணையுடன் 1978ம் ஆண்டு சிறீலங்காவின் பிரிகேடியர் ரி.ஐ. வீரதுங்க யாழ்ப்பாணத்திற்குச் சென்றார். 1500 சிறீலங்கா சிப்பாய்களும் யாழ்ப்பாணத்தைச் சுடுகாடாக்குவதற்காக அவருடன் சென்றார்கள். அதன்பின்னர்தான் யாழ். வீதிகளில் அப்பாவித் தமிழ் இளைஞர்களது சடலங்கள் கொடூரமான சித்திரவதை அடையாளங்களுடன் வீசி எறியப்பட்டன. பிரிகேடியர் வீரதுங்க அன்று தொடக்கி வைத்த வெறித்தனமான ஆட்டம் தமிழர் சேனைகளால் இன்று ஒட்டுமொத்தமாக முடிவுக்குக் கொண்டுவரும் கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கின்றது. தமிழ்த் தேசியத்தையே ஒடுக்கிவிடுகிறேன் என மார்தட்டிக்கொண்டு யாழ்ப்பாணத்திற்குள் நுழைந்த வீரதுங்காவின் வாரிசுகள்தான் இன்று யாழ்ப்பாணத்தைவிட்டு தப்பிச் செல்வது எவ்வாறென மண்டையைக் குழப்பிக்கொள்கிறார்கள். எவன் காலில் விழுந்து தமிழ்த் தேசியத் திட்மிருந்து தப்பிக்கொள்ளலாம் எனவும் எண்ணிக் கொள்கிறார்கள். நீதி என்ன என்பது சிங்கள தேசத்திற்குத் தெரியாமல் தாம் நடாத்திய வெறியாட்டத்தின் விளைவுதான் இன்று எழுந்துள்ள இந்த நிலைமை என்பதை இன்னும் தான் சிங்கள தேசத்தின் பெரும்பாலான மக்கள் உணரத் தலைப்படவில்லையோ என்ற ஐயமும் எழுகின்றது. இரு பெரும் பேரினவாதக் கட்சிகளையே தமது அரசி

> **'ஒரு இனம் வாழ ஒரு தாயகம் வேண்டும், அவ் இனத்தின் சொந்த நிலம் பாதுகாக்கப்பட வேண்டும்' என்று கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது.**

யல் கொலுவில் மாற்றி மாற்றி வைத்து அழகு பார்த்த இத் தேசத்தின் மக்கள் அதன் பிரதிபலனாக பல அவலங்களைச் சந்தித்தபோதிலும் இன்னமும் தமிழ்த் தேசியத்தினை இவ்விரு கட்சிகளும் ஒடுக்குவதில் வெற்றி கண்டுவிடும் என்ற நப்பாசையிலும் இருக்காமல் இல்லை. ஆனால் இது வெறும் நப்பாசை என்பது அவர்களில் எத்தனைபேருக்குப் புரியும்.

# மரண அறிவித்தல்



பிறப்பு: 24.10.1953

இறப்பு: 14.05.2000

## திரு. ஐயாத்துரை சக்திக்குமரன்

சங்கானை கூடத்தம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், லண்டன் லூசியத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு. ஐயாத்துரை சக்திக்குமரன் (குமரன்) கடந்த 14.05.2000 ஞாயிற்றுக்கிழமை மாலை லண்டனில் காலமானார்.

இவர் திருமதி வனஜாவின் அன்புக் கணவரும், செல்விகள் நேருஜா, சஸ்மிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வம் என அழைக்கப்படும் காலம்சென்ற ஐயாத்துரை, காலம் சென்ற பரமேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் சங்கானையைச் சேர்ந்த திரு. திருமதி கந்தையா ஆகியோரின் விருப்புக்குரிய மருமகனும், சக்திக்குகன் (லண்டன்), சரா என அழைக்கப்படும் சத்திச்சடாச்சரன் (ஜேர்மனி), புனிதரேகா (இந்தியா), ரவிரேகா (இலங்கை), சக்திச்சிவகிரிபவன் (பாரிஸ்), ஜெனகரேகா (பாரிஸ்), சத்திக்குருபரன் (நோர்வே), மீனலோஜினி (லண்டன்), சத்திக்குலதிலகன் (பாரிஸ்), ஆகியோரின் நேசமிகு சகோதரனும், ஜிவரஞ்சினி (லண்டன்), ராகினி (ஜேர்மனி), விவேகானந்தன் (லண்டன்), பஞ்சநாதன் (இலங்கை), விஜிதா (பாரிஸ்), சிவகுமார் (பாரிஸ்), சற்குணராஜா (கனடா), பூரணம் (பாரிஸ்), றதி (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனனும், சத்தியமூர்த்தி, விக்னேஸ்வரன் ஆகியோரின் சகலனும், அமரத்துவடைந்த பொன்னையா, திரு. திருமதி சோதிப்பிள்ளை ஆகியோரின் பேரனும், கனடாவில் வசிப்பவர்களான திருமதிகள் பகவதி, மகேஸ்வரி, ராணி, தேவி, இந்திரா, ஆகியோரின் பெறாமகனும், இராசரத்தினம் (இலங்கை), செல்வரத்தினம் (கனடா), கனகரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் உரிமை மருமகனும் ஆவார்.

அன்னாரது நல்லடக்கச் சடங்குகளும் இறுதியாத்திரையும் எதிர்வரும் 21.05.2000 ஞாயிறன்று நண்பகல் 11.00 -12.30 மணிக்கு South London Crematorium, Rowan Road, Streatham, SW16 5JG என்னும் இடத்தில் நடைபெறும்

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*தகவல் தருவோர்:*

*குகன் - 0208 690 35 11 (லண்டன்)*
*சரா - 2131150767 (ஜேர்மனி)*
*கிரி - 01 48 41 62 48 (பாரிஸ்)*
*குருபரன் - 0208 690 50 53*
*திலகன் - 06 13 12 80 54 (பாரிஸ்)*

Pub Fr

# நிலக்கரி இறக்குமதி ஊழல் வழக்கில் இருந்து ஜெயலலிதாவை விடுவித்தது செல்லாது!

## – உச்ச நீதிமன்றம் தீர்ப்பு –

1992-93ம் ஆண்டில் ஜெயலலிதா முதல் — அமைச்சராக இருந்தபோது தமிழ்நாட்டில் உள்ள அனல்மின் நிலையங்களுக்கு இந்தோனேசியா நாட்டில் இருந்து நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டது.

'இந்தோனேசியநாட்டு நிலக்கரி தரம் வாய்ந்தது அல்ல, அதற்குப் பதிலாக சிங்கப்பூரைச் சேர்ந்த ஒரு நிறுவனம் தரமான நிலக்கரியைத் தரத் தயாராக இருக்கிறது அதை வாங்கலாம்' என்று பொதுப் பணித்துறைச் செயலாளர், பரிந்துரை செய்ததாகவும், அதை நிராகரித்துவிட்டு, தரம் குறைந்த இந்தோனேசியா நாட்டு நிலக்கரியை இறக்குமதி செய்ததாகவும் ஜெயலலிதா மீது புகார் கூறப்பட்டது.

இதனால் தமிழ்நாடு அரசுக்கு ரூபா 3 கோடி வரை இழப்பு ஏற்பட்டது என ஜெயலலிதா, முன்னாள் அமைச்சர்கள் நெடுஞ்செழியன், கண்ணப்பன், அதிகாரிகள் டி.வி. வெங்கட்ராமன், ஹரிபாஸ்கர் உள்பட 11 பேர் மீது சென்னை 2வது தனி நீதிமன்றத்தின் தமிழக அரசு சார்பில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கில் ஜெயலலிதா, நெடுஞ்செழியன் ஆகியோர் மீது கூறப்பட்டு இருக்கும் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லை என்று இருவரையும் தனி நீதிமன்றம் விடுவித்தது. மற்ற 9 பேர்கள் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் 16ம் திகதி தனி நீதிமன்றம் பிறப்பித்த இந்த உத்தரவை எதிர்த்து பின்னர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு மனுத் தாக்கல் செய்தது. அந்த மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்ததுடன் தனி நீதிமன்றம் ஜெயலலிதாவையும், நெடுஞ்செழியனையும் விடுவித்தது சரிதான் என்று உறுதி செய்தது. இதனால் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்தது. இதனை விசாரணை செய்த நீதிமன்றம் செல்லாது பொதுப்பணித்துறைச் செயலாளரின் எச்சரிக்கையை மீறியும் நிலக்கரி இறக்குமதிக்கு ஜெயலலிதா அனுமதி கொடுத்து இருக்கிறார். அப்படிப்பட்ட நேரத்தில் மாநில நிதி நிலையில் மறைமுக விளைவுகளை ஏற்படுத்தும் ஒரு விவகாரம் அவரது கவனத்துக்கு வராமல் அதில் எப்படி அவர் முடிவு செய்து இருக்க இயலும்? பல்வேறு ஆதாரங்களையும், விளைவுகளையும் இந்த நேரத்தில் தனிக்கோர்ட்டு சீர்தூக்கிப் பார்க்கவேண்டிய இடம் அல்ல.

குற்றச்சாட்டுக்கு ஆளாகி இருப்பவர்கள் மீது பொலிஸ் அறிக்கையிலும், ஆவணங்களிலும் ஆதாரங்கள் இருக்கிறதா அல்லது இல்லையா, அவர்கள் குற்றம் செய்தார்களா என்பதைப் பார்த்திருக்க வேண்டும். எனவே தனி நீதிமன்றமும் சென்னை உயர்நீதிமன்றமும் இந்த வழக்கில் வழங்கிய உத்தரவுகள் தள்ளுபடி செய்யப்படுகிறன. இந்த வழக்கில் மீண்டும் ஜெயலலிதாவை விசாரிக்கவும் உத்தரவிடப்படுகிறது.' மேற்கண்டாவறு தீர்ப்பில் கூறப்பட்டு உள்ளது.

# சசிகலாவின் கணவருக்கு ஜெயலலிதா எச்சரிக்கை

சசிகலாவின் கணவர் நடராஜனுக்கு ஜெயலலிதா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், என் இல்லத்திலிருந்து பத்தாண்டுகளுக்கு முன்பு வெளியே தூக்கி எறியப்பட்ட ஒரு நபர் அவ்வப்போது அ.தி.மு.க. விசயத்தில் மூக்கை நீட்டுகிறார். மூக்கை நீட்டும் போதெல்லாம் நான் முழுவதுமாக அறுத்து விடுகிறேன். ஆனாலும் அந்த நபர் பாடம் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை.

நாய் வாலை நிமிர்த்த முடியாது என்பதற்கு உதாரணமாகி அவ்வப்போது கட்டுக்கதைகளை இட்டுக்கட்டுகிறார். எருமை மாட்டின் மீது பெய்த மழையாக என்ன சொன்னாலும் அந்த நபருக்கு சொரணை என்பது அறவே இல்லாமல் போய் விட்டது. எம்.ஜி. ஆரிடம் எனக்காகப் பரிந்து பேசியதாக இந்த நபர் பொய் மூட்டையாகிப் புலம்புகிறார். விட்டால் இவரைக் கேட்டுத்தான் கடல் அலைகளும் கரையோரம் வருகிறது என்று வரம்பின்றி உளறுவார் போலிருக்கிறது.

போகிற போக்கைப் பார்த்தால் எம்ஜி.ஆரிடத்தில் என்னை அறிமுகப்படுத்தியதே இவர்தான் என்றும், 1964-இல் ஆயிரத்தில் ஒருவன் படத்தில் நடிக்க இவர்தான் காரணம் என்று சொன்னாலும் சொல்வார் போலிருக்கிறது. 'பைத்தியக்காரன் பத்தும் சொல்வான் போகட்டும் விட்டு விடு' என்று இந்த நபரை இனி மேலும் விட முடியாது. பாடம் புகட்டியே ஆகவேண்டும். இந்தப் பொல்லாத மனிதரின் கேள்விக்கு சசிகலா பதில் சொல்ல மாட்டார். அவர் பண்பாளர் குடும்பப்பெண்.

நான் ஒரு மாபெரும் அரசியல் கட்சியின் தலைவர். இவற்றுக்கெல்லாம் பதில் சொல்லாமல் சும்மா இருக்க முடியாது. கோமாளிகளை வைக்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டிய பொறுப்பு எனக்கு உள்ளது. இந்த நபர் ஒரு நாளும் எம்.ஜி. ஆரை சந்தித்ததே கிடையாது. அரசு ஊழியராக இருந்ததால் அரசு விழாக்களில் முதல்வர் எம்.ஜி.ஆரைப் பார்த்திருக்கலாமே தவிர, தனிப்பட்ட முறையில் தனியாக என்றைக்குமே சந்தித்தது இல்லை என தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியச் செய்திகள்

## சிறீலங்காச் சிறையில் வாடும் தமிழ்நாட்டு மீனவர்: மீட்கக் கோரி முதல்வருக்குக்கடிதம்

சிறீலங்காச் சிறையில் வாடும் தமிழ்நாட்டு மீனவர்களில் ஒருவர் கடிதம் மூலம் தனது தந்தைக்குத் தனது நிலையை எழுதி மீட்கக் கோரி முதல்வர் கருணாநிதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்று, சிறீலங்காப் படையினரால் கைது செய்து கொழும்பு நகரில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டு மீனவர் இராமநாதன் தனது தந்தைக்குக் கடிதம் எழுதியுள்ளார். அதில், சிறீலங்காவில் நடந்துவரும் போரினால் எங்கள் நிலைமை மேலும் மோசமாகி வருகிறது. கொழும்புச் சிறையில் எந்த வசதியும் இல்லை. உணவும் கொடுப்பதில்லை. ஏற்கனவே ராஜா என்ற மீனவர் இறந்தது போல நானும் செத்து விடுவேன்.

கடந்த 4 நாட்களுக்கு முன்பு ரத்த வாந்தி எடுத்தேன். கொழும்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறேன். உடனடியாக எங்களை இங்கிருந்து மீட்காவிட்டால் இங்கேயே எல்லோரும் செத்து விடுவோம். இந்திய அரசிடம் சொல்லி எங்களை மீட்க நடவடிக்கை எடுக்கும்படி தெரியப்படுத்துங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார், இக் கடிதம் தமிழ்நாடு முதல்வருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## சிறீலங்கா கடற்படை தாக்குதல் மீனவர் படுகாயம்



சிறீலங்காக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்தும் தாக்குதல் நடாத்தி வருவது தெரிந்ததே. இந்தியக் கடற் பிரதேசங்களுக்குள் அத்து மீறி நுழைந்து கடந்த புதனன்று படையினர் நடாத்திய தாக்குதலில் மேலும் ஒரு மீனவர் படுகாயமடைந்துள்ளார். இதில் காயமடைந்த மீனவர் ஏனைய மீனவர்களால் காப்பாற்றப்பட்டு மதுரையில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். இவர் தன் மீது சிறீலங்காப் படையினர் எவ்வாறு தாக்குதல் நடாத்தினார்கள் என பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளார்.

அதில், கடலில் மீன் பிடித்துக்கொண்டு இருந்தபோது துப்பாக்கி ஏந்திய சிறீலங்காக் கடற்படையினர் படகில் வந்தனர். அவர்கள் எங்கள் படகின் அருகே வந்து, எங்களைக் கடலில் குதிக்கச் சொன்னார்கள். நாங்களும் அவர்கள் சொன்னபடி கடலில் குதித்தோம். பிறகு கடலில் மூழ்கி எழும்பும்படி கூறினார்கள்.

நாங்கள் அதன்படி மூழ்கி எழுந்தோம். பிறகு 4 பேரையும் எங்கள் படகில் ஏறச்சொன்னார்கள். துப்பாக்கியைக் காட்டியபடி சொன்னதால் அவர்கள் சொல்லியபடியே நாங்கள் பயத்தில் நடுங்கிக்கொண்டு செய்தோம். படகில் ஏறிய உடன் எங்களை படகிலேயே ஓடும்படி மிரட்டினார்கள். அதன்படி நாங்கள் ஓடினோம்.

பிறகு 4 பேரையும் கைகளை தலைக்குமேல் தூக்கும்படி கனத்தகுரலில் கூறினார்கள். நாங்கள் கையைத் தூக்கிய உடன் துப்பாக்கி வைத்து இருந்த ஒருவன் என் மார்பைப் பார்த்துச் சுட்டான். சுட்டதும் அவர்கள் இராணுவப் படகில் சென்றுவிட்டனர். நான் மயங்கி விழுந்துவிட்டேன். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. மயக்கம் தெளிந்து பார்த்த போது நான் மதுரை மருத்துவ மனையில் இருப்பதாகக் கூறினார்கள் எனத் தெரிவித்தார்.

## இந்திய சிறையிலிருந்து 21 பாகிஸ்தான் மீனவர்கள் விடுதலை!

இந்திய சிறையிலிருந்த பாகிஸ்தான் மீனவர்கள் 21 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 1999 மார்ச் மாதம் கட்ச் பகுதியில் கைது செய்யப்பட்டவர்கள்.

கடந்த வாரம் 20 இந்திய மீனவர்கள் பாகிஸ்தான் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டதையடுத்து இந்தியா மேலும் 21 பாகிஸ்தானிய மீனவர்களை விடுதலை செய்தது.

பாரிஸ் லாசப்பலில்
KTC CHANGE
193 rue du Fg.St.Denis, 75010 Paris
M°: Gare du Nord/La Chapelle - Tel: 42 05 41 36
★ எந்தவித கொமிசனும் இல்லாமல் உள்நாட்டு – வெளிநாட்டு நாணயங்களை மாற்றீடு செய்வதற்கும்
★ தங்க நாணயங்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்வதற்கும்
நங்கையர் மனங்கவரும் நல்ல தங்க நகைகளை நம்பிக்கையோடு ரெடிமேட்டாகவும் செய்து பெற்றுக்கொள்ள
கே.ரி.சி. ஜூவல்ஸ்
Pub.

# 100வது கோடி இந்தியக் குழந்தை பிறந்தது ஐ.நா. 2 இலட்சம் நிதி அன்பளிப்பு

(12.05.2000)

இந்தியாவின் மக்கள் தொகை நேற்று 100 கோடியை எட்டியது. நேற்று இந்தியாவின் 100வது கோடி குழந்தை டெல்லியில் பிறந்தது. அந்தக் குழந்தைக்கு ஆஸ்தா எனப் பெயரிடப்பட்டு உள்ளது. இந்தக்குழந்தையின் கல்விச் செலவுக்காக ஐ.நா. மக்கள் தொகை நிதியம் ரூபா 2 இலட்சம் வழங்கி உள்ளது. இந்தத் தகவலை மத்திய மந்திரி சுசித்ரா மகாஜன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மக்கள் தொகை நேற்று 100 கோடியைத் தாண்டியதையொட்டி பிரதமர் வாஜ்பாய் நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில்,

நாட்டின் மக்கள் தொகை 100 கோடியை எட்டியுள்ளது. மக்கள் தொகை அளவுக்கு அதிகமாக அதிகரித்து உள்ளதால் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. மக்கள் தொகை தொடர்ந்து இதேபோல அதிகரித்தால் அனைவருக்கும் உணவு - தண்ணீர் வழங்க முடியாத சூழ்நிலை உருவாகும்.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தத் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டிய காலம் உருவாகி உள்ளது. நாடு முன்னேற - உலக அளவில் இந்தியா ஒரு மாபெரும் சக்தியாக உருவாக வேண்டுமென்றால், மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த



குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை மும்முரமாக செயல்ப் படுத்த வேண்டும்.

கடந்த 10 ஆண்டுகளில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் தோல்வி அடைந்துவிட்டதால் தான் மக்கள் தொகை அளவுக்கு அதிகமாக அதிகரித்துள்ளது. உலகின் மொத்த பரப்பளவில் இந்தியாவில் 24 சதவீத நிலம் உள்ளது. ஆனால் உலகின் மக்கள் தொகையில் 16 சதவீதம் பேர் இந்தியாவில் வசிக்கிறார்கள்.

இந்த நிலையில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதையும் குடும்ப நல திட்டத்தையும் தேசிய இயக்கமாக மாற்ற வேண்டும். இந்தத் தேசிய இயக்கத்தில் மத்திய - மாநில அரசுகளுடன் சேவை நிறுவனங்களும், தனியார் நிறுவனங்கள் மற்றும் அனைத்துக் குடிமக்களும் கலந்துகொள்ளவேண்டும். தேசிய மக்கள் தொகைக் கொள்கை அமுல்ப்படுத்துவதைக் கண்காணிக்க கமிசன் ஒன்று மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இதில் எனது தலைமையில் 100 உறுப்பினர்கள் இருப்பார்கள். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# அணுகுண்டு சோதனையால் வலுவான நாடு என அங்கீகாரம்! -வாஜ்பாய்-

போக்ரனில் அணுகுண்டு வெடித்து சோதனை நடந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வலுவான நாடு என்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இந்தியாவுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது என்று பிரதமர் வாஜ்பாய் கூறினார். போக்ரனில் அணுகுண்டு வெடித்து சோதனை நடைபெற்ற இரண்டாவது ஆண்டை நினைவுகூரும் வகையில் நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணி உறுப்பினர்கள் கூட்டத்தில் பேசுகையில் வாஜ்பாய் மேற்கண்டவாறு சொன்னார். 1998-ம் ஆண்டு போக்ரனில் அணு குண்டுச் சோதனை நடத்தியபோது உலக அரங்கிலும், உள்நாட்டிலும் கடும் விமர்சனங்கள் எழுந்தன. இரண்டு ஆண்டுகளில் நிலைமை மாறிவிட்டது. இன்று பெரும்பாலும் ஒட்டுமொத்த உலகமே நமது நடவடிக்கை சரியானது என்பதை உணர்ந்துகொண்டு விட்டன.

நாம் அணு குண்டுச் சோதனை மேற்கொண்டது தேசியப் பாதுகாப்பை வலுப்படுத்தவே. சில நாடுகள் நம் மீது பொருளாதாரத்தடை விதித்தன. தேசப் பாதுகாப்புக்காக எவ்விதமான சிரமங்களை எதிர்கொள்ளவும் மக்கள் அச்சம் கொள்ளவில்லை. பொருளாதாரத் தடையால் நம் மீது எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இந்தியா வலுவான நாடு என்ற அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டது என வாஜ்பாய் மேலும் தெரிவித்தார்.

# விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிப்பு

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை மத்திய அரச நீடித்துள்ளது. முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு மத்திய அரசு தடை விதித்தது.

இந்தத் தடை அவ்வப்போது நீடிக்கப்பட்டு வருகிறது. இத்தடை உத்தரவு முடிவடைவதையடுத்து விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடித்து மத்தி அரசு வெள்ளியன்று உத்தரவு பிறப்பித்தது.

வழக்கம் போல் இந்தத் தடை 2 ஆண்டுகள் நீடிக்கப்படும். என அறிவிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# நிரந்தரமான அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம்: இந்தியாவின் கொள்கை - ஜஸ்வந்த்சிங்

நிரந்தரமான அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் உருவாவதே இந்தியாவின் கொள்கை என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்த்சிங் கருத்துத் தெரிவித்துள்ளார். உலகம் முழுவதும் அணு ஆயுதத்தை ஒழிக்கவேண்டும். நிரந்தரமான அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் இந்தியாவின் கொள்கை. இதில் எந்த மாற்றமும் இல்லை. அணு ஆயுதம் தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்த இந்தியா தயாராக உள்ளது. அணு ஆயுதத்தை முதலில் பயன்படுத்துவதில்லை. அணு ஆயுதம் இல்லாத நாடு மீது இந்தியா முதலில் தாக்குதல் நடத்துவதில்லை என்று இந்தியா முடிவு செய்துள்ளது. அதே போல அணு ஆயுதம் வைத்துள்ள அனைத்து நாடுகளும் முதலில் தாக்குதல் நடத்துவதில்லை என்ற முடிவை எடுக்க வேண்டும். அந்த நாடுகள் அணு ஆயுதங்களைத் தங்கள் எல்லைக்குள் மட்டும் வைக்கவேண்டும். எல்லை தாண்டி வேறு நாடுகளில் குவிக்கக் கூடாது. அணு ஆயுத பரவல் ஒப்பந்தத்தை மீறி நேட்டோ நாடுகள் தங்களுக்குள் அணு ஆயுதங்களைப் பரிமாறிக் கொள்கின்றன. இது பற்றி விவாதிக்க முடியவில்லை. அணு ஆயுதம் இல்லாத நாடாக மாறி அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாது எனவும் தெரிவித்தார்.

# கொழும்பில் இருந்து சென்னை வந்த விமானத்தில் தங்கக் கட்டிகளுடன் நால்வர் கைது

சிறீலங்காவின் தலைநகரான கொழும்பு விமான நிலையத்தில் இருந்து சென்னை வந்த விமானத்தில் தங்கக் கட்டிகளைக் கடத்தி வந்த நால்வர் சுங்கப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். விமானத்தில் வந்திறங்கிய இந்த நால்வர் மீதும் சந்தேகம் கொண்ட பொலிசார் இவர்களைச் சோதனையிட்டபோது தமது ஆசன வாய்க்குள் நால்வரும் தங்கக்கட்டிகளை மறைத்து வந்தது கண்டு பிடிக்கப்பட்டது. 4.9 கிலோ நிறையுடைய 42 தங்கக் கட்டிகளில் இருவர் 12,12 தங்கக்கட்டிகளையும் மற்றைய இருவர் 9,9 தங்கக் கட்டிகளையும் மறைத்து எடுத்து வந்ததாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சுமார் 21 இலட்சம் ரூபா பெறுமதியான இத் தங்கக்கட்டிகளை மீட்ட பொலிசார் இவர்களைத் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

# மறியலில் ஈடுபட்ட 11,000 பேர் கைது

கடந்த வியாழனன்று தமிழகம் முழுவதிலும் நடைபெற்ற வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு பெருமளவிலான ஆதரவு கிடைக்கவில்லை எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. பேருந்து, தொடருந்து சேவைகளையும் நிறுத்துமாறு கோரி ஆர்ப்பாட்டம் நடாத்தியவர்கள் 11,000 பேர் தமிழகம் முழுவதிலும் இருந்து பொலிசாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர். பின்னர் இவர்கள் விசாரணை முடிவில் விடுவிக்கப்பட்டனர்.

# விபத்தில் 32 பயணிகள் பலி

மேற்கு வங்காள மாநிலத்தில் திங்கள் கிழமை இரவு ஏற்பட்ட பேருந்து விபத்தில் 20 பயணிகள் பலியாகி உள்ளனர். மேற்கு வங்காளம் மிட்னாபூரி மாவட்டத்தில் பன்சாகுரா என்ற ஊரிலிருந்து இரபாரா நோக்கி போய்க் கொண்டிருந்த பேருந்து தின்பூருக்கு அருகே உள்ள கால்வாயில் இறங்கியதால் விபத்து ஏற்பட்டு பேருந்தில் பயணம் செய்த 20 பயணிகள் அதே இடத்தில் பலியாயினர். 18 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இதே வேளை, ஆந்திரம் சாலை விபத்தில் 12 பேர் உயிரிழந்தனர். மெகபூப் நகர் மாவட்டம் சாகாபூர் கிராமத்தில் பாரவண்டியும், ஜீப் வண்டியும் மோதிக்கொண்டதில் 4 குழந்தைகள் உள்பட 12 பேர் உயிரிழந்தனர். 5 பேர் படுகாயமடைந்தனர்.

# ஜஸ்வந்த்-டிப்னிஸ் சந்திப்பு

கொழும்பிற்குப் பயணம் மேற்கொண்டிருந்த விமானப் படைத் தலைமைத் தளபதி டிப்னிஸ் கடந்த வெள்ளியன்று தனது ஐந்துநாள் பயணத்தை முடித்துக்கொண்டு டெல்லி திரும்பினார். உடனடியாக வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கைச் சந்தித்து இலங்கையின் இன்றைய நெருக்கடிகள் குறித்து விளக்கிக் கூறியுள்ளார்.

இதேவேளை பத்திரிகையாளர்கள் இவரது பயணம் குறித்துக் கேட்டபோது, தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கும் தனது பயணத்திற்கும் தொடர்பு ஏதும் இல்லை என்று டிப்னிஸ் தெரிவித்தார்.

# நேபாளத்துக்கு மீண்டும் இந்திய விமானசேவை

நேபாளத்துக்கு மீண்டும் விமானசேவையை இந்தியா தொடர உள்ளது. புதுடெல்லியில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கை நேபாள வெளியுறவுத்துறை அமைச்சர் சக்ரா பிரசாத் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஜஸ்வந்த், மீண்டும் நேபாளத்துக்கான விமான சேவை தொடங்க உள்ளதை இருநாட்டு விமானத் துறை அமைச்சர்கள் அறிவிப்பர் என்றார்.

கடந்த ஆண்டு இந்தியன் ஏர் லைன்ஸ் விமானம் நேபாளத் தலைநகர் காத்மண்டிலிருந்து கடத்தப்பட்டதையடுத்து இந்தியா தனது நேபாளத்துக்கான 19 விமான சேவைகளை நிறுத்தி வைத்திருந்தது. இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதையடுத்து தற்போது மீண்டும் விமான சேவை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.


| | |
|---|---|
| Colombo | 875sfr |
| Chennai | 950sfr |
| Singapore | 850sfr |
| Bangkok | 750sfr |
| Toronto | 444sfr |
| Newyork | 444sfr |
| London | 195sfr |
| Trichy | 950sfr |
| Bombay | 899sfr |

PERLYN TOURS

செல்ல நீங்கள் நாடவேண்டிய இடம்! விமான ப்பயணச்சீட்டு பெறுவோருக்கு இன்னுமோர் அரிய சந்தர்ப்பம்!!

CD ஒன்று இலவசமாக வழங்கப்படும்

Colombo 1044sfr - 35Kgs

இலகுவான கடன்வசதிகளை உங்களுக்கு வழங்குகின்றோம்.

Perlyn Tours
Limmatstrasse -213, 8005 zürich
(24 மணிநேர சேவை)
Tel - 01/440 71 15 or 01/ 433 18 93
Fax - 01/440 71 17 or 01 / 433 17 93




எம்மிடம் உலகளாவிய பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்




# எரித்திரிய எதியோப்பிய யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவர ஐ.நா.கோரிக்கை

*(13.05.2000)*

எத்தியோப்பியாவிற்கும் எரித்திரியாவிற்கும் இடையே மீண்டும் ஆரம்பித்துள்ள யுத்தத்தை உடனடியாக முடிவிற்குக் கொண்டுவருமாறு ஐ. நாவின் பொதுச் செயலாளர் கோபி அனான் அவர்கள் கோரியுள்ளார். எத்தியோப்பியாவிலும், எரித்திரியாவிலும் வரட்சியினாலும் உணவுப் பஞ்சத்தினாலும் ஏராளமான மரணங்கள் சம்பவித்துக் கொண்டிருக்க அவற்றைத் தவிர்க்க முயற்சிகளை மேற்கொள்ளாது எல்லைகளில் யுத்தத்தை நடாத்தும் இவ்விருநாடுகளையும் ஐ.நா பொதுச் செயலர் வன்மையாகக் கண்டித்தார். இரு நாடுகளும் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவராது விடில் அந்நாடுகளின் மேல் ஆயுதத்தடையைக் கொண்டுவர ஐ.நா பாதுகாப்புச் சபை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.தலைமையகத்தின் இந்த யோசனைக்கு பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, நெதர்லாந்து, கனடா போன்ற நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆனால் இவ்விருநாடுகளும் அடுத்த இரண்டு வருடங்களுக்குத் தேவையான ஆயுதத் தளவாடங்களை தங்களது சேமிப்பில் வைத்துள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக ஐநாவினால் மேற்கொள்ளப்பட்டுவந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்த நிலையில் கடந்தவார இறுதியில் இருநாடுகளும் மோதிக் கொள்ள ஆரம்பித்தன. பாத்மே பிராந்தியத்தில் நடந்த மோதலில் எரித்திரியாவின் இராணுவத்தை மிகப் பலமாக தமது இராணுவத்தினர் தாக்கியதாயும் பல தாங்கிகள் உட்பட இராணுவ வாகனங்கள் அழிக்கப்பட்டதாயும் எரித்திரியா கூறியுள்ளது. அதேவேளை எரித்திரியாவும், எத்தியோப்பியாவின் பல அணிகளைத் தாக்கியழித்துள்ளதாகக் கூறியுள்ளது.

இதற்கிடையே எத்தியோப்பிய பிரதம மந்திரி மெலஸ் செனாவி தனது நாடு மிக விரைவில் இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் என்றும் அண்டை நாட்டுடன் யுத்தத்தில் ஈடுபடுவதைவிட ஏழ்மைக்கும், பட்டினிக்கும் எதிராக போரிடுவதே தற்போதைய தேவையாக உள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

# திரையரங்கு தீ விபத்துக்கு காரணமானவர்களுக்கு சிறைத் தண்டனை

*(13.05.2000)*

சீனாவில் கடந்த சில மாதங்களுக்கு முன் இடம்பெற்ற ஓர் தீ விபத்தில் 74 பேர் கொல்லப்பட்டு ஏராளமானோர் காயமடைந்தனர். இதற்குக் காரணமானவர்கள் எனக் கூறப்படும் 16 பேருக்கு சீன நீதிமன்றம் ஒன்று கடுமையான சிறைத் தண்டனையை வழங்கியுள்ளது.

ஹேனான் மாகாணத்தில் உள்ள மத்திய சீன நகரமான ஜியாசூவோவில் கடந்த மார்ச் 29ம் திகதி சட்டவிரோதமான திரையரங்கொன்றில் தீ விபத்து ஏற்பட்டது. இத் திரையரங்கில் சட்டவிரோதமான பாலியல் ரீதியான திரைப்படங்கள் இரகசியமாகக் காட்டப்பட்டதாயும் 28 பிரத்தியேக அறைகளையும் இரண்டு பிரதான மண்டபங்களையும் இது கொண்டிருந்ததென்றும் சொல்லப்படுகிறது. ஆனால் இம் மண்டபத்தில் சரியான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இங்கு ஏற்பட்ட தீ விபத்திற்குப் பொறுப்பானவர்கள் எனக் குற்றம் சுமத்தப்பட்ட இருவருக்கு ஆயுட் காலச் சிறைத்தண்டனையும், மேலும் 14 பேருக்கு குறைந்தது 2 வருடச் சிறைத் தண்டனையும் அந் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

சீனாவின் கவலையீனமான தீ விபத்துக்களின்மூலம் கடந்த காலங்களில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் 1994ம் ஆண்டில் மேற்குப் பகுதி நகரமான கரமாயில் சிறுவர்கள் உட்பட 323 பேர் கொல்லப்பட்டனர். அதேபோன்று ஒரு மாதத்திற்கு முன்பு வடகிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற தீ விபத்தின்போது 233 பேர்கள் கொல்லப்பட்டனர். 1977ம் ஆண்டு சிங்சியான் நகரில் ஏற்பட்ட தீ விபத்தொன்றில் 597 சிறுவர்கள் உட்பட 694 பேர்கள் கொல்லப்பட்டனர். இதுவே சீனாவின் மிக மோசமான தீ விபத்து மரணங்கள் எனக் கருதப்படுகின்றது.

# கட்டடம் இடிந்து விழுந்து பலர் மரணம்

*(14.05.2000)*

எகிப்திய தலைநகர் கெய்ரோவின் புற நகர்ப்பகுதியில் ஞாயிறன்று ஐந்து மாடிக் கட்டடம் ஒன்று இடிந்து தரைமட்டமானதில் ஆகக்குறைந்தது 12 பேர்களாவது கொல்லப்பட்டு மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர்.


தலைநகர் கெய்ரோவின் சய்யியா கயினா மாவட்டத்தில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றே அதிகாலை 1.30 மணியளவில் இடிந்து விழுந்துள்ளது. இக் கட்டடத்தில் வெடிப்புக்கள் தோன்றிய நிலையில் நகர நிர்வாகம் உடனடியாக அதனைத் திருத்த உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில் கடந்த சனியன்று முதலாம் மாடியில் வெடிப்புக்கள் ஏற்படத்தொடங்க சுமார் 25 பேர் வரை அங்கிருந்து வெளியேறினர். மிகுதியானோர் உறங்கிக் கொண்டிருந்தவேளையில் கட்டடம் இடிந்து விழுந்துள்ளது.

# 9ம் ஆண்டு வீர வணக்கம்

## கப்டன் குட்டி நமேஷ்

### தர்மலிங்கம் நஞ்சன்

(அச்சுவேலி – தமிழீழம்)



கட்டுவனில் காவலரண்தன்னில்
காத்திருந்த வேளையிலே
மறம்கொண்ட புலிகளுக்கு
புறமுதுகில்லையென
நெற்றிக்கண்முன்னே குண்டேந்தி
தமிழீழ மண்மாதாவை
முத்தமிட்டாயோ...!

நகவல்: தி. கரன்
சுவிஸ்.

குடும்பத்தினரும், நண்பர்களும்

Pub. Sw

# ருவண்டா நிலைகள் மீது உகண்டா எறிகணை வீச்சு

(13.05.2000)

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் இராணுவத்திற்கு எதிராகச் சண்டையில் ஈடுபட்டுவரும் போராளிகளின் அமைப்புகளுக்கு ஆதரவாக நிலைகொண்டிருக்கும் உகண்டா இராணுவ அணிகளும் ருவண்டா இராணுவ அணிகளும் கடந்த செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் பலத்த எறிகணை வீச்சுக்களில் ஈடுபட்டன. கிசங்கானிப் பகுதியில் நடந்த இந்த மோதலில் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. கடந்த ஓகஸ்ட் மாதமும் இதே வகையில் இரு தரப்பினரும் 4 நாட்கள் மேற்கொண்ட எறிகணை மோதல்களால் 100 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

கிசங்கானி நகரில் இருந்து வடகிழக்காக 10 மைல் தொலைவில் உள்ள பங்கோகா விமானத் தளத்தின் மீது உகண்டா இராணுவ முகாம் பகுதியில் இருந்து 70 இற்கு மேற்பட்ட எறிகணைகள் ஏவப்பட்டதாயும் இவ் விமானத்தளம் சேதங்களுக்கு உள்ளாகியபோதிலும் ஏற்பட்ட இழப்புகள் புற்றி அறியப்படவில்லை. கொங்கோவின் சிவில் யுத்தத்தில் அடிக்கடி இவ்விதம் அணிகளுக்கிடையே மோதல்கள் ஏற்பட்டு வருவது கவலைக்குரியது என ஆபிரிக்க ஒருமைப்பாட்டு அமைப்பினர் கவலை தெரிவித்துள்ளனர். கொங்கோ ஜனநாயகக் குடியரசின் ஜனாதிபதி லொறன் கபிலாவிற்கு எதிராக போராடிவரும் 2 வெவ்வேறு அமைப்புக்களுக்கு ருவண்டாவும் உகண்டாவும் ஆதரவுகளை வழங்கி வருகின்றன. நாட்டின் இரண்டு விமான நிலையங்களை இந் நாடுகளின் இராணுவங்கள் தமது பாவனைக்கெனப் பெற்றுக்கொண்டுள்ளனர். கொங்கோவில் நடந்துவரும் 22 மாதகால சிவில் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவரும் வகையில் முதற் கட்டமாக சுமார் 5500 ஐ.நா துருப்புக்கள் அங்கு ஈடுபடுத்தப் படவுள்ளன. இதற்கான ஒப்புதல்கள் அங்கோலா, நமீபியா, சிம்பாவ்வே மற்றும் உகண்டா, ருவண்டா போன்ற நாடுகளால் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் இந் நாடுகளுக்கிடையே ஏற்பட்ட உடன்படிக்கையில் ஐ.நாவின் பாதுகாப்புச் சபையின் குழுவொன்றிற்குத் தலைமை தாங்கிய ரிச்சேட் கோல்புறூக்கும் உதவி புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நெதர்லாந்தில் வெடி விபத்து! பாரிய இழப்புக்கள்

(14.05.2000)

நெதர்லாந்தில் சனியன்று இடம்பெற்ற வெடிவிபத்து ஒன்றின் காரணமாக ஒரு பிராந்தியமே தீயினால் எரியுண்டுபோயுள்ளது. அத்துடன் இச் சம்பவத்தில் 20 வரையானோர் கொல்லப்பட்டு 600 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இவர்களில் பலரது நிலை கவலைக்கிடம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்தின் கிழக்குப் பகுதியில் என்ஷேட் நகரப்பகுதியில் மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் அமைந்திருந்த கேளிக்கை வெடிபொருள் நிறுவனம் ஒன்றின் களஞ்சியசாலையில் மாலை நான்கு மணியளவில் தீப்பற்றிக் கொண்டுள்ளது. அது பின்னர் அருகேயிருந்த வீடுகளுக்கும் பரவி மிகப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. நெதர்லாந்தில் கடந்த எட்டு வருடங்களில் நடந்த மிக மோசமான அனர்த்தம் இது என்றும் சொல்லப்படுகிறது. இத் தீ விபத்தினால் சுமார் 400 வீடுகள் முற்றாக நாசமாகியுள்ள நிலையில் மேலும் 1000 வரையிலான வீடுகள் கடுமையான சேதத்துக்குள்ளாகியுள்ளன.

நெதர்லாந்தின் பிரதமர் மற்றும் அரச குடும்பத்தினர் விபத்து நடந்த பகுதிக்கு விஜயம் செய்து சேதங்களைப் பார்வையிட்டனர். முழுமையான விசாரணையொன்றுக்கும் நெதர்லாந்து அரசு உத்தரவிட்டுள்ளது.

# இஸ்ரேலிய சிறைகளில் பாலஸ்தீன கைதிகள் ஆர்ப்பாட்டம்

(14.05.2000).

இஸ்ரேலின் வடக்கே அமைத்துள்ள மெகிட்டோ சிறைச்சாலையில் பாலஸ்தீன கைதிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனை அடக்க சிறை அதிகாரிகள் மேற்கொண்ட தாக்குதல்களினால் ஏராளமான கைதிகள் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேலிய சிறைகளில் பாலஸ்தீன கைதிகளின் பராமரிப்பு தரம் மிகவும் கேவலமாக உள்ளதாயும் அதனை எதிர்த்து தாம் இஸ்ரேலின் பல சிறைகளிலும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வருவதாயும் பாலஸ்தீன கைதிகளின் நலன்பேணும் அமைப்பின் அங்கத்தவர் ஒருவர் சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றிற்குத் தெரிவித்தார். பெத்தலகேமில் உள்ள சிறையொன்றில் சுமார் 700 பாலஸ்தீன கைதிகள் பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இவர்கள் மேல் நடாத்தப்பட்ட தடியடியினால் பலர் காயமடைந்துள்ளனர். கடந்த சில தினங்களாக இவர்கள் மிகவும் அமைதியான எதிர்ப்பு நடவடிக்கைகளையே மேற்கொண்டு வந்தனராயினும் சிறையதிகாரிகளின் கடுமையான நடவடிக்கைகளையடுத்து எதிர்ப்பும் மோசமாகியது.

இவர்கள் கைதிகள் தங்கவைக்கப்படுவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த கொட்டகைகளைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். இது இப்படியிருக்க காசாப் பகுதியில் இடம்பெற்ற அரச எதிர்ப்பு நடவடிக்கைகளின்போது நடாத்தப்பட்ட தாக்குதல்களில் 14 பாலஸ்தீனர்கள் காயமடைந்துள்ளனர்.

# ஈராக் தலைநகர் மீது எறிகணைத்தாக்குதல்

(13.05.2000)

ஈராக் தலைநகர் பாக்தாத்தின் மேற்குப்பகுதியில் கடந்த ச்னியன்று மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சினால் மூன்று வயது சிறுமி கொல்லப்பட்டு நான்குபேர் காயமடைந்தனர். அதேவேளை பல கட்டடங்கள் சேதமடைந்தன.

ஈராக்கிய உள்துறை அமைச்சு வெளியிட்ட அறிக்கையொன்றில் எட்டு காட்டுஷா எறிகணைகள் அப்பகுதியில் வீழ்ந்து வெடித்தன என்றும் ஈரானின் உளவாளிகளே இதற்குக் காரணம் என்றும் கூறியுள்ளது. ஈராக்கிய அரசுக்கெதிராகப் போராடும் சியாட் அமைப்பினருக்கு ஈரான் தளங்களை வழங்கியுள்ளது. அவ் அமைப்பினரால் வெளியிடப்பட்ட அறிக்கையில், ஈராக்கிய ஜனாதிபதி மாளிகையைக் குறிவைத்து தாம் தாக்குதல்களை நடத்தியதாகவும் ஈராக்கிய மக்களுக்கு எதிராகச் செயற்படும் அரசைக் கவிழ்க்கும் நடவடிக்கைகளின் ஒரு கட்டமே இத் தாக்குதல்கள் என்றும் தெரிவித்துள்ளது.

# சவூதி அரேபியாவில் ஏழு நைஜீரியர்களுக்கு சிரச்சேதம்

(13.05.2000)

சவூதி அரேபியாவில் கடந்த இரண்டு தசாப்தங்களின் மிகப் பெரிய மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. வங்கிக் கொள்ளையில் ஈடுபட்ட ஏழு நைஜீரியர்களுக்குக் கடந்த சனியன்று இத் தண்டனைகள் வழங்கப்பட்டன. அத்துடன் அக் கொள்ளை நடவடிக்கைக்கு உதவியதாக மேலும் மூன்று நைஜீரியர்களுக்கு வலது கையும் இடது காலும் வெட்டப்பட்டன.

நைஜீரியாவுக்கு சாதாரண விஜயம் மேற்கொண்டிருந்த நைஜீரியர்கள் முதலில் காரொன்றினைத் திருடி பின்னர் வங்கியை ஆயுத முனையில் கொள்ளையிட்டுள்ளனர். இக்கொள்ளை எங்கு எப்போது இடம்பெற்றது என்பதை சவூதி பொலிசார் தெரிவிக்கவில்லை. சவுதி அரேபியாவில் கொலை, கொள்ளை, போதைவஸ்து கடத்தல் போன்றவைக்கு மிகக் கடுமையான தண்டனைகள் வழக்கப்படுவது வழக்கமானது. ஜித்தா நகரிலேயே மக்கள் மத்தியில் இத் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன. நைஜீரிய அரசு இத்தண்டனைகளைக் கொடூரமானது என்று தெரிவித்தபோதிலும், இதனால் இருநாட்டு உறவுகள் பாதிக்கப்படமாட்டாது 'என்றும் தெரிவித்துள்ளது.

# முன்னாள் ஜப்பானியப் பிரதமர் காலமானார்

(14.05.2000)

ஜப்பானின் முன்னாள் பிரதமர் செய்கோ ஓபூசி ஞாயிறன்று காலமானார். இவர் கடந்த மாதம் மார்புவலி ஏற்பட்டதில் நினைவிழந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவர் இறக்கும்போது வயது 62 என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. ஒபுசி கடந்த மாதம் 2ம் திகதி திடீரென ஏற்பட்ட மார்பு வலியின் காரணமாக டோக்கியோவின் ஜின்டென்டோ மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். தொடர்ந்து நினைவிழந்த நிலையில் இருந்த அவரது உடல் நிலை கடந்த சனியன்று மோசமடைந்துள்ளது. அவரது இரத்த அழுத்தம் மிகவும் குறைவடைந்த நிலையில் அவரது நிலையினை வைத்தியர்கள் அறிவித்துள்ளனர்.

ஜப்பானின் உயர் அரச தலைவர்கள் தங்களது விடுமுறைகளை இரத்துச்செய்து ஒபூசியின் இறுதிச் சடங்கு ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். திரு ஒபூசியின் இறுதிச் சடங்குகளில் உலகத் தலைவர்கள் பலர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஹார்ம் ஏவுகணைகளை செயலிழக்க வைப்பதில் ஈராக் வெற்றி

## – விமானப் படைத் தளபதி அறிவிப்பு –

அமெரிக்காவின் ஹார்ம் ரடார் எதிர்ப்பு ஏவுகணைகளை செயலிழக்கச் செய்வதில் வெற்றிகண்டுள்ளதாக ஈராக் அரசு அறிவித்துள்ளது. இதன் மூலமாக தனது ஆகாயப் பாதுகாப்பு முறைகளைப் பாதுகாக்க முடியும் எனவும் ஈராக் நம்பிக்கை தெரிவித்துள்ளது. ஈராக்கின் விமானப்படைத் தளபதி சஹாகின்யாசின் இச் செய்தியை , செய்தியாளர்களுக்கு அறிவித்திருக்கிறார். 1998 டிசம்பரில் இருந்து இதுவரை செலுத்தப்பட்ட ஹார்ம் ஏவுகணைகள் தமது இலக்குகளைத் தாக்கத் தவறிவிட்டதாகவும் அவர் கூறினாலும் அவ் ஏவுகணைகள் எவ்வாறு ஈராக்கினால் செயலிழக்கவைக்கப்படுகிறது என்பதைக் கூற மறுத்துவிட்டார்.


ஹார்ம் ஏவுகணை குறித்து அமெரிக்கர்கள் பெருமைப்பட்டுக்கொள்வது போல அவ் ஏவுகணையில் ஒன்றுமே இல்லை. அவர்கள் கூறுவது உண்மையாயின் எம்மிடம் இப்போது ஒரு ரடார் கூட மிஞ்சியிருக்காது எனவும் அவர் கூறினார்.


உலக விடயங்கள் பலவற்றைத் தாங்கி வரும்
அறிவுக்களஞ்சியம்




யுனெஸ்கோ கூரியர்
உலகின் பிரபல எழுத்தாளர்களின்
உருவாக்கங்களின் தொகுப்பு

உங்கள் தொடர்புகளுக்கு:
ஈழமுரசு
22 Rue Perdonnet,
75010 Paris.
Tel: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64



* மளிகைப் பொருட்கள்
* உடன் மரக்கறிகள்
* உடன் மீன் வகைகள்
* மற்றும் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்

**Sri Murugan**

Wiesen Str-10, 4900 Langenthal, Switzerland

உரிமையாளர்: மாணிக்கம் இளமுருகன்

Tel: 062/922 17 98-Fax: 062/922 78 33

**Palm Beach**

RESTAURANT

10%OFF ALL TAKE AWAY ORDERS

P.Sivarupan
Proprietor



Finest South Indian & Sri Lankan Cuisine

17 Ealing Road, Wembley
Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990

**ARCHIE'S**

Audios - Videos - CD's
Whole Salers & Retailers

205 Edgware Road,
Colindale,
London NW9 6LY
T.P: 0181-205 3652

உங்களுக்குத் தேவையான மளிகைச் சாமான்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு

**KANNA Euro Enterprises**

198, Arch Way Road
(முருகன் ஆலயத்திற்கு அருகில்)
High Gate,
N6 5BB, London.
T. Phone- 0181-3483356

**ஈழமுரசு**
Eelamurasu Weekly

பிரித்தானியாவிற்கான சந்தாக் கட்டணத்தினை (வருடம் ஒன்றிற்கு £60, 6 மாதங்களுக்கு £32) செலுத்துவதன் மூலம் ஈழமுரசு உங்கள் வாசல் தேடி வருவதற்கான வாய்ப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## பிரித்தானிய வணிகம்

பிரித்தானியா நாட்டிற்கான விளம்பரங்களை ஒரே பக்கத்தில் பிரித்தானியப் பதிப்பில் 'பிரித்தானிய வணிகம்' என்ற பகுதியில் இடம் பெறுவதற்கான விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன. குறைந்த கட்டணத்துடன் விளம்பரப்படுத்த இப்பகுதி உங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பினை அளிக்கின்றது.

உங்கள் விளம்பரம் தொடர்பான தேவைகளுக்கு நாடுங்கள்

**EELAMURASU (அஞ்சல் வழி)**
**5, Saxony Parade, Hayes, UB3 2TQ**
**Fax/Tel: 0181-56 16 877**

சிறிய வரி விளம்பரங்களுக்கு £5 மட்டுமே!

ஜெயந்தன் Tel: 0956908145
ஹரி Tel: 07887874177
பாஸ்கரன் Tel: 0181-7698302

**ASIAN FUNERAL DIRECTORS**

24 மணிநேரச் சேவை



அமரத்துவம் அடைந்தவர்களது இல்லங்களுக்கான பிரத்தியேக விஜயங்கள், அமரர்களைக் குளிப்பாட்டுதல் - ஆடை அணிவித்தல் - அஞ்சலிக்கு வைத்தல், வார இறுதி ஈமக்கிரியைகளுக்கான ஒழுங்குகள், மலர் வளையங்களுக்கான ஒழுங்குகள், மதச் சடங்குகளுக்கான ஒழுங்குகள் ஆகியவற்றுடன் அமரர்களிக் பேழைகளைச் சர்வதேச ரீதியில் காவிச்செல்லும் பணி.

LONDON 0800 026 2335
MIDLANDS 0800 026 2334

F·O·S
Part of the SCI Group of Funeral Directors
Member of the Funeral Ombudsman Scheme and the Funeral Standards Council

Pub.Lon

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கலகரமான நிகழ்ச்சிகள், மற்றும் மேடை நிகழ்ச்சிகள் அனைத்திலும் இசைமழையில் நனைந்திட ஐரோப்பா புகழ்

**ஈழநிலா**

தொடர்புகட்கு:
இயக்குநர் எஸ்.எஸ்.
தில்லைச்சிவம்
Tel: 01 40 37 56 69

**SHASME Super Store**

இலங்கை இந்திய மளிகைச் சாமான்கள் வீடியோ, ஓடியோ, CD, சஞ்சிகைகள், பத்திரிகைகள், மரக்கறி வகைகள், கடல் உணவுப்பொருட்கள் Gnanam Phone Card அனைத்தையும் பெற்றுக்கொள்ள Birmingham த்தில் ஒரே தமிழ்க்கடை

*211, Lady Pool Road,Balsall Heath,*
*Birmingham B 12, 8 LG*
*Tel No: 0121-4465896*


# பசுமைப்புரட்சியை நோக்கி எமது தாயகம்

உங்களுக்கு 'ரீ டோர்' என அழைக்கப்படும் தமிழீழ மேம்பாட்டு நிறுவனத்தைப்பற்றித் தெரிந்திருக்கும். அதுமட்டுமல்ல, எமது தாயகத்தில் அது செய்துவரும் அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றியும் உங்களுக்குப் புரியும். எமது தாயகத்தில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனங்களால் செயற்படுத்தப்படும் செயற் திட்டங்கள், பலமான ஆய்வுகளுக்குப் பின்னரே நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இந்தச் செயற்திட்டங்களிற்குத் தேவையான நிதியுதவியும் தமிழீழத்தின் குடிமக்களின் பங்களிப்பினால் வருவதே. தற்போது எமது தாயகத்தில் எமது சகோதர சகோதரிகளின் வாழ்வினை மேம்படுத்துவதற்காக தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செயற் திட்டங்களுக்கு உதவி செய்வது தமிழீழக் குடிமக்களின் தார்மீகக் கடமையாகும்.

தற்போது சிறீலங்கா அரசினால் எமது தாயகத்திற்கு விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் பலத்த இன்னல்களை எம் மக்களுக்குத் தோற்றுவிப்பது நீங்கள் அறிந்துதான் இருப்பீர்கள். இந்தத் தடையால் எமது செயற் திட்டங்களும் சில சிக்கல்களை எதிர்நோக்கியதால் நாம் அவற்றை வெற்றிகொள்வதற்காக உள்ளூர் மூல வளங்களையே மாற்றீடாகக் கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டது. எமது தொழில் நுட்பத்தை நாம் சுயமாகவே மேம்படுத்துவதற்கு விரிவான உதவிகள் தற்பொழுது தேவைப்படுகின்றன. குறிப்பாக எமது களகத்தினால் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் பின்னர் எமது தாயகத்தின் விளைநிலத்தில் பயன்பாடு செய்யக்கூடியதாக மிகப் பொருத்தமான உரவகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த அற்புதமான உரமே 'பயிர் அமுது' எனப் பெயர் சூட்டப் பட்டுள்ளது. பயிர் அமுது எமது விளைநிலத்தில் பயிரிடக்கூடிய பலதரப்பட்ட பயிரினங்களுக்கும் அற்புதமாக பலனளிக்கிறது. பயிர் அமுதானது சிறீலங்கா அரசின் உணவுத் தடையாலும், உணவுப் பற்றாக்குறையாலும் வாடும் எம் தேசத்திற்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். ஆனால் பயிர் அமுதை நாம் போதிய அளவில் தயாரிப்பதற்கு நிதி உதவி தேவைப்படுகிறது. தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கணிப்பீட்டின்படி இதற்காக 5 மில்லியன் ரூபா பணம் தேவைப்படுகின்றது.

இந்த நிதியைத் திரட்டிக்கொள்வதற்காக தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உங்கள் ஆதரவோடு நல்வாய்ப்பு சீட்டிழுப்பினைச் செய்ய முடிவு செய்துள்ளது. எமது தேசத்தில் பசுமைப் புரட்சி ஒன்று தோன்றிட உங்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானது. நீங்கள் வழங்கும் பங்களிப்பு எமது தாய்நிலத்தில் தலைவிரித்தாடும் உணவுப் பற்றாக்குறையை நீக்கி விடும் என்பதும் எமது எதிர்பார்ப்பு. நீங்கள் உடனடியாகச் செய்யவேண்டியது இதோ!

தயவுடன் நீங்கள் வாங்கக்கூடிய அல்லது உங்களால் விற்கக்கூடிய நல்வாய்ப்புச் சீட்டுக்களின் தொகையை தமிழீழ பொண்மிய மேம்பாட்டு நிறுவனத்திடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

விற்கப்படமுடியாத சீட்டுக் கட்டுக்கள் எம்மால் திருப்பி எடுக்கப்படமாட்டாது.

விற்கப்பட்ட சீட்டுக்களின் அடிக் குறிப்புக்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பின்வரும் முகவரிக்கு 14.08.2000 இற்கு முன்னர் அனுப்பி வையுங்கள். இது தொடர்பாக நீங்கள் அவசர தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளலாம்.

TEEDOR (UK), 202 Long Lane, London SE1 4QB,

தொலைபேசி இலக்கம்: 020 7403 4554

உங்கள் காசோலைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் என்ற பெயரில் வரையுங்கள். வெற்றி பெற்றவர்கள் பற்றிய விபரம் நிறுவனத்தால் அறிவிக்கப்படும். இதற்காக நிறுவனத்தின் தகவல் இணையப் பக்கத்தையும் நீங்கள் பார்வையிடலாம். http//www.teedor.org

- Please request no. of tickets you can either buy or sell from TEEDOR office
- Return of unsold books not acceptable
- Send counterfoil to TEEDOR (UK), 202 Long Lane, London SE1 4QB on before 14/08/2000 and for urgent contact phone: 020 7403 4554
- Write your cheque to 'TEEDOR'

Winners will be published in TEEDOR Website: http//www.teedor.org

அதிர்ஷ்டலாபச் சீட்டு
பயிரமுது பசளை உற்பத்தி நிதிக்காக

Name:........................................
Address:........................................
........................................
........................................
Tel.:........................................

£1.00

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
அதிர்ஷ்டலாபச் சீட்டு
"பயிரமுது" பசளை உற்பத்தி நிதிக்காக

| | |
|---|---|
| 1st Prize | New Pentium III computer |
| 2nd Prize | Disneyland ticket for two people (including travelling from Waterloo, London to Disneyland) |
| 3rd Prize | Hi-Fi set |
| 4th Prize | Mountain Bike |
| 5th Prize | Wall clock - 6 prizes |

உற்பத்தியைப் பெருக்குவோம்
பட்டினிச் சாவிலிருந்து எம்மக்களைக் காப்போம்
28 August 2000 - Monday £1.00
TEEDOR-UK, 202 Long lane, London SE1 4QB Tel: 020 7403 4554

ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# வெற்றியை நெருங்கும் தர்மத்தின் யுத்தம்

சிறீலங்காவின் அரசியல் வரலாற்றில் 'சிங்களம் மட்டும்' எனும் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு சில மாதங்களில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் பௌத்த மகாசங்கம் தமிழ்த் தேசியத்திற்கு எதிராக, கண்டி நகர் நோக்கி பாதயாத்திரை ஒன்றினை மேற்கொண்டது. அப் பாத யாத்திரையில் சென்றவர்கள் தமது கைகளில் ஒரு வரைபடத்தினையும் கொண்டுசென்றார்கள். தமிழ் மக்களுக்கு உரிமைகள் கொடுக்கப்பட்டால் அவர்களுக்குக் கிடைக்கும் தனிநாடு இவ்வாறுதான் இருக்கும் என்று அவ் வரைபடத்தில் காட்டப்பட்டிருந்தது. அந்தச் சம்பவம் நடைபெற்றுப் பல வருடங்கள் உருண்டோடிவிட்டன. எந்த பௌத்த மகாசங்கத்தினர் தமிழருக்குக் கிடைக்கும் தனிநாடு இவ்வாறுதான் இருக்குமென இனத்துவேச ரீதியில் படம்போட்டுக் காட்டினார்களோ, அதே படம் இன்று யதார்த்த நிலையாகிவிட்டது. என்னும் சிறீலங்கா பௌத்த பேரினவாதம், தான் கடந்து வந்த பாதையில் எந்த ஒரு கட்டத்திலும் தமிழ் மக்களின் தேசிய உணர்வினை ஒரு துளி தன்னும் அங்கீகரிக்காமல் தனது இராணுவ மேலாதிக்கப் போக்கினை நிலைநிறுத்திக்கொள்வதற்காக காய்களை அப்படியும் இப்படியும் நகர்த்தி தமிழ்த் தேசியத்தை வென்றுவிடலாம் என்ற நப்பாசையுடனே தனது வெறியாட்டத்தைத் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

தமிழ்த் தேசியத்தின் அடிப்படை உரிமைக்குரலை பயங்கரவாத முத்திரை குத்திய பௌத்த பேரினவாதம் காலத்திற்குக் காலம் சர்வதேச சக்திகளை ஏமாற்றிக்கொள்வதற்காக சமாதானப் பல்லவி பாடவும் தயங்கவில்லை. சிறீலங்கா ஜனாதிபதியாக சந்திரிகா தெரிவானதும் இந்தச் சமாதானப் பல்லவி 'தீர்வுப் பொதி' என்ற பதத்தோடு கொஞ்சம் கூடுதலாகவே ஒலித்தது. ஆனால் பதவியேற்ற கையோடு சந்திரிகா தனது சமாதான முகமூடியைக் கழற்றிவிட்டு தமிழ்த் தேசியத்தின் மீதான ஆக்கிரமிப்புப் போரில் முற்றாகவே குதித்தது ஒவ்வொரு தமிழ்க் குடிமகனுக்கும் நன்றாகவே தெரியும். சந்திரிகா குழாமின் 'தீர்வுப் பொதியில்' அதை உருவாக்கியவரெனக் கருதப்பட்ட பீரிஸ், கடந்தவாரம் சிறீலங்கா அரசின் யுத்த முயற்சிகளுக்காக 1200 கோடி ரூபா மேலதிகமாகத் தேவைப்படுவதாக அறிவித்ததுடன் நிறைவேற்றப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலேயே திருத்தத்தினை மேற்கொண்டு புதிய வரிகளையும் அறிவித்துள்ளார்.

அதாவது சமாதானம், சகவாழ்வு, தீர்வுப்பொதி என சந்திரிகா குழாம் சர்வதேசத்திற்கு பூச்சுற்ற முயன்றாலும் தமது நோக்கம் தமிழ்த் தேசியத்தின் மீதான ஆக்கிரமிப்புப் போர் ஒன்று எனத் தெட்டத்தெளிவாக அறிவித்துள்ளது. தமிழர் தாயகத்தில் ஓயாது ஆர்ப்பரிக்கும் அலைகளால் தனது இராணுவ இயந்திரமும் அரசியல் ஆளுமையும் முற்றாகவே சிதைவடைவதை உணர்ந்த சந்திரிகா குழாம் இப்போது போர் ஒன்றையே நம்பியுள்ளது. உளவியல் ரீதியில் 'தம்மைத் தாமே' ஆசுவாசப்படுத்திக்கொள்வதற்காக வெளிநாடுகளில் இருந்து போருக்காக விசேட ஆயுத தளவாடங்களை வாங்கிக் குவிக்கப் போவதாகவும் கொக்கரிக்கின்றார்கள். இதுவரை சிறீலங்கா அரசாங்கம் வாங்கிக் குவிக்காத நவீன ஆயுத தளவாடங்களையா இனிமேல் வாங்கிக்குவித்து தமிழ்த் தேசியத்தின் தார்மீகப்போரை வெற்றிகொள்ளப்போகிறது? ஆக்கிரமிப்பிலிருந்து வெளியேறத் துடிக்கும் யாழ். மக்களையே தமது கவசங்களாகப் பயன்படுத்திப் போரிடமுனையும் சிறீலங்காவின் இராணுவத்திற்கு சந்திரிகாவின் இந்த நவீன ஆயுத தளவாடங்கள் உதவப்போகின்றனவா அல்லது தமிழ்த் தேசியத்தின் இராணுவத்தை இவ் ஆயுதத் தளவாடங்கள் இன்னும் பலப்படுத்தப்போகின்றதா என்பதைக் காலமே தெளிவுபடுத்தும்.

# இந்திய நலன்களை சேதப்படுத்தும் இந்திய ஊடகங்கள்

## பார்வை

இந்திய செய்தி ஏடுகளிலும், சஞ்சிகைகளிலும் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய பல்வேறு கருத்துரைகள் எழுதப்பட்டுவருகின்றது. வைகோ, பண்டிருட்டி ராமச்சந்திரன் போன்றவர்கள் தமிழீழ விடுதலையின் நியாயத்தை வழங்க முற்படுகின்றபோது அதனை எதிர்த்தும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை விமர்சித்தும் பல்வேறு கருத்துக்களை பிரசுரித்து தமிழர்களின் நியாயத்தை இந்தியாவுக்கு எதிரான விடயமாக்கும் முயற்சியில் சில ஊடகங்கள் பங்கேற்றுள்ளன.

இவ் எதிர்வாதங்களில் இரு வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன

1. *தமிழீழ விடுதலைப் போராட்டமானது வெற்றிபெற்றால் தமிழகம் அதேபாதையில் செயற்பட்டு இந்தியாவை பிரிக்க முற்படும்.*
2. *தமிழீழம் வெற்றிபெற்றால் காஸ்மீர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் உற்சாகம் பெற்றுவிடுவார்கள். தம்மாலும் இராணுவ பலம் மூலம் காஸ்மீரை பிரிக்கமுடியும் என அவர்கள் நம்பிவிடுவார்கள்.*

**முன்னாள் இந்திய இராஜதந்திரியான ஜா என்பவர் தமது கருத்தை விசித்திரமாக வெளியிட்டார். புலிகள் மீதான இராணுவ நடவடிக்கையை அவர் வலியுறுத்தினார். தான் சொல்வது மோசமானது என்பதை அவரே உணர்ந்து கொண்டு தனது இந்நிலைக்குக் காரணம் மறைந்த அமைச்சர் தொண்டமானே என போட்டுடைத்தார். முன்பு தன்னைச் சந்தித்த தொண்டமான் தமிழ்ஈழம் உருவாகுவதை தவிர்க்க முடியாது எனவும் ஈழம், தமிழ்நாட்டை கொண்டதாகவும் அமையும் எனவும் தன்னிடம் கூறியதாகக் கூறினார்.**

அவரது இவ் விளக்கம், இந்திய வெளிவிவகாரத் துறையின் கணிப்பிடும் தன்மையை சந்தேகத்துக்குள்ளாக்கியுள்ளது. சிங்கள அரசின் அமைச்சரவையில் இருக்கும் தொண்டமான் உண்மையில் இவ் விசமத்தனமான கருத்தை வெளியிட்டார் என எடுத்துக் கொண்டாலும் புலிகளினதும், தமிழ் மக்களினதும் அரசியல் நோக்கத்தை புரிந்துணராமல் எவ்வாறு திரு.ஜா கொழும்பில் இராஜதந்திரியாகச் செயற்பட்டார் என்ற வினா எழுந்துள்ளது.

ஜாவைப் போன்று முனி, சோ ராமசாமி மற்றும் சில குறிக்கப்பட்ட செய்தியாளர்கள் இவ்வாறான, இந்திய மக்களைத் திசைதிருப்ப தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் தமது வசதிக்காக, தமிழக மக்களின் இந்திய தேச பக்தியை கொச்சைப்படுத்துகின்றார்கள். மறுபுறம், புதிய தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்து கிளின்டனின் மொனிக்கா விவகாரத்தை ராஜஸ்தான் கிராமத்து பெண் தெரிந்து கொள்ளும் உலகில், தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்றால் காஸ்மீர் உற்சாகப்படுவார்கள் எனக் கூறுவது வேடிக்கையானது. பாக். தொலைக்காட்சிகளும், வானொலிகளும் தெளிவாகக் கேட்கக் கூடிய காஸ்மீர் தலிபன்களின் வெற்றி, செச்சினிய முஸ்லீம்களின் தீவிரப் போர் போன்றவற்றை அறிந்திருப்பார்கள்.

**உண்மையில், புலிகளை இந்திய எதிரிகளாகக் காட்ட முற்படுபவர்களும், தமிழ்நாட்டு பிரிவினைப் பயத்தை எழுப்புபவர்களும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழிக்க உதவுவதாக எண்ணிக் கொண்டு இந்திய நலன்களை சேதப்படுத்த முனைகின்றார்கள். இந்திய நலன்கள் தமிழீழம் உருவாகுவதில்தான் தங்கியுள்ளது. அதனை வரலாறு நிச்சயம் நிரூபிக்கும்.**

* * *

## யூதர்களின் விடுதலைப் போருடன் ஒப்பிடப்படும் தமிழர் போர்

புலிகள் பற்றிய சர்வதேச வியப்பு தொடர்ந்தும் உலகெங்கும் வியாபித்துள்ளது. UPI எனும் சர்வதேச செய்திநாடனத்தின் பாதுகாப்புத்துறை ஆசிரியர் மார்டின் ஸ்மவ் என்பவர், புலிகளை உலக போராட்ட இயக்கங்களுடன் ஒப்பிட்டு வியந்துள்ளார். குறிப்பாக யூதப் போராட்டங்களுடன் ஒப்பிட்டமை வித்தியாசமானதாக அமைந்தது.

அவர் வியட்கொங் போராளிகளின் அல்லது ஆப்கானிஸ்தானின் முகாஜுதீன் போன்ற அமைப்புகளுக்கு இருந்த சர்வதேச உதவி புலிகளுக்கு இல்லை. அவர்களுக்கு (புலிகளுக்கு) வல்லரசுகளின் ஆதரவு கிடையாது. உலக கோட்பாட்டு முகாம்களின் ஆதரவு கிடையாது (கம்யூனிச ஆதரவு, மதஆதரவு) ஆயினும் தமிழர்களின் போராட்டம் வெற்றியை நோக்கி நகர்கின்றது என வியந்துள்ளார்.

**இஸ்ரேலின் இராணுவம் *1950*களிலும் *1960*களிலும் கொண்டிருந்தது போல் புலிகள் பெரும் ஆயதத் தளவாடங்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.**

***1948*ல் இடம்பெற்ற யூதர்களின் (இஸ்ரேலிய விடுதலைப் போராட்டம்) போராட்டம் போன்று புலிகளும் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளே தமது இராணுவ தீர்மானத்திற்குக் காரணமாகும் என நம்புகின்றனர் என மார்டீன் கூறுகின்றார். இஸ்ரேலியர்கள் போன்றும் பாலஸ்தீனியர்கள் போன்றும் புலிகள் உலகளாவிய தமது இனத்தின் ஆதரவைப் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர் எனச் சுட்டிக் காட்டியதுடன், இந்திய எதிர்ப்புக்கு மத்தியிலும் கூட புலிகள், மக்கள் ஆதரவுடன் நடைபோட்டனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.**

இந்தியச் செய்தி ஏடான The Pioneer எனும் ஏடு பீனிக்ஸ் பறவைக்கு சரியான வடிவம் பிரபாகரன் என்கின்றது. பீனிக்ஸ் பறவை என்பது சாம்பலில் இருந்து எழும் என விபரிக்கப்படுகின்றது. 120000 சிங்களப் படைகள் புலிகளின் தீர்க்கமான நடவடிக்கைகளால் ஓட்டமெடுக்கின்றார்கள் என்றாலும், இந்திய அரசு கலங்கிப் போயுள்ளது என்றாலும் அது பிரபாகரனின் இராணுவ நுட்பமே காரணம் என அவ் ஏடு கூறுகின்றது.

* * *

## மூக்கு வியர்த்த சிறீலங்கா

கனேடிய தமிழர்களின் விழாவொன்றில் முக்கியத்துவம் மிக்க இரு அமைச்சர்கள் கலந்து கொண்டது சிங்களத்திற்கு மூக்கு வியர்க்க வைத்துள்ளது. தமிழர்களை பயங்கரவாதிகள் என்றுதான் அழைக்க வேண்டும் என உலகம் முழுக்க கூறிவரும் கதிர்காமரிற்கு, கனடா தமிழர்கள் பெற்றுவரும் அங்கீகாரம் பயத்தை ஊட்டியுள்ளது. உடனடியாக கனடா அரசுக்கு தமது எச்சரிக்கை கலந்த அறிவித்தலை கதிர் விடுத்துள்ளார். அவருக்கு ஆதரவாக கனடாவில் இலவசமாக மக்களுக்கு விநியோகிக்கப்படும் வெள்ளை இனவாத பத்திரிகையும், கொழும்பில் *தி ஐலன்ட்* எனும் ஏடும் களத்தில் இறங்கியுள்ளது. மதிப்பிற்குரிய இரு அமைச்சர்களையும் மூன்றாம் தர அரசியல்வாதிகள் என ஐலன்ட் கூறுகின்றது. பயங்கரவாதிகளுடன் அமைச்சர்கள் விருந்து என நசனல் போஸ்ட் கூறுகின்றது.

**இம்முறை ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு தேர்தலில் போட்டியிட்டு ஒரு வாக்கினை மட்டும் பெற்று மூக்குடைபட்ட கதிர்காமருக்கு தமது பல மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்ட பரப்புரைகளையும் மீறி கனடா அமைச்சர்கள் தமிழர்களின் விழாக்களுக்குச் சென்றது பொறுக்க முடியாத விடயமாகிவிட்டது.**

அண்மையில் கொழும்பு குண்டு வெடிப்பில் கனடா தமிழர்கள் சம்பந்தப்பட்டதாக புரளி கிளப்பிய சிறீலங்கா ஒருகட்டத்தில் கனடாவை இழுத்து செய்தி வெளியிட்டதற்காக வாங்கிக்கட்டியது நினைவுக்கு வருகின்றது.

- *ராஜா*

## இவ்வாரம் கேட்டவை

★ புலிகள் யாழ்ப்பாணத்தை நெருங்குகையில் தமிழர்களுக்கு அதிகாரங்களை வழங்க எவருக்கும் தைரியம் இல்லை

*- சமாதானப் பேரவை என்ற கொழும்பு அமைப்பின் தலைவர் ஜெகன் பெரேரா (டைம்ஸ் ஒவ் இந்தியா)*

★ அமெரிக்கா இச்சந்தர்ப்பத்தைப் பாவித்து இந்து சமுத்திரத்தில் ஊடுருவும்


*- இந்திய கம்யூனிச கட்சித் தலைவர் ஹரி கிசான் சிங் தமிழர்களின் துன்பங்களைப் பற்றிய கரிசனையே இல்லாது வெளியிட்ட கருத்து - இந்தியன் எக்ஸ்பிரஸ்*

★ பேச்சுவார்த்தை மூலம் தமிழீழம் அமைந்தால் ஆதரிப்போம். நாங்கள் புலிகளை ஆதரிக்கவேயில்லை.

*- தமிழகக் முதல்வர் கருணாநிதி வழங்கிய புதிய விளக்கம்*

★ தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் பிரபாகரனின் கவர்ச்சியினால் தலைதெறிக்க ஓடுகின்றனர்

*- தி இன்டிபென்டன் செய்தியாளர் தமிழகத்தில் ஏற்பட்டுவரும் பிரபாகரன் ஆதரவு பற்றிய விளக்கம்*



# உதாசீனப்படுத்தப்பட்டு வந்த சிவில் யுத்தம் உலகப் பத்திரிகைகளின் முன்பக்கச் செய்தியானது

சிறீலங்கா இராணுவத்திற்கு கடந்த சில வாரங்களாக விடுதலைப் புலிகள் அமைப்பினர் ஏற்படுத்திவரும் பிரமிக்கத்தக்கதான தோல்விகளானது ஒரு சமயம் உதாசீனப்படுத்தப்பட்டு வந்த சிவில் யுத்தத்தை மீண்டும் உலகப் பத்திரிகைகளின் முதற் பக்கங்களில் கொண்டு வர வைத்துள்ளது. இதில் வேடிக்கை என்னவென்றால் ஓர் நவீன தேசிய இராணுவம், சிறிய, ஆயுதமயப்படுத்தப்பட்ட கெரில்லா இராணுவத்திற்கு பயந்து ஓட்டம்பிடித்து வருவதுதான். பலவீனமான, யுத்தத்திற்கு தயாராகியிராத இந்த இராணுவம் பெற்றுவந்த தோல்விகள் அரசிற்கு மிகுந்த செலவையும் ஏற்படுத்தி வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களது இராணுவ நடவடிக்கையை கடந்த நவம்பர் மாதம் முதல் மேற்கொண்டு வருகின்றனர். தமிழ்த்தாயகம் என அவர்களால் கோரப்படும் தீவின் வடக்கு-கிழக்கின் பாகங்களை இராணுவத்திடம் இருந்து மிக உறுதியான முறையில் மீட்டுவருகின்றனர். இவ் வெற்றிகளுக்கு எல்லாம் சிகரம் வைத்தாற்போல் ஏப்ரல் 22ம் திகதி யாழ்.குடாவின் நுழைவாயிலில் அமைந்திருந்த ஆனையிறவுப் படைத்தளத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த அந்த வெற்றி அமைந்தது. பின்வாங்கிக் கொண்டிருக்கும் இராணுவத்தின் எண்ணிக்கை 28,000 வரை எனக் கணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் போராளிகளின் கனரக எறிகணைத் தாக்குதல்களால் மேலும் பல பின்னடைவுகளை அவர்கள் அடைந்துவருகின்றனர். எதிர்பார்க்கப்படும் பேச்சுவார்த்தைகளின் போது, தங்கள் நிலையைப் பலப்படுத்திக் கொள்வதற்காக இந்தத் தாக்குதல் வெற்றிகளை அவர்கள் பயன்படுத்தலாம்.

*– எக்னோமிஸ் சஞ்சிகையில் இருந்து*

## ஆனையிறவின் வீழ்ச்சி கிறிஸ்மஸ் கொண்டாட்டம் போலிருந்தது



வவுனியாவின் வடக்கே ஒருமைல் தூரத்தில் அந்த அகதிகள் தங்கும் நிலையம் அமைந்துள்ளது. அங்கு இருந்த மக்களிடம் வினவியபோது, விடுதலைப் புலிகள் எங்கள் மக்களுக்காகவும் எமது தாயகத்திற்காகவும் போராடுகிறார்கள். எனது பிள்ளைகள் அதில் இணைந்துகொள்வார்களானால் நான் கவலைப்பட மாட்டேன் எனக்கூறினார்.

அந்த அகதி முகாமை நான் பார்ப்பதற்காக பத்திரிகையாளர்களை அழைத்துச்சென்ற அந்த இராணுவ லெப்டினன், அரசியல்வாதிகளின் பிழைகளால்தான் இந்த யுத்தம் இடம்பெறுகிறது. இது ஒரு அர்த்தமற்றது என அழுத்துக்கொண்டார். அந்த முகாமில் இருந்த ஒருவர் வானொலிச் செய்தியொன்றை கேட்டதன் பின், ஆனையிறவு வீழ்ச்சியை நாம் அறிந்துகொண்டபோது எமக்கு அது கிறிஸ்மஸ்போல் இருந்தது. ஆனால் எம்மால் கொண்டாட முடியவில்லை. நாம் மிகமிக மகிழ்ச்சிடைந்தோம். புலிகள் எங்கள் ஒரே பிரதிநிதிகள். அரசாங்கம் அவர்களைப் பயங்கரவாதிகள் எனக்கூறுகிறது. ஆனால் அவர்கள் போராளிகள், விடுதலை வீரர்கள். அவர்கள் தமிழர்களுக்காக யுத்தம் செய்கிறார்கள். அவர்கள் யாழ்ப்பாணத்திற்குள் நிச்சயம் போவார்கள். இது எங்கள் மண் என ஒருவர் கூறுகிறார். அவரிடம், வேலுப்பிள்ளை பிரபாகரனின் அரசு 'பொல்பொட்'டினுடையதுபோல் இருக்குமா எனக்கேட்டதற்கு, 'அவர் மகா மகா மனிதர்' என்றவர், அவர்தான் எங்களை மீட்பார் என்றும் கூறினார்.

*- கார்டியன் இதழில் இருந்து*

# தென் வியட்நாமின் வீழ்ச்சிக்குப் பிறகு ஆசியாவின் மிகப்பெரும் வெற்றி

அந்த இறுக்கமான கட்டமைப்புக்கொண்ட தமிழ்ப் புலிப் போராளிகள், கடந்த வியாழக்கிழமை முதல் சிறீலங்காவின் அரசிற்கு மிகப்பாரதூரமான இராணுவத் தோல்வி ஒன்றினை எற்படுத்த ஆரம்பித்துள்ளனர். மிகமுக்கிய பகுதியான யாழ்ப்பாணக் குடாநாட்டை அவர்கள் கைப்பற்றுவதன் மூலம் நாட்டின் அரசியலில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்துவதுடன் உறுதியற்ற ஒரு நிலையையும் தோற்றுவிப்பார்கள். இந்திய அமைதிப்படை விடுதலைப் புலிகளின் நடவடிக்கையால் சேதங்களுடன் பின்வாங்கியது. அந்த அமைப்பினர் இப்போதும் வடக்கின் பல பகுதிகளை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்றனர். கடந்தகால அனுபவங்களானது விடுதலைப் புலிகளுக் எதிராக தலையிடுவது என்பதில் இந்தியா தனது உறுதியை இழந்துள்ளது. தாம் முன்பு செய்தவற்றை எண்ணி இந்தியத் தலைவர்கள் பயப்படுகின்றனர். பாகிஸ்தானும், சீனாவும் சிறீலங்காவிற்கு உதவிகளை அனுப்பலாம். சிறீலங்காவின் பெரும்பான்மை பௌத்தர்கள். ஆனால் தமிழர்களில் பெரும்பான்மையானோர் இந்துக்கள். சீனாவும் பாகிஸ்தானும் விடுதலைப் புலிகளின் வெற்றியானது இந்தியாவின் தற்போதைய இந்துத்தேசியவாத அரசுடன் அவர்களை இணைத்துக்கொள்ளும் என எதிர்பார்க்கின்றன. ஆனால் பெய்ஜிங்கும் இஸ்லாமாபாத்தும் சிறீலங்கா அரசு கேட்கும் அந்த இராணுவத் தளவாடங்களை மற்றும் உதவிப்படைகளை அனுப்ப முடியாத நிலையில் உள்ளன. விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாண வெற்றி 1977ம் ஆண்டில் யுத்தத்தில் தென்வியட்னாம் வீழ்ச்சி அடைந்ததன் பின் பாரம்பரிய இராணுவ நடவடிக்கைகளின் மூலம் ஆசியாவில் ஏற்படும் ஒரு மிகப்பெரும் வெற்றியாக கருதப்படுகின்றது. 'வியட்நாமில் அமெரிக்கப் படைகள் அல்லது ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகள் தோற்றுப் போயிராத அளவிற்கு தரைச் சண்டையொன்றில் யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா அரசு தோற்றுப்போகுமோ' என அஞ்சப் படுகிறது.

*– மார்கட் வோச் செய்தித்தளத்தில் இருந்து*

# கவிக்களம்

## இதுதான் இனி நடக்கும்...!

கொதிக்கிறதா உணர்வு....?
துடிக்கிறதா உயிர்....?
வடிகிறதா கண்ணீர்...?
இப்போது புரிகிறதா
இப்படித்தான்
எங்களுக்குமிருந்தது
மடியில் படுத்துறங்கிய
மகனை – நீ
பறித்துக்கொண்டு போனபோது...
தாய்முலையில்
பாலுறிஞ்சிய பச்சைப் பிஞ்சைப்
பிய்ச்செறிந்தபோது...
காதல்க்கனவோடு
வேறெந்தக் கனவுமின்றிக்
காதல் வானில்
சிறகடித்த
காதற்பூக்கள் கதறக் கதற
உயிரில்
துப்பாக்கிக்குண்டைத்
திணித்தபோது...
சிறுகச் சிறுகத்
தலையில் கல்லும்
மண்ணும் சுமந்து
குருதியைப் பாய்ச்சி
அத்திவாரமிட்டு
அணுவணுவாய் ஆக்கிய
வீடுகள் ஒரு நொடியில்
அடையாளமின்றி
நொருங்கி
அஸ்த்தியாய்ப்போனபோது...
எங்கள் கோவில்களை
எங்கள் தேவாலயங்களை
எங்கள் அடையாளங்களை
இடித்து நீ
சிதைத்தபோது...
முழுநெல்லாய் முற்றிய
நெற்கதிர் வயலை
எரிகுண்டெறிந்து
எரித்துச் சாம்பலாக்கியபோது....
பச்சைச் செழிப்போடு
பரந்து விரிந்து கிடந்த –எம்
தோட்ட வெளிகளில்
தொட்டாற் சுருங்கிகளும்
நெருஞ்சிமுட்களும்
பற்றைக்காடாய்ப்
பரவியபோது....
எங்களது முற்றத்தில்
எங்களது வீதியில்
எங்களது ஊரில் – நீ
ஆர் நீயென அடையாள
அட்டை
கேட்கப் பொறுக்காத
நெஞ்சு, உன்னை
நிமிர்ந்து பார்த்ததற்குச்
சிறைக்கம்பிகளைப்
பரிசளித்தபோது...
தெற்கில் உனது
சிங்கக்கோட்டையும்
சிங்களப் பேரினவாதப்
பிசாசுகளும்
எங்களைக்கொன்று
உலகுக்குப் பயங்கரவாதம்
அழியப்போர்
புரிகிறோம் என்றபோது.....
வசந்தம் வராதா......
எமக்கு நல் வாழ்வு வராதா...
ஏக்கங்கள் பெருமூச்சுகளாய்
வெளிப்பட்டபோது...
சரி எல்லாம் போகட்டும்!
எங்களைக்காத்து
எங்களுக்காய்த்
தங்களைத் தந்த – எம்
மாவீரக்கண்மணிகள்
உறங்கிய இல்லங்களை
உழுதுமுடித்து
இறுமாந்து –நீ
இழிவு செய்தபோது..
இப்படித்தான் இருந்தது
எங்களுக்கும்!!
கொதித்துத் துடித்துக்
கண்ணீர் வடித்தழுதோம்
எவனுக்காவது
எங்களைப் பற்றிய
எண்ணமிருந்ததா...?
இல்லை இதுவும்
ஒரு இனம்
இவர்களும் மனிதர்கள்
மதித்தானா ஒரு மனிதன்?
இல்லவே இல்லை!
உலகோடு சேர்ந்து
உழக்கினீர்கள்
எங்கள் தேசம் இலங்கை...!
இங்கு பிரிவா...?
இல்லைக் கூடாது
நடத்துவோம் யுத்தமென்று
சிந்தார்த்தன் புதல்வர்கள்
சீறினர்.. எம்மில்
சீண்டினர் எப்பவும
இப்போது புரிந்திருக்கும்
ஆனையிறவு அடியோடு
இப்போது புரிந்திருக்கும்
பூனைகளில்லை நாங்கள்
புலிகளென்பது...!
இதுதான் இனி நடக்கும்...
எங்களது மண் எங்கள்
வசமாகும் வரை
ஓயாத அலை தொடரும்...!
அஞ்சாதே சிங்களமே...!
உனது பூமி
உனக்குத்தான் – அதில்
எமக்கு எந்தவித
ஆட்சேபமுமில்லை
எமது பூமி – அதை
உனக்குத்தாரைவார்க்க நாம்
தயாராயில்லை...!
அறிந்துகொள் – இது
எமது யுகம்
இப் யுகம் எமக்கே
சொந்தமானது.

*– புதிய நிலா –*
*ஜேர்மனி*


**NÆRKØB -DKS Video**

Danmark பதறேஸ்சியா
மாநகரில் (Nærkøb) நியர்குப் DKSVideo
ஸ்தாபனத்தாரின் மற்றும் இரு சேவைகள்

இடமாற்றம் 01.09.99 முதல் NÆRKØB ரவல்ஸ் கு 'Mony Exchence

**புதிய முகவரி**

NÆRKØB ரவல்ஸ் 5
Vestcenter, Venvsvej-10, 7000 Freclericia, Danmark.
தொலைபேசி: 75915840 - 75915841 / Fax: 75915842

**Nærkøb Travels®**

*Nærkøb* Travels புதிய நவீன படுக்கை வசதிகள் கொண்ட பஸ்சேவை - வாரம் 3 நாட்கள்

| | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark - London- | 540Kr | 890Kr |
| Danmark - Paris | 358Kr | 574Kr |
| Danmark - Hambvrg | 205Kr | 327Kr |

இலையுதிர்கால மலிவுப் பயணச்சீட்டுகள் October கடைசிவரை பாரிஸ் சென்று அதே பஸ்சில் திரும்பிவர 398 Kr மட்டுமே
பிரான்ஸ் நாட்டில் இருக்கும் டிஸ்னிலான்ட் (Disny Land Paris) சென்று திரும்பிவர 6.78 Kr மட்டுமே
2 வயதிற்குமேல் 12 வயதுக்குட்பட்டவருக்கு 598 Kr மட்டுமே
உடன் தொடர்புகொண்டு ஆசனங்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள்: 75915840 - 75915004
Fax 75915842 Fax 75915806

**Nærkøb Money Transfer**

15 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த இடத்துக்கும் கொடுக்கவோ/ பெற்றுக்கொள்ளவோ முடியும்.
இந்த Money Exchange அரச அங்கிகாரம் பெற்ற ஒரு நிறுவனம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள்.

**இவ்வாரம் முதல் Okotober 30* திகதி வரை**
மலிவான விமானப் பயணச்சீட்டுக்கள்.
Copenhagen - Colombo - **3,200 Kr** மட்டும் **(Tax 165 Kr)**
Copenhagen - Colombo - India (திருவனந்தபுரத்திற்கு) -
**3800 Kr + Tax 185 kr**



# யாழ். குடாவில் சிறீலங்கா இராணுவம் ?

யாழ்.குடா மீட்பிற்கான இறுதி யுத்தம் என சர்வதேச செய்தித்துறைகளால் வர்ணிக்கப்படும் ஓயாத அலைகள்-3 இன் நான்காவது கட்டத் தாக்குதல்கள் விடுதலைப் புலிகளால், நன்கு திட்டமிட்ட முறையில் மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆனையிறவுப் பெரும் படைத்தள மீட்புடன் வேகம் பெற்ற இந்த யுத்த முன்னெடுப்பானது, இடையே இடையே சில நாட்கள் ஓய்ந்து போயிருந்தன. பளையை விடுதலைப் புலிகள் மீட்டெடுத்ததுடன் சற்று ஓய்ந்திருந்த சண்டைகள் சில நாட்களின் பின் கிளாலியில் ஆரம்பமாகியபோது சிறீலங்காப் படைத்தளபதிகள் தமது வியூகங்களின்படி சண்டைகளை விடுதலைப் புலிகள் முன்னெடுப்பதாக நம்பினார்கள். கிளாலியில் சண்டைகள் நடந்துகொண்டிருக்க, விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்களைக் கொடிகாமம் பகுதியூடாகவும் நேராக ஏ9 வழியாகவும் தொடர்வார்கள் எனக் கருதிய படைத்தலைமையானது தங்களது கனரக எறிகணை படைத்தொகுதியை மிருசுவில் கொடிகாமம் பகுதிகளில் அமைத்திருந்தது. இடைக்கிடையே அப்பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இராணுவம் எதிர்பார்த்திராத புதியதொரு முனையில் மீண்டும் ஓயாத அலைகள் ஆரம்பமாகியது.



யாழ்கடல் நீரேரிப்பகுதியின் ஊடாக நகர்ந்த கடற்புலிகளின் அணிகள் ஒருபுறமாகவும், கேரதீவு ஊடாக ஏற்கனவே நிலைகொண்டிருந்த அணி இன்னொரு புறமாகவும் சாவகச்சேரி பிராந்தியத்தினூடாக மற்றுமொரு அணியும் மும்முனைகளில் நகர்வுகளை மேற்கொண்டு சிறீலங்காவின் படைநிலைகள் மீது மிகக் கடுமையான தாக்குதல்களை நடாத்தின. இதன் பின்னர் நாவற்குழியின் யாழ்.குடாவிற்கான பாலம் உட்பட்ட ஒரு பகுதி விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. சாவகச்சேரிப் பகுதியில் தனங்கிளப்பு, கோவிலாக்கண்டி போன்ற பகுதிகளில் அமைந்திருந்த சிறீலங்காவின் படைத்தளங்கள் முற்றாக தாக்கியழிக்கப்பட்டன. முதலில் சாவகச்சேரியிலும் யாழ்.குடாவிலும் மோதல்கள் தொடர்வதை சிறீலங்கா அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும், வழியற்ற நிலையில் தமது படைகள் பாதுகாப்பு நிலைகளை மீண்டும் மாற்றியமைத்துள்ளார்கள் என்றும், பாதுகாப்புக் காரணங்களுக்காக அவை அவசியமானதாக இருப்பதாகவும் அது கூறியது. யாழ்.குடாவில் ஓயாத அலைகள் படையணிகளின் நகர்வுகளைப் பற்றிக் கூறிய ஒரு இராணுவ ஆய்வாளர், சதுரங்க விளையாட்டின் நகர்வுகள் போன்று அவை உள்ளன என்றும், இராணுவத் தலைவர்களே நினைத்துப்பார்க்க முடியாத வகையில் இந்நகர்வுகள் அமைகின்றன என்றும் தெரிவித்துள்ளார். இப்போது யாழ். நகரின் சுற்றுப்பகுதிகளில் விடுதலைப் புலிகளின் படையணிகள் நிலைகொண்டுள்ளன. கொழும்புத்துறை, பாசையூரின் ஒருபகுதி, அரியாலை, மணியம்தோட்டம், நெடுங்குளம், புங்கங்குளம், கச்சேரியடி போன்ற பகுதிகளில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு நிலைகள் அமைக்கப்பட்டு இறுதியான தாக்குதலுக்கான நடவடிக்கைகள், இக்கட்டுரை எழுதப்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில் மேற்கொள்ளப்பட்டுவருவதாக களமுனைச் செய்திகள் தெரிவித்தன. சில வேளைகளில் இவ் இதழ் வெளிவரும் வேளையில் யாழ். நகரில் விடுதலைப் புலிகள் கொடியேற்றியும் இருக்கலாம்.

ஓயாத அலைகள்-3ன் புதிய இராணுவ நகர்வுகளை விடுதலைப் புலிகள் நாவற்குழிப் பகுதியில் ஆரம்பித்ததானது, கிளாலி மற்றும் தென்மராட்சியின் சில பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் படையினரின் விநியோகங்களை கேள்விக்குறியாக்கியுள்ளது. ஏ9 நெடுஞ்சாலை மீண்டும் துண்டாடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண நகரில் இருந்து 5 கிலோமீற்றர் தொலைவில் உள்ள நாவற்குழிப் பாலத்தின் ஒருபகுதி விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதுவும், தனங்கிளப்பு கோவிலாக்கண்டி தளங்கள் தகர்க்கப்பட்டதாலும் சிறீலங்கா இராணுவம் தென்மராட்சியின் சில பகுதிகளிலும் கிளாலியிலும் உதவிகளோ விநியோகங்களோ அற்ற நிலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் அவர்களுக்கான ஒரே வழி யாழ். கடல்நீரேரியூடான வெளியேற்றம் மட்டுமே. சிறீலங்காக் கடற்படையின் விசேட படகுப் பிரிவான 52-3 ன் பிரிகேட் தலைமையகமும் சிறீலங்கா இராணுவத்தின் 53வது படைப்பிரிவின் சில அணிகளும் கிளாலிப் பகுதியில் நிலைகொண்டுள்ளன. இப்பகுதிகளில் இரவுபகலாக தொடர்ந்தும் எறிகணைத் தாக்குதல்கள் விடுதலைப் புலிகளால் நான்கு முனைகளினூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதே வேளை, வடமராட்சியின் நாகர்கோவில் பகுதியில் அமைந்துள்ள கடற்படை மற்றும் இராணுவ முகாம்களின் இருப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் படையணிகள் கொடிகாமம் பகுதியை நோக்கி நகர்வினை ஆரம்பித்துள்ளனர். இந்நகர்வின் மூலம் நாகர்கோவில் படைமுகாமிற்கான தொடர்புகள் துண்டிக்கப்படலாம். அப்படியானால் நாகர்கோவிலின் இராணுவம் கடல்வழியூடான வெளியேற முயற்சிக்கும்.




யாழ்.நகரின் மையப்பகுதியை நோக்கி விடுதலைப் புலிகள் தாக்குதல்களை அதிகப்படுத்தியிருக்கும் வேளையில் சிறீலங்கா இராணுவம் பீதியின் உச்சத்தை அடைந்துள்ளது. தாம் எப்படியாவது தப்பிப்பிழைக்க வேண்டும் என்கின்ற ரீதியில் ஆயுதங்களை போட்டுவிட்டு மக்களுடன் மக்களாக வெளியேறிக்கொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. யாழ்.நகரின் மத்திய பகுதியில் இருந்தும் இராணுவ முகாம்களை அண்டியுள்ள பகுதிகளில் இருந்தும் பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுமாறு விடுதலைப் புலிகள் வானொலி அறிக்கைகளின் மூலம் கடந்த சில நாட்களாக கோரிவருகின்றனர். அத்துடன் சிறீலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகள் அறிவித்தல்களை விடுத்துள்ளனர். அவ் அறிவித்தலில், 'சிங்களப் படைவீரனே! எமது நிலத்தை ஆக்கிரமித்திருக்கும் நீ உடனடியாக வெளியேறவேண்டும்' எனக் கூறப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இது இப்படியிருக்க, சிங்களத் தலைநகரில் இருந்து உண்மைக்கு புறம்பான தகவல்கள் அப்பாவிச் சிங்கள மக்களுக்கும், வடபுலத்தில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்திற்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. அந்தவகையில், சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா யாழ். குடாவின் இராணுவத்திற்கு மனோதைரியத்தை அளித்தும் வருகின்றார். வெளிநாடுகளில் இருந்து தான் கோரிய இராணுவத் தளவாடங்கள் கொழும்பு நகரை வந்தடைந்துவிட்டன என்றும், அவைகள் விரைவில் யாழ். குடாவிற்கு அனுப்பப்படும் என்றும், துட்டகைமுனுவின் வழி வந்த சிங்களவர்கள் தமிழர்களிடம் தோற்கக்கூடாது என்றும் கூறியுள்ளார். சந்திரிகாவின் இந்த அறிவிப்பும் உலக இராணுவ உதவி என்கின்ற மொழிப்பிரயோகமும் களத்தில் நிற்கின்ற இராணுவத்திற்கும் அப்பாவிச் சிங்கள மக்களுக்கும் வேண்டுமானால் சொல்வதற்கு நியாயமாக இருக்கும். ஆனால், உலகிற்கே தெரியும் சிறீலங்கா இராணுவத்தின் உண்மை நிலை. புதிய இராணுவ தளவாடங்கள் வந்துதான் விடுதலைப் புலிகளுடன் வெற்றி கொள்ள வேண்டும் என்கின்ற நிலை இருக்குமானால் ஒவ்வொரு யுத்தத்தின் பின்பும் சிறீலங்கா பல ஆயிரம் கோடி ரூபாய்களுக்கு ஆயுதங்களை வாங்கித் தானே குவித்தது. அப்படியானால் ஒவ்வொரு முறையும் வெற்றியல்லவா பெற்றிருக்க வேண்டும்? ஆனால் யதார்த்தம் அப்படியானதாக இல்லை. சிறீலங்கா ஆயுதங்களை வாங்கிக் குவித்து யுத்த களத்தில் அவைகளை விடுதலைப் புலிகளிடம் கொடுக்கும் நிலைதான் காணப்படுகின்றது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். இந்த ஆயுதக் கொள்வனவுகளின் மூலம் சிறீலங்காவின் அரச தலைவர்கள் பெரும் இலாபம் அடைகின்றார்கள். ஆனால் அப்பாவிச் சிங்கள இளைஞர்கள் பலிக்கடாக்களாக்கப் படுகின்றார்கள். சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை இப்போது கூறுகின்றார், யாழ்.குடாவில் கடைசி ஒரு இராணுவத்தினன் இருக்கும் வரை யுத்தம் தொடரும் என்று. அந்தக் கடைசி இராணுவ வீரனின் இருப்பு என்பது நாளையோ அல்லது நாளை மறுநாளோ கூட இடம்பெறலாம்.

**புதிய இராணுவ தளவாடங்கள் வந்துதான்**
**விடுதலைப் புலிகளுடன் வெற்றிகொள்ள**
**வேண்டும் என்கின்ற நிலை இருக்குமானால்**
**ஒவ்வொரு யுத்தத்தின் பின்பும் சிறீலங்கா**
**பல ஆயிரம் கோடி ரூபாய்களுக்கு**
**ஆயுதங்களை வாங்கித்தானே குவித்தது.**
**அப்படியானால் ஒவ்வொரு முறையும்**
**வெற்றியல்லவா பெற்றிருக்க வேண்டும்?**

இதுபோன்றுதான் ஜெயசிக்குறுய் காலத்தில் யுத்தத்தின் 96 வீதமான நிலத்தைப் பிடித்து நாம் யுத்தத்தை முடித்துவிட்டோம். இன்னும் நான்கு விகிதமே உள்ளன. அவற்றையும் வெகுவிரைவிலேயே முடித்து விடுதலைப் புலிகளை ஒடுக்கி விடுவோம் எனக் கூறினார் ரத்வத்தை. ஆனால் அந்த நான்கு விகிதம்தான் சிறீலங்காவின் கைகளில் உள்ள நிலையில் 96 வீதமான நிலப்பகுதிகள் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன. அதேபோன்றுதான் இப்போது 'கடைசி ஒரு படைவீரன் இருக்கும் வரை யுத்தம் தொடரும்' என்கிறார் இந்த யுத்தத்திற்கு செல்லாத 'ஜெனரெல்' ரத்வத்தை.

இப்போது யாழ். குடாவிற்குள் சிறீலங்கா இராணுவம் சுற்றிவர நிறுத்தப்பட்டு வருகின்றது. கடல் வழியான முற்றுகை ஒருபுறமும் தரைவழி முற்றுகை மறுபுறமும் என இறுகிவரும் நிலையில் வான் வழியான விநியோகங்களே யாழ். குடா இராணுவத்திற்கு உதவியளிக்கப்போகின்றன.

ஆனால் விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியும் தனது நடவடிக்கைகளை யாழ்.குடாவில் அதிகப்படுத்தும்வேளை, யாழ். குடாவிற்குள் நிறுத்தப்பட்டுள்ள 30,000 வரையிலான இராணுவத்திற்கும் 10,000 வரையிலான பொலிசாருக்கும் விநியோகங்களை சிறீலங்கா எப்படி மேற்கொள்ளப்போகின்றது என்பதுதான் இன்று எழுப்பப்பட்டுள்ள வினா. இவற்றிற்கு முன்னதாகவே இந்த இராணுவத்தின் ஓட்டம் ஆரம்பமாகிவிட்டது. வன்னியில் ஓயாத அலைகள்-3 தாக்கத் தொடங்க, ஓடத்தொடங்கிய இராணுவத்தினர் எல்லைப் பகுதியில் உள்ள சிங்களக் கிராமங்களை சென்றடைந்தார்கள். ஆனால் இங்கு தமிழர்களுக்கிடையேதான் அவர்கள் மீண்டும் போய்ச் சிக்கிக் கொள்ளப் போகின்றார்கள். ஐந்து வருடங்களாக இவர்களது கைகளால் இன்னல்களை அனுபவித்த தமிழர்கள் அந்த சிங்கள இராணுவத்திற்கு எப்படிப் பாதுகாப்பை வழங்கமுடியும்? இறுதியில் அதுவொரு மாபெரும் சரணாகதி ஒன்றிற்கான நடவடிக்கையையே தோற்றுவிக்கும். இப்போதும் கூட காலம் கடந்து விடவில்லை. மனிதாபிமான ரீதியில் சிறீலங்கா இராணுவம் வெளியேற விடுதலைப் புலிகள் அனுமதி வழங்குவார்கள். ஆனால் கனவுலகில் வாழும் சிறீலங்காவின் தலைமையின் முட்டாள்தனமான செயற்பாடுகளால், அந்த அப்பாவிச் சிங்கள இராணுவ இளைஞர்கள் அழிவிற்கு உட்படக்கூடிய நிலைதான் இப்போது ஏற்பட்டுள்ளது.

# எமது வசமாகும் கல

## தமிழீழம் அமையப்போவதை யாராலும் தடுக்க முடியாது

### — வைகோ —

தமிழீழம் அமையப்போவதை யாராலும் தடுக்க முடியாது என ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார். ம.தி.மு.க. வின் ஏழாவது ஆண்டு துவக்க விழாயை முன்னிட்டு புதுக்கோட்டையில் கடந்தவாரம் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், என் தம்பிமார்கள் இரத்தம் சிந்தியும் உயிரைக்கொடுத்தும் தாயகத்தை மீட்கப் போராடிவருகிறார்கள். அவர்களின் போராட்டம் நியாயமானது. சந்திரிகா இராணுவத்திற்கு இஸ்ரேல், பாகிஸ்தான் ஆயுதம் வழங்கி வருகின்றன. போரில் வெற்றிபெற ஆயுதம் முக்கியமல்ல. மன உறுதிதான் முக்கியம். அந்த உறுதி என் தம்பிமார்களின் படையில் உள்ளது. 9 ஆண்டு காலமாக இந்திய அரசு ஈழத் தமிழர்களின் பிரச்சினையில் கசப்பான உணர்வை வெளிப்படுத்தி வருகிறது. இனியும் இந்தநிலை தொடர எங்களால் அனுமதிக்க முடியாது. ஈழத் தமிழர்களின் போர் மீதான உணர்வு தமிழ் இளைஞர்களிடம் நீறுபூத்த நெருப்பாக உள்ளது. அவர்கள் கொதித்து எழும் காலம் வெகு தொலைவில் இல்லை. விடுதலைப் புலிகளின் படையை யாராலும் வெல்ல முடியாது. தமிழீழம் மலரப்போவதையும் யாராலும் தடுக்க இயலாது என அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

## ஆயுதங்களுடன் தப்பி வந்த தமிழ்க்குழுக்களில் சிலர் கைது

யாழ்.குடாவில் சிறீலங்கா இராணுவத்துடன் இணைந்து பல்வேறு மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தமிழ்க் குழுக்கள் தற்போது யாழ்.குடாவை விடுதலைப்புலிகள் மீட்டுக்கொண்டிருப்பதையடுத்து அங்கிருந்து தமிழகத்திற்கு தப்பியோடிக்கொண்டிருப்பது தெரிந்ததே. கடந்தவாரம் இவ்வாறு தப்பியோடிய ஈ.பி.டி.பி. குழுவைச் சேர்ந்த 12 பேரும், ஈ.பி.ஆர்.எல்.எப். குழுவைச் சேர்ந்த 24 பேரும் கரையோரக் காவற்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களிடமிருந்து தன்னியக்க ஆயுதங்களும் துப்பாக்கிக் குண்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## விடுதலைப் புலிகளை நான் முழுமையாக ஆதரிக்கிறேன்

### — பால்தக்கரே —



விடுதலைப் புலிகள் இயக்கத்தை தான் முழுமையாக ஆதரிப்பதாக சிவசேனைக்கட்சித் தலைவர் பால்தக்கரே செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைப் பிரச்சினை பற்றியும் விடுதலைப் புலிகள் இயக்கம் எதற்காகப் போராடி வருகிறார்கள் என்பது தொடர்பாகவும் வைகோ என்னிடம் விளக்கிக் கூறினார். விடுதலைப் புலிகள் நியாயமான கோரிக்கைக்காகப் போராடி வருகிறார்கள். விடுதலைப் புலிகளை நான் முழுமையாக ஆதரிக்கிறேன். இந்தியாவில் புலிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தத்தடையை நீக்கவேண்டும். விடுதலைப் புலிகள் நம்மவர்கள். அவர்களை எதிர்த்துப்போரிட இந்திய இராணுவத்தை அனுப்பத் தேவையில்லை. இலங்கையில் நடக்கும்போர் அந்த நாட்டின் உள் விவகாரம். அதனை அவர்களே தீர்த்துக்கொள்ள வேண்டும். இலங்கைக்கு இராணுவத்தை அனுப்புவதில்லை என்ற வாஜ்பாய் அரசின் முடிவை நான் வரவேற்கிறேன். வாஜ்பாய் அரசு தனது முடிவை மாற்றினால் அதனை எதிர்த்து எமது கட்சி குரல் கொடுக்கும் எனத் தெரிவித்தார்.

## சந்திரிகாவிடம் மனிதாபிமானம் இல்லை

### — டாக்டர் ராமதாஸ் —



கடந்த புதனன்று சென்னையில் பத்திரிகையாளர்கள், விடுதலைப் புலிகள் போரை நிறுத்திய போதிலும், போரை மீண்டும் தொடரவேண்டும் என சந்திரிகா அறிவித்துள்ளது பற்றி உங்கள் கருத்து என்ன எனக்கேட்டபோது, மனிதாபிமான அடிப்படையில் விடுதலைப் புலிகள் நடந்துகொள்கிறார்கள். சந்திரிகாவிடம் இதேபோல் மனிதாபிமானம் இல்லை என்றே தெரிகிறது என பா.ம.க. வின் தலைவர் டாக்டர் ராமதாஸ் பதிலளித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில், இலங்கையில் நடைபெற்றுவரும் ஈழப்பிரச்சினைக்கு தமிழகத்து மக்களும், ஏனைய பிறமாநில மக்களும் பெருமளவு ஆதரவு காட்டி வருவதற்கு பா.ம.க. தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. இப் பிரச்சினையின் ஆழத்தை ஆராய்ந்து தகவல்களை வெளிப்படுத்தும் பத்திரிகைகளுக்கும் பா.ம.க தனது நன்றியை தெரிவிக்க கடமைப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

## அந்நியர்களின் தலையீடு இருக்கக்கூடாது

### — சீன வெளியுறவுத்துறை —

இலங்கையில் அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யாழ்ப்பாணப் பகுதியில் நடக்கும் சண்டையை சீனா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. இந்தப் பிரச்சினையை அந்த நாட்டு அரசாங்கமும், மக்களும் நல்லமுறையில் தீர்த்துக் கொள்வார்கள் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது என சீனாவின் வெளியுறவு அமைச்சின் அதிகாரியான ஜாங் கியு பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா அரசு எந்த விதமான உதவிகளைக் கேட்டதென்பதற்குப் பதிலளிக்க அவர் மறுத்து விட்டார். எனினும் இலங்கையில் நடைபெறும் சண்டையில் அந்நியரின் தலையீடு இருக்கக்கூடாது, எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்.குடாவில் நடைபெறும் போர் நிலவரச் செய்திகள் சீனப் பத்திரிகைகளிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுப்புவதற்கு மறுப்புத் தெரிவித்த செய்திகள் அந்நாட்டு பத்திரிகைகளில் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## ஆயுதம் வாங்க வரி உயர்வு

விடுதலைப் புலிகளுக்கு எதிராக போர் நடத்த, புதிய நவீனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பெரும் நிதி நெருக்கடிக்குள் சிக்கியுள்ள சிறீலங்கா அரசு மதுபானம், சிகரெட் போன்றவற்றிற்கான வரியை அதிகரித்துள்ளது. இந்த வாரம் அறிவிக்கப்பட்ட புதிய விலைகளின் படி, மதுபானம் போத்தல் ஒன்று 10 ரூபாவும், சிகரெட் ஒன்று 50 சதத்தினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வரி அதிகரிப்பினால் 150 கோடி ரூபா வருமானம் அதிகமாகக் கிடைக்கும் எனவும், அவற்றை ஆயுதக் கொள்வனவிற்கு பயன்படுத்த உள்ளதாகவும் சிறீலங்காவின் நிதித்துறையின் தகவல்களில் இருந்து தெரியவருகிறது.

## மனோ ரீதியாக இராணுவம் தோற்றுப்போய்விட்டது

*எப்போது யாழ்ப்பாணம் வீழும்? இதுதான் ஒவ்வொரு சிறீலங்காப் பிரஜையின் மனதிலும் தற்போது உள்ள கேள்வி. விடுதலைப் புலிகளின் இந் நகர்வுடன் யாழ்.குடாப் பிராந்தியம் பெருநிலப்பரப்பில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளது. வவுனியாவின் கடைசி இராணுவ நிலையில் இராணுவம் மிகவும் பலப்படுத்தியுள்ளது. அதற்கு அப்பால் விடுதலைப் புலிகளின் பிராந்தியம்தான். விடுதலைப் புலிகளும் அங்கு சோதனைச்சாவடிகளையும் பாதுகாப்பு அரண்களையும் அமைத்துள்ளார்கள். ஆனையிறவின் வடக்கே அவர்கள் தங்களது (இராணுவத்திடம் இருந்து கைப்பற்றிய) நீண்டதூர கனரக எறிகணை செலுத்திகளை நிறுத்தியுள்ளனர். ஆனையிறவைக் கைப்பற்றிய புலிகள் சிறீலங்கா கடற்படையின் விநியோக வழிகளையும் தகர்த்தெறிந்துள்ளனர். அத்துடன் அவர்களது விமான எதிர்ப்பு தாக்குதல்களின் பயம்காரணமாக, விமானப்படை கூட மிகவும் மட்டுப்படுத்தப்பட்டளவு தாக்குதல்களையே மேற்கொண்டு வருகின்றது. மனோ ரீதியாக சிறீலங்கா இராணுவம் இந்தச் சண்டையில் தோற்றுப்போய்விட்டது. உறுதியும் உயர்ந்த மனோநிலையும் கொண்ட விடுதலைப் புலிகளை இந்த 40,000 இராணுவத்தினராலும் எதிர்க்க முடியுமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது. ஏப்ரல் 21ம் திகதி இடம்பெற்ற ஆனையிறவு வீழ்ச்சியுடன், விடுதலைப் புலிகள் ஐந்து வருடங்களுக்கு முன் தாம் இழந்த அவர்களது முன்னாள் தலைநகரான யாழ்ப்பாணத்தை மீட்கும் நடவடிக்கையின் இறுதிக் கட்ட நடவடிக்கை ஆரம்பமாகியது. அவர்களது தாக்குதல் திறனும் உயர்ந்த திறமைமிக்க யுத்ததந்திரங்களுமே யாழ்ப்பாண மீட்பிற்காக அவர்களுக்கு வலுவை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.*

— அவுட் லுக் இதழில் இருந்து

## பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்

### — கோபிஅனான் —



இலங்கைப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் என ஐ.நா. பொதுச்செயலாளர் கோபி அனான் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அவரது செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் பத்திரிகையாளருக்கு வழங்கிய செவ்வியொன்றில், இலங்கையில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்துவரும் சண்டையில், பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் கவலையளிப்பதாக உள்ளன. பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படாத வகையில் இரு தரப்பும் நடந்துகொள்ள வேண்டும். இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதே சிறந்தது. அப்படியொரு பேச்சுவார்த்தையை நடத்த, நோர்வே அரசு முயற்சி மேற்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

# ரச்சாரத் தலைநகர்

## புலிகள் யாழ்ப்பாணத்தை பிடித்தாலும் இராணுவத்திற்கு ஆயுத உதவி இல்லை

### – வாஜ்பாய் –

விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தை கைப்பற்றினாலும் இலங்கைக்கு இராணுவ மற்றும் ஆயுதத்தை அனுப்பமாட்டோம் என்ற நிலையில் இந்தியா உறுதியாக உள்ளது என இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கடந்த வியாழனன்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், யாழ்ப்பாணத்தை புலிகள் கைப்பற்றினாலும் அது முதல் முறை என்று கூறமுடியாது. ஏற்கனவே அவர்கள் கையில் இருந்ததைத்தான் இராணுவம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கைப்பற்றியது எனவும் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் சிறீலங்காவிற்கு உதவினால் இந்தியா புலிகளுக்கு உதவவேண்டும்

### – வை. பாலசுந்தரம் –

சிறீலங்கா அரசிற்கு பாகிஸ்தான் அரசு இராணுவ தளவாடங்களை வழங்கியுள்ளதாக வெளிவந்துள்ள செய்திகள், தமிழ் இன உணர்வாளர்களை தமிழகத்தில் பெரிதும் பாதித்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகளில் இருந்து அறியமுடிகின்றது.

இந்நிலையில் கடந்த சனியன்று அம்பேத்கர் மக்கள் இயக்கத் தலைவர் வை. பாலசுந்தரம் சென்னையில் பத்திரிகைகளுக்கு வழங்கிய பேட்டியொன்றில், சிறீலங்கா அரசிற்கு பாகிஸ்தான் ஆயுத உதவி வழங்குவது தொடர்ந்தால் இந்தியா விடுதலைப் புலிகளுக்கு அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு முன்வரவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## நாம் ஆயுதம் வழங்கவில்லை பாகிஸ்தான் மறுப்பு!

சிறீலங்காப் படையினருக்கு அதிநவீன போர்த் தளவாடங்களை கொள்வனவு செய்வதில் சிறீலங்கா அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. இதேவேளை பாகிஸ்தான் அரசிடம் சிறீலங்கா உதவியும் கோரியிருந்தது. இதனையடுத்து பாகிஸ்தானிடம் இருந்து பலகுழல் சுடுகலன்களும் அதற்குத் தேவையான சுமார் 1600 வெடிகுண்டுகளும் கப்பல் மூலமாக சிறீலங்காவிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந் நிலையில், சிறீலங்காவிற்கு எந்த ஆயுதங்களையும் பாகிஸ்தான் வழங்கவில்லை என அந்நாட்டின் வெளிவிவகாரத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## செய்தித்தணிக்கை! அமெரிக்கா கண்டனம்

சிறீலங்கா அரசு மேற்கொண்டிருக்கும் கடும் செய்தித்தணிக்கைக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வாசிங்டனில் உள்ள அமெரிக்க அதிகாரி பிலிப்ரீகர் கூறும்போது, பத்திரிகைகள் மற்றும் பொதுமக்களின் சுதந்திரத்தை நசுக்கக் கூடாது எனத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தங்களது கவலையை சிறீலங்கா அரசிற்கு அமெரிக்கத் தூதர் டோன்லி மூலம் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, இலங்கைப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்றை காண முடியுமா என்பது பற்றியும் ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## வைகோ–பால்தக்கரே சந்திப்பு

சிவசேனைக் கட்சியின் தலைவரும் ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ அவர்களும் ஈழவிடுதலைப் போராட்டம் தொடர்பாக சந்தித்துப் பேசியுள்ளனர். கடந்த திங்களன்று இச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. சுமார் ஒன்றரை மணி நேரமாக இருவரும் இலங்கையில் நடைபெறும் இனப் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடியதாகத் தெரியவருகிறது. அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வைகோ, 1995" ஈழத்தமிழர்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற்றப்பட்டபோது அவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவர் பால்தக்கரே எனக் குறிப்பிட்டார்.

## பிரபாகரனுக்கு எதிராகப் பேசினால் தாக்கப்படும் நிலை

### – பண்டிருட்டி –

விடுதலைப் புலிகள் இப்போது சிறீலங்கா இராணுவத்துடன் நடாத்தும் போரில், வெற்றியடைய வேண்டும் என்பதே இன்று தமிழக மக்கள் அனைவரின் மனதிலும் உள்ள எதிர்பார்ப்பாக உள்ளது. இந்நிலையில் இன்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பற்றி யாராவது இங்கு எதிராகப் பேசுவார்களாக இருந்தால் கூட, அவர் தாக்கப்படும் நிலையை அடைவார் என்பதுதான் இன்று இங்குள்ள நிலை. இவ்வாறு முன்னாள் தமிழக அமைச்சர் பண்டிருட்டி இராமச்சந்திரன் பத்திரிகை ஒன்றிற்குப் பேட்டியளிக்கையில் தெரிவித்துள்ளார்.

## நாங்கள் எங்கள் உரிமைகளுக்காகவே போராடுகின்றோம்

### ரஷ்ய வெளியுறவு அமைச்சிற்கு மருத்துவ மாணவர் ஒன்றியம்

தென்னாசிய அமைதிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அச்சுறுத்தலாக உள்ளனர் என ரஷ்ய வெளியுறவு அமைச்சு வெளியிட்டிருந்த கருத்திற்கு ரஷ்யாவில் உள்ள தமிழீழ மருத்துவ மாணவர் ஒன்றியம் மறுப்பு அறிக்கை ஒன்றை வெளியுறவுத்துறை அமைச்சிற்கு அனுப்பி வைத்துள்ளது. அவ் அறிக்கையில், காலங்காலமாக இலங்கைத் தீவின் பெரும்பான்மை இன மக்களால் வஞ்சிக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழ் மக்கள், அவ் அடக்குமுறைக்கு எதிராக அகிம்சை வழியில் நடாத்திய போராட்டங்கள் எல்லாம் ஆயுத முனையில் அடக்கப்பட்டன. இதன் விளைவுதான் எமது இனத்தின் இன்றைய ஆயுதப்போராட்டம். பேச்சுக்களின் மூலம் இவ் இனச்சிக்கலை தீர்த்துக்கொள்ள நாம் எப்போதும் தயாராக இருந்து வந்துள்ளோம். பேச்சுவார்த்தை மூலம் பூசலைத் தீர்த்துக்கொள்ள எமது தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர் மேதகு.வே. பிரபாகரன் அவர்களால் பலமுறை விடுக்கப்பட்ட அழைப்பினை, சிறீலங்கா அரசானது ஏற்கமறுத்து, தமிழர்கள் மீது ஒரு வலிந்த யுத்தத்தினை நிகழ்த்தி வருகின்றது. அரச படைகளால் எமது மக்களுக்கு பெரும் அநீதிகள் இழைக்கப்படும்போதெல்லாம், 'உலகத்தில் ஒடுக்கப்படும் மக்களின் நண்பன்' எனப் பெயர் பெற்ற தங்கள் தேசம் எமக்குக் குரல் கொடுக்கும் என நாங்கள் எண்ணியிருந்தோம்.

முன்னர் தங்கள் தேசத்தால் வெளிப்படையாக ஆதரவளிக்கப்பட்ட வியட்நாம், நிக்கரகுவா தேசங்களை ஒத்த போராட்டமே எமது தாயகத்தில் இடம்பெற்றுவருகிறது என்பதை தாங்கள் மனங்கொள்ள வேண்டுகிறோம். எமது தேசிய விடுதலைப் போராட்டமானது தென்னாசியாவின் அமைதிக்கு அச்சுறுத்தல் என்ற சிறீலங்கா அரசின் பொய்ப்பிரச்சாரத்தினை 'தாங்கள் நம்பிக்கொண்டதையிட்டு' நாம் ஆழ்ந்த வேதனையடைகிறோம்.

எவ்வாறு தங்கள் தேசம் முன்னைய காலங்களில் அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராக வீரஞ்செறிந்த போராட்டங்களை நடாத்தி வந்ததோ அதேபோன்ற ஒரு உரிமைப் போராட்டமே, எமது மக்களின் போராட்டமாகும்.

நாங்கள் எங்கள் உரிமைகளுக்காகவே போராடுகின்றோம். நாங்கள் பிறருடைய இடத்தையோ அல்லது நாட்டையோ ஆக்கிரமிக்கும் நோக்குடன் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கவில்லை. எங்களுடைய பாரம்பரியத் தாயகபூமியில் கௌரவமாகவும், சுதந்திரமாகவும் வாழ்வதற்காகவே நாம் போராடுகின்றோம்.

தங்கள் அறிக்கையின் மூலம், தாங்களும் தங்களுக்கு எவரோ வழங்கிய தவறான தகவல்கள் மூலம் இதனைப் புரிந்துகொண்டுள்ளீர்கள் என்பதை நாங்கள் விளங்கிக்கொள்கின்றோம். என தமது அறிக்கையில் குறிப்பட்டுள்ளனர். இத்துடன் இவர்களால் சிறீலங்கா அரசின் தமிழினப் படுகொலைகளை விளக்கும் ஒளிப்பிழை நாடாக்களும் அனுப்பி வைக்கப்பட்டன.

## சிறீலங்காவின் இவ்வாரக் கதைகள்...

☺ வீரர்களே..! நீங்கள் கடந்தகாலத் தோல்விகளைக்கண்டு துவண்டு விடாதீர்கள். நடந்தது நடந்ததாக இருக்கட்டும். இனிமேல் நடப்பது நல்லதாக இருக்கட்டும். நமது தவறுகளை திருத்திக் கொண்டு, எதிரியை தோற்கடிக்க முழுமூச்சுடன் களம் இறங்குவோம். தாய் மண்ணை விடுவிக்க வேண்டும் என்று உங்கள் இரத்தம் கொதிப்பதை நான் நன்றாக அறிவேன். உங்களுடைய ஆர்வத்தை யாராலும் குறைத்து மதிப்பிட முடியாது. எதிரிகளை முறியடிக்கும் திறமை உங்களுக்கு உண்டு. உங்களுக்கு தேவையான அதிநவீன ஆயுதங்கள், இராணுவ உபகரணங்கள் வந்துகொண்டு இருக்கின்றன. அடுத்த சில வாரங்களுக்குள் அது உங்கள் கைகளுக்கு கிடைத்துவிடும். புதிய ஆயுதங்களால் நம்மைப் பலப்படுத்திக்கொண்டு போர்க்களத்தில் ஆவேசமாகப் போரிடுவோம். எதிரியின் துப்பாக்கிகளை மூடமாக்கி வட இலங்கையை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிப்போம்.



☺ அரசு பிறப்பித்துள்ள அவசரகாலச் சட்டங்கள் தமிழர்களுக்கு எதிரானது அல்ல. யாழ்ப்பாண நிலைமைகள் கட்டுக்குள் வந்ததும் இந்தச் சட்டங்கள் வாபஸ் பெறப்படும். ஆனையிறவில் ஏற்பட்ட தோல்வி தற்காலிகமானது என்றாலும் மோசமான பின்னடைவு என்பதை மறுக்க முடியாது. புலிகளை அடக்க வேண்டுமானால் நாடுமுழுவதும் போர்க்காலச் சூழ்நிலையில் இருக்கவேண்டும். அதனால்தான் இவ் அவசரகால சட்டங்களை அமுல்ப்படுத்தினேன்.

*– சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா*



☺ சமரசப் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தைப் புலிகள் கைப்பற்றி விட்டால் அவர்களின் கை ஓங்கிவிடும். அதை அனுமதிக்கக் கூடாது. அதற்கு முன்னர் அதனை அவர்களின் கைகளில் சிக்கிவிடாமல் தடுக்கவேண்டும்.

தற்போதுள்ள அரசியல் இராணுவ சூழ்நிலையில் இந்தியாவின் மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொள்வதுதான் சிறந்தவழி. இந்தியாவின் உதவியுடன் இனப் பிரச்சினைக்கு நாம் தீர்வுகாண வேண்டும். முடிந்தால் 1987ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைக் கூட மீண்டும் அமுல்ப்படுத்தலாம்.

*– சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க*



☺ புலிகளின் மிரட்டலுக்குப் பயந்து இராணுவத்தை வாபஸ் பெறமாட்டோம். கடைசிச் சிப்பாய் உயிருடன் இருக்கும் வரைக்கும் இராணுவம் போராடும். யாழ்ப்பாணத்தை புலிகள் கையில் ஒப்படைக்க மாட்டோம். யாழ்ப்பாணத்தில் இராணுவம் இன்னும் வலுவாகத்தான் உள்ளது. ஆனையிறவுப் பகுதியில் படையினருக்கு பின்னடைவு ஏற்பட்டது உண்மைதான். ஆனால் நாம் போரில் தோற்றுவிட்டதாக அர்த்தம் கொள்ளக்கூடாது. புலிகளின் கைவசம் உள்ள ஆனையிறவுப்பகுதியை இராணுவம் மீண்டும் கைப்பற்றும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. ஆனையிறவில் கடந்தமாதம் நடந்த சண்டையில் 388 பேர் பலியாகி 2,000 பேர் காயமடைந்தனர்.

*– சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை*

நாற்று

சிறுகதை

# விட்டு விடுதலையாகி...

வந்தது நேற்றுப்போல இருக்கிறது. அவள் இந்த மண்ணை மிதித்து பத்தாண்டுகளாகிவிட்டது. எத்தனை உற்சாகமான பருவம். அவளும் மற்றவர்களைப்போல பாடசாலையும், படிப்புமாகத்தானே திரிந்தாள். பெற்றவர்களுக்கு அவளும் புவனனும் மட்டுமே பிள்ளைகள். செல்லப் பெண்ணாகத்தான் வளர்த்தாள். படிப்பில் கெட்டிக்காரியானதால் பாடசாலையிலும் ஆசிரியர்கள், மாணவிகளினதும் மதிப்பைப் பெற்றிருந்தாள். புவனாவிற்கு பதினேழு வயது. நாடு விடுதலைக்காக எழுச்சியடைந்த ஆரம்ப காலம். அவள் மனதிலும் விடுதலை உணர்வுகள் திரண்டு போய்த்தான் இருந்தன. அண்ணன் புவனன் தன்னுடன் அனுப்பும்படி தகப்பனை வற்புறுத்திக்கொண்டிருந்தான்.

க.பொ.த. பரீட்சை எடுத்துவிட்டு வாழ்க்கையின் அடுத்த படிக்காய் முயற்சித்துக்கொண்டிருந்த வேளையில் அமைதி காக்கவென்று வந்த இந்திய இராணுவம் தமிழனின் அறிவு ஜீவிகளைக்கூடத் தேடி அழித்துக் கொண்டிருந்த அந்தக் கொடூரமான நேரத்தில்தான் பெற்றோரின் வற்புறுத்தலில் ஐரோப்பிய அகதியாகிவிட்ட அண்ணன், தங்கையைப் பிரியமுடியாத வேதனையில் கடிதம்மேல் கடிதமாய் தூது விட்டுக்கொண்டிருந்தான். எவ்வளவோ மறுத்தாலும் அண்ணனின் பாசத்துக்கும், பெற்றவர்களின் வற்புறுத்தலுக்குமாய் பணிந்து தன் கனவுகளையும், உணர்வுகளையும் சொந்த மண்ணில் புதைத்துவிட்டே விமானமேறியிருந்தாள். அப்போது உணர்வுகளைப் புதைத்தவள் உள்ளத்தையும் புதைத்துவிட்டு வந்திருந்தால் இன்று இவ்வளவு வேதனை வந்திராது. கவலையைப்போல் மனிதரை அரிப்பது வேறு எதுவுமில்லை.

பிடரியில் யாரோ தாக்கியது போன்ற உணர்வில் திடுக்கிட்டு எழுந்தாள். அப்போதுதான் கதிரையிலேயே தூங்கிவிட்டதையும், பழையநினைவுகள் திரைப்படமாய் ஓடிக்கொண்டிருந்ததையும் உணர்ந்தாள். சுவரோடு மோதிவிட்டதில் தலை பயங்கரமாக வலித்தது. ஆனால் மனவலியோடு ஒப்பிடுகையில் இது ஒன்றுமில்லை.

இன்னும் கணவன் வீடுவந்து சேரவில்லை. சுவர்க் கடிகாரம் பத்துமணி காட்டியது. பகலில் அப்பாவியோல் சோம்பிக்கிடக்கும் வெற்றிச்செல்வன் ஆறுமணிக்குத்தான் வீட்டைவிட்டுப் புறப்பட்டான். அதுவரை சொல்வதற்கெல்லாம் விளங்கியது பாதி, விளங்காதது பாதியாகத் தலையாட்டுவான். ஆனால் இரவில் அவன் முகமே மாறிவிட்டிருக்கும். நண்பர்களைச் சந்தித்தேன் என்று மட்டும் காரணம் சொல்லும் அவன் சுயமாய் வீடு திரும்புவதில்லை. அவன் நண்பர்களிலும் புவனாவுக்கு எரிச்சல்வரும். ஒருவனின் நண்பர்களைப் பார்த்து அவனைப்பற்றித் தெரிந்துகொள்ளமுடியும் என்பதற்கு முழுமையான எடுத்துக்காட்டு வெற்றியும் நண்பர்களும்தான்.

பொறுப்பில்லாதவனுக்கு என்ன பொழுதுபோக்கு, என்ன நட்பு, நினைத்தால் கோபம் தலைக்கேறும். இவர்களின் கூட்டத்தில் இன்னும் எத்தனை பெண்கள் தன்னைப்போல் கண்ணீர் விடுகிறார்களோ என்று தோன்றியது அவளுக்கு.

மகன் பாபு தனக்குள் கோபமாக முணுமுணுத்துக்கொண்டு புரள்வது தெரிந்தது. அவனையும் இப்போது பாடசாலைக்கு அனுப்புவதில்லை. ஐந்து வயதான அவனையும் புவனன்தான் வற்புறுத்தி ஒரு சமூகசேவகியின் ஆதரவினால் பாடசாலையில் சேர்த்திருந்தான். அதைக்கூட ஏதாவது காரணம் சொல்லித் தடுத்துவிடுவான். கணவனின் குணத்தை இன்னும் விளங்க முடியவில்லை புவனாவுக்கு. பாடசாலைக்குப் போகமுடியாத கோபம் அந்தப் பிஞ்சின் புரளலில் வெளிப்பட்டது. அவளால் ஒன்றும் செய்ய முடியாது.

இருவருக்கும் வதிவுரிமை இல்லை. குடும்பம் ஓடுவதே புவனனினதும், வெற்றிச்செல்வனின் ஒரே சகோதரியான செல்வியினதும் ஆதரவினால்தான்.

புவனாவுக்கு தமையனிலும் தகப்பனாரிலும் கூட ஆத்திரம் வந்தது. அவள் வந்து சேர்ந்ததும் அவளை படிப்பிப்பதில் கவனம் செலுத்திய புவனன் அவளை வேலைசெய்யவிடவில்லை. வேலை செய்திருந்தால் அப்போதே வதிவுரிமை பெற்றிருக்கலாம். அப்பாவும் தனது பிடிவாதத்தால் அவளது திருமணத்தை முடித்திருந்தார். அவள் சற்றும் எதிர்பாராத ஒரு குணவானை ஏதோ குருட்டு நம்பிக்கையில் அவள் வாழ்க்கைப் பயணத்தின் துணையாக திணித்துவிட்டாரே. அவன் முட்டாளாக இருந்திருந்தாலும் சமாளித்து வாழ்ந்துவிடலாம். ஆனால் இவனைப் போன்ற ஒருவனுடன் எப்படி வாழ்ந்து தொலைப்பது. என்ன பிறவி? ஒன்றுக்கும் சேராத இரண்டுங்கெட்டானாய்!....

மகனது முதுகில் லேசாகத்தட்ட அவன் மீண்டும் உறங்கிப்போனான். நேரமும் பத்தரையாகிவிட்டிருந்தது. அவளோடு தொலைக்காட்சியும் மௌனமாக விழித்திருந்தது. தொலைக்காட்சியை எரிச்சலோடு எட்டி நிறுத்தினாள். அதுவும் புவனன் வாங்கித் தந்ததுதான். அவள் இப்பொழுது ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டிய கட்டாயம்.

திருமணமான புதிதில் வெற்றி ஒரு அராபிய உணவுச்சாலையில் வேலை செய்தான். ஓரளவு வாழ்க்கை மகிழ்ச்சியாக ஓடிக்கொண்டிருந்தது. பிரச்சினைகள் இல்லாமலில்லை. அனைத்தையும் தீர்த்துவிட முடியும் என்ற உறுதியான நம்பிக்கை புவனாவுக்கு இருந்தது. வெற்றி கொஞ்சம் முன்கோபி. கோபம் அவள்மீது வெளிப்படும் வரையில் பரவாயில்லை. ஆனால் வேலைசெய்யும் இடங்களில் காட்டினால்?.... சம்பளம் கொடுத்த வேலைக்கு வைத்திருப்பவன் அதிகாரம் செலுத்துவது ஒன்றும் ஆச்சரியமான விடயமில்லையே. திருமணம் முடிந்து பாபுவும் பிறந்து ஆறுமாதமான பின்புதான் அவனது அகதி விண்ணப்பம் இறுதி முறையாக நிராகரிக்கப்பட்டது. அதனைத் தெரிந்துகொண்ட முதலாளி அதுவரை அவனுக்குச் சம்பளத்தோடு கொடுத்து வந்த உபரிப்பணத்தை நிறுத்த முடிவு செய்தபோதுதான் பிரச்சினை ஆரம்பித்தது. வேலைக்கே அனுமதி இல்லாத உனக்கு என்ன மேலதிகச் சம்பளம் என அவன் மறுத்ததும் சலனமின்றி ஓடிக்கொண்டிருந்த வாழ்க்கை நதியின் ஓட்டம் தடைப்பட்டுப்போனது.

'அநியாயத்துக்கு அவனுக்கு அடிச்சுக்குடுக்கேலாது'

என்று கூறி வேலையை விட்டவன்தான். அதன்பிறகு புவனா ஒரு புது வெற்றியைக் கண்டாள். அதுவரை அன்பானவனாகக் கண்ட கணவனின் புதிய முகம் அவளுக்கு அதிர்ச்சியைத் தந்தது. பின்பு அவன் புதிதாகத்தேடிய வேலையிடங்கள் எல்லாம் வெகு விரைவில் கசந்துபோனது. முன்பே ஓரளவுக்கு பழக்கமாகி விட்டிருந்த மது வழக்கமாகிவிட்டது. எப்படித்தான் மற்றவர்கள் குடியைக் கெடுப்பதற்கென்றே மதுவைக் கண்டுபிடித்தார்களோ என்று அவளுக்கு ஆத்திரமாக இருக்கும். அவன் தனது சுயரூபத்தைக் காட்டும்வரை அவனது மதுப்பழக்கத்தை ஏதோ நாகரீகத்தின் சின்னமாகத்தான் கருதினாள். மனதுக்குப் பிடித்த பொழுதுபோக்கு, நாவுக்குப் பிடித்த உணவு என்பது போலத்தான் மதுவை உபயோகித்து வந்தவன், இப்போ தான் பிறந்ததே மதுவுக்காகத்தான் என்பதுபோல வாழ்கிறானே!

பாபுவைக் கொஞ்சியே எவ்வளவோ நாட்களல்ல வருடங்களாகி விட்டன. பாபுவைப் பொறுத்தவரையில் தாயை, அவர்கள் கூட இருந்தே மிரட்டிக்கொண்டிருக்கும் ஒரு வெளியாள் வெற்றி. தகப்பன் என்ற உறவையே பாபு மறந்து விட்டிருந்தான். மழலையிலேயே ஒருநாள் தனக்கு தகப்பன் வேண்டாம் என்று தாயிடம் கூறிவிட்டான். புவனா அவனை அப்படிச் சொல்லக்கூடாது என்று அடித்ததும் அதனால் அழுதழுதே அவனுக்கு காய்ச்சல் வந்ததும் புவனன் சில நூறு பிராங்குகளை வைத்தியச் செலவுக்குக் கரைத்ததும் அவளுக்கு ஞாபகம் வந்தது.

புவனனிலும் சிலநேரம் கோபம் பொங்கும். பெண் சுதந்திரம், நவீனத்துவம், சமதர்மம் என்றெல்லாம் பேசும் அவனும் அப்பாவியான அண்ணியை மிரட்டித்தான் வைத்திருந்தான். தன்மீது அவன் வைத்திருக்கும் அதீத அன்பு அவளை மௌனிக்க வைத்திருந்தது. ஆனாலும் அண்ணன் அண்ணிக்கு எந்தக் குறையும் வைப்பதில்லை. தனது போக்கிற்கு இடையூறு வரும்போது மிரட்டுவானேதவிர மற்றப்படி அண்ணிக்கோ பிள்ளைகளுக்கோ எந்தக்குறையும் வைப்பதில்லை. அண்ணியையும் மொழி படிக்க வைத்திருக்கிறான். அவள் பெயரிலும் பிள்ளைகள் பெயரிலும் தனித்தனி வங்கிக்கணக்குகள் ஆரம்பித்து குறிப்பிட்ட தொகைப் பணத்தை நிரந்தரவைப்பில் போட்டிருக்கிறான். வேலைக்கே செல்லாத அண்ணி கையிலும் பணப்புழக்கம் இருக்கும். அவள் செலவுகளையும் தேவைகளையும் கட்டுப்படுத்தமாட்டான். இதனால் அண்ணியை மிரட்டினாலும் தன் கணவனை விட பரவாயில்லை என்றே நினைத்தாள்.

வெற்றி தானும் வேலைக்குப் போவதில்லை, அவளையுமல்லவா வேலைசெய்ய அனுமதிக்கமறுக்கிறான். அவளும் எத்தனையோ தடவை பக்குவமாக எடுத்துச் சொல்லியிருக்கிறாள். எத்தனை நாட்களுக்குத்தான் மற்றவர்கள் தயவில் வாழ்வது. அண்ணனும் பாவம்தான். இரண்டு பிள்ளைகள். அண்ணி குடும்பத்தினர் அண்ணியை எதிர்பார்த்தபடி, வவுனியாவில். அவளது பெற்றோர் இந்தியாவில். இத்தனையும் பார்த்துக்கொண்டு அவளுக்கும் இங்கு உதவி செய்வதென்பது அவ்வளவு இலகுவல்ல. என்னதான் பாசபந்தங்களுக்குக் கட்டுப்பட்டாலும் அவனும் எவ்வளவுதான் சிரமப்படுவது. அவனைவிடக் குறைந்த சம்பளத்தில் வேலைசெய்யும் எத்தனையோபேர் காரும், சொந்தவீடும், கைத்தொலைபேசியுமாகத் திரிய அவன் இன்னும் அந்தச் சிறிய வீட்டில் வாழ்வது நிச்சயமாக பணத்தைச் சேர்க்கவல்ல என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் பிறரது உழைப்பிலேயே வாழும் வெற்றி, தாங்கள் வாழும் இந்த ஓரளவு வசதியான வீடு ஏதோ தன் வருமானத்திற்குத் தகுதியாக இல்லை என்பதாய் குறைப்பட்டுக் கொள்வான். எல்லாம் நண்பர்களை அழைத்துக்கொண்டு கும்மாளமடிக்க முடியாதே என்ற கவலைதான். இதை அவள் ஒருநாள் அவனுக்கு விளக்க முயற்சித்ததில், கன்னம் புண்ணாகி அன்றிரவு முழுவதும் தலையணையை நனைத்திருக்கிறாள். அண்ணனுக்கும், அம்மாவிற்கும் மனவேதனைகள் அதிகமாகும், பாபுவின் எதிர்காலம் பாழாகிப்போய்விடும் என்ற நினைப்பில் வேதனைகளைத் தனக்குள் புதைத்துக்கொண்டு அமைதியாக இருக்கிறாள்.

ஒரு தடவை வெற்றி இரண்டு நண்பர்களுடன் வீட்டில்வைத்துக் குடித்துவிட்டு அவளுடன் சண்டை பிடித்தத்தில் வெறுத்துப்போனவளாய் அண்ணன் வீட்டிற்குச்சென்றுவிட்டாள். இனி எக்காரணம் கொண்டும் இந்த வீட்டிற்குத் திரும்பக்கூடாது எனும் உறுதி அவள் மனத்தில். ஆனாலும் இரண்டு நாள் கழிவதற்குள் வெற்றி தொலைபேசியில் மன்னிப்புக் கேட்டதிலும், அவள் தாய் மனம் வருந்தியதிலும் தனது மனத்தை மாற்றிக்கொண்டு திரும்பிவந்தாள். ஆனாலும் அவன் திருந்துவது மாதிரி நடித்தானே தவிர, திருந்துவதாகத் தெரியவில்லை.


அழைப்பு மணி ஒலிக்க கதவைத் திறந்தாள். லேசாகத் தள்ளாடிக்கொண்டே வந்தான் வெற்றி. பின்னிரவு இரண்டு மணி. இறுதி மெற்றோவில் வந்திருப்பான், அல்லது அவனது நண்பர்கள் யாராவது காரில் கொண்டுவந்து விட்டிருக்கலாம். புவனா நாளை ஒரு புதிய வேலைக்குச் செல்லவேண்டும். அதுவும் அண்ணியின் சிநேகிதி மாலதி ஒழுங்கு செய்திருந்தாள். ஒரு பணக்கார நோயாளிப் பெண்ணுக்கு பகல்முழுவதும் தாதியாய் பணிபுரிய வேண்டும். சம்பளம் அதிகமில்லை. ஆனாலும் வதிவுரிமையோ, வேலை செய்வதற்கான அனுமதியோ இல்லாத நிலையில் யார் வேலை கொடுப்பார்கள். எத்தனை நாட்களுக்கு பிறரை நம்பியிருப்பது. முதலில் மறுத்தாலும் அவளது வற்புறுத்தலினால் இன்று பகல்தான் அரைமனதாகச் சம்மதம் சொல்லியிருந்தான் வெற்றி. அவனது அனுமதி அவளுக்கு தேவையில்லாவிட்டாலும் சமூகத்திற்காகப் பெற வேண்டியதாயிற்று. மனதுள் இருந்த கோபத்தைப் பொறுத்துக்கொண்டு இரவு



(தொடர்ச்சி 20ம் பக்கம்)

– இணுவையூர் பவன் கணபதிப்பிள்ளை –

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வி சங்கீதா யோகநாதன், செல்வன் சசிதர் சோமசுந்தரம், செல்வி வதனா வரதராஜா பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற . சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.




# கவிதை முற்றம்

## அறிவும் பயனும்

இரும்புத் துண்டு கிடந்தது;
எடுத்து வீசி எறிந்தனர்!
கருமான் ஒருவன் கண்டனன்;
காய்ச்சிக் கத்தி செய்தனன்!



எலும்புத் துண்டு கிடந்தது;
எடுத் தெறிந்து சென்றனர்!
எலும்புக் காரன் கண்டனன்;
எடுத்துப் பிடிகள் செய்தனன்!

தகரம் ஒன்று கிடந்தது;
தூக்கி வீசி எறிந்தனர்!
தகரக் காரன் கண்டனன்;
தகரக் குவளை செய்தனன்!

துரும்பும் நமக்குப் பயன்படும்!
தோன்றும் பொருள்கள் யாவுமே,
அறிவுள் ளார்க்குப் பயன்படும்!
அறிவில் லார்க்குப் பயனில்லை!

*– பெருஞ்சித்திரனார் –*

*நன்றி: 'தமிழ்ச் சிட்டு'*

# அறிந்து கொள்ளுங்கள்

## சிலந்திகள்

பல சிலந்திகள் மனிதர்களுக்குத் தீங்கு எதுவும் செய்யாதவை. ஒரு சிலவே கடித்தால் விசம் ஏறும். சிலந்திகளுக்கு எட்டு கால்கள் இருக்கும். தலையும் தொண்டையும் சேர்ந்து ஒரு பகுதியாகவும் வயிறு ஒரு பகுதியாகவும் இருக்கும். இவை முட்டையைச் சுற்றிப் பந்து போலப் பட்டு நூலைச் சுற்றிவைக்கும். குஞ்சுகள் பொரிந்ததும் காற்றினால் அடித்துச் செல்லப்பட்டு வேறிடத்தையடையும். நூற்றுக்கணக்கான குஞ்சுகள் ஒரே சமயத்தில் வெளிப்படும். இவை எல்லாமே ஒரேஇடத்தில் வாழமுடியாதல்லவா? அதற்காகத்தான் இயற்கையே இவ்வாறு செய்துள்ளது.



சிலந்திகள் இயல்பூக்கமாகவே வலை பின்னக் கற்றுக் கொள்கின்றன. பூச்சிகளைப் பிடிக்கவே வலை பின்னுகிறது. ஒரு சுரப்பி வெளியிடும் திரவமே வலை பின்னும் நூல் ஆகிறது. வலையில் அகப்பட்டுக்கொண்ட பூச்சியிடம் விரைந்து சென்று கடித்து விசத்தை பாய்ச்சி செயலிழக்கச் செய்யும். அப்போதே ஜீரண நீரையும் அதில் சுரக்கும். அப்படியே விட்டுவிட்டுப் போய்விடும். சிறிது நேரத்தில் பிடிபட்ட பூச்சியின் உள்ளுறுப்புகள் சிலந்தியின் ஜீரண நீரினால் கூழ்போலாகிவிடும். பசிக்கும்போது இரையிடம் வந்து அந்தக் கூழை உறிஞ்சிவிடும். பூச்சியின் மேலுறை வலையில் தொங்கிக்கொண்டிருக்கும்.

தவளைகள், பல்லிகள், சிறு பறவைகளைப் போராடிக் கொன்று தின்னும் பெரிய சிலந்திகளும் உள்ளன. சிலந்திகளால் உண்ணாமலே பல நாட்கள் இருக்க முடியும். உடலில் நிறைய உணவைச் சேமித்து வைத்துக்கொள்கின்றன. ஆண் சிலந்தியின் கால் முனையில் அதன் கலவியுறுப்பு அமைந்துள்ளது. பெண்தான் உருவத்தில் பெரியதாக இருக்கும். இணைகூடியதும் பெண் பெரும்பாலும் ஆணைத்தின்றுவிடும்.

ஓநாய்ச் சிலந்தி என்பது வலை பின்னுவதில்லை. தரையில் வாழும் சிறு உயிரினங்களைப் பிடித்துத் தின்கிறது. நீரில் வாழும் சிலந்திகளும் உள்ளன. 6 மி.மீ லிருந்து 10 செ.மீ வரை பல அளவுகளில் சிலந்திகள் உள்ளன.

# குட்டிக் கதை படிப்போம்

## திருடியவன் யார்?

சிற்றூர் ஒன்றில், சிறிய மளிகைக்கடை வைத்து வாழ்வு நடத்தி வந்தான் ஒருவன். அவனிடம் உயர் வகையான இரண்டு நன்முத்துகள் இருந்தன. அந்த முத்துகள் அவனுடைய பாட்டனார் வைத்திருந்தவை யாகும்.

அந்த மளிகைக் கடைக்காரன் சுற்றுச் செலவு (பயணம்) செல்ல விரும்பினான். அதனால் அந்த முத்துகளை அடுத்த வீட்டில் உறவினனிடம் கொடுத்து வைத்து, தான் திரும்பி வந்ததும், பெற்றுக்கொள்வதாகக் கூறினான்.

திரும்பி வந்த மளிகைக் கடைக்காரன், உறவினனிடம் தான் கொடுத்து வைத்திருந்த முத்துக்கள் இரண்டையும் திருப்பித் தருமாறு கேட்டான்.

உறவினன் கெடுநினைவோடு, 'நீ என்னிடம் தரவும் இல்லை, நான் அவற்றைப் பார்த்ததும் இல்லை' என்று கூறினான்.

வழக்கு மன்றத்துக்குப் போய் முறையிட்டான் மளிகைக் கடைக்காரன். வழக்குமன்றத் தலைவர் அந்த உறவினனைக் கூட்டி வரச்சொல்லி நெறிமன்றத் தலைவர் பிறகு அந்த உறவினனை வினவினார். அவனோ, 'எனக்குத் தெரியவே தெரியாது' என்று கூறிக்கொண்டிருந்தான்.

சரியான சான்று இல்லை என்று கூறி வழக்கைத் தள்ளிவிட்டார் வழக்கு மன்றத் தலைவர். ஒரு மாதத்திற்குப் பிறகு, முத்துகளை இழந்த மளிகைக் கடைக்காரனை வரவழைத்து, அந்த முத்துகளின் எடை, அளவு, தன்மை ஆகியவற்றைத் தெரிந்து கெண்டார் வழக்குமன்றத் தலைவர்.

அந்த இரண்டு முத்துகளைப் போலவே, தொன்ணூற்று எட்டு முத்துகளை அரண்மனையிலிருந்து வரவழைத்தார்.

முத்துக்களைக் களவாடிய உறவினனை வரவழைத்து, 'நீ முத்து மாலை செய்வதில் திறமைசாலி என்பதைக் கேள்விப்பட்டேன். என்னிடம் உள்ள நூறு முத்துகளையும் எடுத்துக்கொண்டுபோய், அழகான முத்துமாலை ஒன்று அணியம் செய்துகொண்டு வந்துகொடு' என்று கூறி, அவனிடம் முத்துக்களைக் கொடுத்து அனுப்பினார்.

அவன் மிகுந்த ஊக்கத்தோடு முத்துக்களைப் பெற்றுக்கொண்டு வீட்டுக்குச் சென்றான். முத்துக்களைக் கோக்கும் வேலையில் ஈடுபட்டான். ஆனால், 98 முத்துக்களே இருந்தன. இரண்டு முத்துகளைக் காணாமல் பதறினான். தான் தவறி, விட்டு விட்டதாக எண்ணினான்.

உடனே, மளிகைக் கடைக்காரனிடம் களவாடிய இரண்டு முத்துக்கள் இருப்பது நினைவிற்கு வந்தது. அந்த இரண்டையும் சேர்த்து முத்துமாலையை அணியம் செய்து வழக்குமன்றத் தலைவரிடம் கொண்டு சேர்த்தான். முத்துமாலையை வாங்கி அவர் எண்ணிப் பார்த்தார். அதில் நூறு முத்துகள் இருந்தன. மறுநாள், அவனை வழக்குமன்றத்திற்கு வரச் சொல்லி, புன்னகையோடு, 'முத்து மாலை அணியம் செய்பவனே! நான் உன்னிடம் தந்தது 98 முத்துக்கள் தாமே! நீயோ 100 முத்துகளைக் கோர்த்திருக்கிறாய். சேர்க்கப்பட்ட 2 முத்துகள், சில நாட்களுக்கு முன், உன் உறவினனிடமிருந்து, நீ கைப்பற்றிக்கொண்டவை' என்று தீர்ப்புக் கூறினார். தான் செய்த தவற்றை அவன் ஒப்புக்கொண்டான். அதிலுள்ள 2 முத்துக்களை எடுத்து, மளிகைக் கடைக்காரனிடம் சேர்ப்பித்துவிட்டு, அந்த உறவின்னுக்குத் தண்டனை வழங்கினார் வழக்குமன்றத் தலைவர்.

*நன்றி: 'தமிழ்ச்சிட்டு'*

# விடுகதை முற்றம்

## அவன் யார்?



1. ஏறி அமர்ந்தாலும் ஓங்கி மிதித்தாலும் முகம் சுழிக்கமாட்டான். நண்பனாய்த் துணைவருவான். அவன் யார்?
2. அவன் சட்டையை நாம் கழற்றினால் அடிக்காமல் திட்டாமல் அழவைப்பான் நம்மை. அவன் யார்?
3. அந்தரத்தில் படுத்திருப்பான் - நாம் உத்தரவு போட்டவுடன் பல்காட்டி பிரகாசிப்பான். அவன் யார்?
4. புதிய சொந்தக்காரன் சமயத்தில் கடித்துவைப்பான். பழகிப் போனபின் கடிக்காமல் உடன் வருவான். அவன் யார்?
5. என்னோடு பேச என் நண்பன் அழைக்க, தன் பாட்டுக்குச் சிரிப்பான். அவன் யார்?

*–பொன். திருமலை*

**விடுகதைக்கான விடைகள் படங்களாக மாறியுள்ளன**

# வினா-விடை முற்றம்

### கடந்தவார விடை:

1. சகாரா
2. அட்லாந்திக், பசுபிக், இந்தியக் கடல், ஆர்ட்டிக், அண்டார்ட்டிக்.
3. பாரசீகம்
4. வட ரஷ்யாவில்
5. மத்திய தரைக் கடலையும் செங்கடலையும்.
6. கரும்பு, பீற்றூட்.


### வினா-விடை முற்றம்

1. திமிங்கிலக் குட்டிகளின் முக்கிய உணவு எது?
2. பட்டுப் புழுக்களின் உணவு என்ன?
3. பூமி உருண்டை என்பதை முதலில் நிரூபித்தவர் யார்?
4. மனிதனுக்கு எத்தனை விலா எலும்புகள் உண்டு?
5. ஒரு தலை முறை என்பது பொதுவாக எத்தனை ஆண்டுகளைக் குறிக்கும்?
6. மூன்று மூலநிறங்கள் என்பன எவை?

*– விடைகள் அடுத்தவாரம்.*

# கண்டுபிடியுங்கள்

இந்தப் படத்தை மூன்று நேர்க் கோடுகளால் 7 பகுதிகளாகப் பிரிக்க வேண்டும். பிரித்த ஒவ்வொரு பகுதியில் இருக்கும் எண்களின் கூட்டுத்தொகை 30 ஆக இருக்க வேண்டும்.




**முயன்றுபாருங்கள்! முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.**

**கடந்தவார விடை:**

| | | |
|---|---|---|
| 6 | 1 | 8 |
| 7 | 5 | 3 |
| 2 | 9 | 4 |




# அமெரிக்க இராணுவ நீர்மூழ்கிக் கப்பல் பிரிவில் பெண்களிற்குத் தடை

அமெரிக்க இராணுவத்தில் ஏராளமான பெண்களும் பணிபுரிகிறார்கள். ஆனாலும்கூட இன்னும் நீர்மூழ்கிக் கப்பலின் பிரிவுக்குள் பெண்களைக் கடமை புரிய வைக்க யாரும் அனுமதிகொடுக்கவில்லை. இதனால் தற்போது நீர்மூழ்கிக் கப்பல் பிரிவில் நாங்களும் வேலை செய்ய வேண்டும் எனக் கூக்குரல் இடும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறதாம். இது இவ்வாறு இருக்க இவ் இராணுவத்துறையிலுள்ள பெரும்பாலானவர்கள் பெண்களை நீர்மூழ்கிக் கப்பல் பிரிவுக்குள் இணைத்துக்கொள்வதைக் கடுமையாக எதிர்க்கிறார்கள். காரணம் அங்குள்ள இராணுவத்துறையில் பாலியல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அதிகரித்து வருவதுதானாம் காரணம். அதாவது நீர்மூழ்கிக்கப்பலின் நடைபாதை மிகவும் சிறியதாம். அதன் வழியே ஒருவரையொருவர் கடந்து செல்லும்போது நிச்சயம் இடித்துக்கொண்டே நகரவேண்டுமாம்.

அதுமட்டுமல்லாது பெண்களையும் அதற்குள் தங்கவைக்கும்போது அவர்களிற்கென்று தனியான, குளியலறை போன்றவை சேர்க்கப்படவேண்டுமாம். இதனால் செலவு அதிகரிக்கும் என்று இதை எதிர்ப்பவர்கள் காரணம் காட்டுகிறார்கள். ஆனாலும் இது தொடர்பான முடிவை யாரும் இன்னும் உறுதியாக வெளியே தெரிவிக்கவில்லை.

இருப்பினும் பெண்கள் என்றாலே அது உணர்ச்சிகளைத் தூண்டும் ஒரு பொருளாகவே கணிக்கப்படுகிறார்கள் என்பது, இதை மறுப்பவர்களின் எண்ணத்திலிருந்து நன்றாகத் தெரிகிறது. இருப்பினும் அங்கு இடம் பெறும் பாலியல் குற்றச்சாட்டுக்களில் ஆண் வீரர்களிற்கும் ஏன் பங்கிருக்கவில்லை என்பதை இதை மறுக்கும் அதிகாரிகள் புரியவில்லை. அங்குள்ள இராணுவத்தின் சார்ஜெண்ட் பதவியிலுள்ள ஒருவர், 19 பேருடன் பலாத்காரமாக உடலுறவுகொண்டார் எனச் சிறையில் அடைக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## வரண்ட முகத்தோலை நீக்க...

சிலருடைய முகத்தோல் மிகவும் வரண்ட தன்மை உடையதாக இருக்கும். ஈரப்பதம் போதாமையால் தோல் மிகவும் கசக்கி விடப்பட்ட துணிபோல கொஞ்சம் கரடு முரடாக நிறைச்சுருக்கங்களுடன் காணப்படும். இப்படியான தோல்த் தன்மை உடையவர்களின் முகம் மிக இளவயதிலேயே முதுமையானவர்களின் தோற்றத்தைக் கொடுக்கும். இப்படியான தோலுள்ளவர்களிற்கு தாம் விரும்பிய அழகு சாதனப் பொருட்களைக் கூடப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படும். அதனால் இவ்வாறானவர்கள் தங்கள் முகங்களை எப்போதும் எண்ணைப் பசைத் தன்மையோடு வைத்திருக்கப் பார்க்கவேண்டும். இதனால் அடிக்கடி தம் முகத்தின் தசைகளை விறுவிறுப்பாக்கி இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்யவேண்டும். இதற்காக அழகு நிலையங்கள் சென்று வந்தாலும் கூட இலகுவான சில முறைகளை நாளாந்தம் வீட்டிலும் கடைப்பிடிக்கலாம். அதில் ஒன்று 1 கரண்டி முட்டைவெண்கருவோடு 1/4 கரண்டி தேனையும் கலந்து முகம், கழுத்து போன்ற பகுதிகளில் நன்றாகப் பூசவேண்டும். இது காயத்தொடங்கத் தொடங்க, தோல் மிக இறுக்கமாகிவருவதுபோல் இருக்கும். பின் 15 அல்லது 20 நிமிடங்களில் அவ்விடங்களை நன்கு கழுவிவிட்டால் முகம் கழுத்து போன்றவை வழுவழுப்பாக சுருக்கங்கள் நீங்கி இருக்கும். இதை வாரத்தில் 3 முறை செய்தால்ப்போதும். அடுத்து மிகக் குளிர்ந்தநீரில் சிறுதுளி பன்னீர் விட்டு அந்நீரால் முகத்தை அடிக்கடி அடித்துக்கழுவினாலும் முகம் புத்துணர்ச்சி பெறும்.

## விட்டுவிடுதலையாகி...

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

உணவைச் சூடாக்கி பரிமாறினாள்.

உணவை எடுத்து இரண்டு வாய் உண்டவன் அப்பொழுதுதான் ஞாபகம் வந்தவனாய் 'நீ வேலைக்குப் போப்படாது, மனிசியைக்கொண்டு உழைப்பிச்சு சாப்பிடுறன் எண்டு மற்றவை என்னை பகிடி பண்ணுற அளவுக்கு நடக்கவேண்டாம்.'

இன்னும் என்னென்னவோ எல்லாம் சொன்னான். அவளுக்கு வாழ்வின் அனைத்துப் பிடிப்புகளும் வெறுத்துப்போய்விட்டது. மனதுக்குள் ஏதோ சிந்தித்தவளாய் அமைதி காட்டினாள். இருப்பதற்கே அனுமதியில்லை. வேலையில்லை, வருமானம் கிடையாது. இதிலென்ன வெற்றுப் பெருமை?! இன்னும் இவனோடு வாழ்வதில் என்ன அர்த்தமிருக்கிறது. அவள் வேண்டுமானால் இவனுக்காக வாழ்வைத் தொலைக்கலாம். ஆனால் அவள் வயிற்றில் பிறந்ததைத் தவிர பாபு செய்த குற்றம் என்ன? ஏன் அவன் பெற்றவர்கள் இருக்க பிறர் தயவில் வாழவேண்டும். அப்படி வளர்வதாவது போகட்டும். நாளை தகப்பனைப் பார்த்து மகனும் தப்பான வழியில் வளர்ந்தால் வெற்றியைப்போல இன்னுமொரு வாரிசு உலகத்திற்குக் கிடைப்பதில் என்ன பலன். இவனும் தன்னைப்போல் இன்னொரு பெண்ணின் வாழ்க்கையை நாசமாக்குவதைவிட வேறு என்ன செய்துவிடுவான்.

தகப்பன் உடனில்லையே என்பது தவிர எந்தக் குறையும் இல்லாமல் வளர்த்துவிட, அவளுக்குத் தைரியம் இருக்கிறது. இதுவரை பெற்றவர்களும், உடன் பிறந்தவனும், வருத்தப்படுவார்கள் என்பதற்காகக் கைபிடித்த இந்த முட்டாள் சோம்பேறிக்காக வாழ்ந்துவிட்டவள் மிகுதியை தன்மகனின் எதிர்காலத்திற்காக கணவனை உதறிவிட்டால் என்ன?

வெற்றி அரைவாசி சாப்பிட்டுவிட்டு மேசையிலேயே உறங்கிவிட்டிருந்தான். அவள் இப்பொழுது ஒரு முடிவுக்கு வந்துவிட்டிருந்தாள். நேற்றுவரை தன்னை எண்ணி கழிவிரக்கப்பட்டு அழுதுகொண்டிருந்தவள் பழைய புவனாவாக, துணிச்சல்காரியாக, முன்மாதிரியாக மாறிவிட்டாள். இன்றுதான் கடைசிநாள். நாளைமுதல் அவள் கணவன் என்ற பந்தத்திற்காக தனது மகனது வாழ்வையும் பலிகொடுக்கப்போவதில்லை. இந்தச் சிறைக்குள்ளும் இருக்கப்போவதில்லை. மகனுக்கு ஒரு வாழ்க்கையை அமைத்துவிடுவதற்காக சில சம்பிரதாயங்களை விட்டு விலகப்போகிறாள். வெற்றி எப்போதாவது திருந்தினால் பாபு சேர்த்துக்கொள்ளட்டும். கணினி கற்றிருக்கிறாள். இந்நாட்டு மொழி முழுமையாக கற்றுக்கொண்டிருக்கிறாள். இவற்றில் ஏதாவது அவளுக்குப் பக்கத்துணையாக வராதா? அதைவிட தைரியமான மனது.

மெதுவாக எழுந்து தனக்கும் மகனுக்கும் அத்தியாவசியமான பொருட்களை எடுத்து ஒரு பயணப்டையினுள் அடுக்கத் தொடங்கினாள்.

# சோவியத் பொதுவுடமையில் மகளிர் நிலை

சோவியத் ஒன்றியத்தில் 1917 ஐப்பசியில் நடந்த புரட்சிக்குப்பிறகு அங்குள்ள வேலையையும் தன்மையையும் இணக்கமாக ஒன்றிணைத்து மகளிர் விடுதலையை அறிவித்தது. பொதுவுடமையைக் குடும்பச் சட்டங்கள் 1919 ல் இயற்றப்பட்டன. இதன்பின் இச் சட்டங்கள் 1926 இலும் 1936 இலும் திருத்தம் செய்யப்பட்டன. இவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட சட்டங்கிளில் மகளிர்க்கு ஏராளமான உரிமைகள் கொடுக்கப்பட்டன. இவ்வாறு அங்கு மகளிர்க்கு வழங்கப்பட்ட புதுச் சட்டங்கள், மற்றைய சோவியத் ஒன்றிய நாடுகளிற்கும் சென்றடைந்தன. இந்தப் புதுச் சட்டத்தில் மகளிர்க்கான அதிக மருத்துவ கவனிப்பு, கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றை ஊக்குவிக்க அரசால் பெருமளவில் முதலீடும் செய்யப்பட்டது. இதன்பின் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னும் உருக்குலைந்த நாடுகளை சீர்திருத்தம் செய்யும் வேளையிலும் அங்குள்ள மகளிர்க்கு அதிக வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. அவர்களை மேம்படுத்த புதிய திட்டங்களும் செயற்படுத்தப்பட்டன. இருந்தாலும் கூட ஆரம்பந்தொட்டே அங்கிருந்த ஆண் பெண் சமத்துவமின்மை இன்றுவரை தொடர்கிறது. அங்கு இன்றும் குடும்பச்சுமைகளை பெண்கள் தனித்து நின்றே பெரும்பாலும் சுமக்கிறார்கள். அங்கு பெண்களிற்கான கருக்கலைப்பு பெரும் கொந்தளிப்பைக் கொடுத்தது. 1920 களில் போல்செவிக் ரஷ்யா மிகவும் தாராளமான நிலைப்பாட்டை எடுத்திருந்தது. ஆனாலும் 'ஸ்டாலின்' 1936 ல் இக் கருக்கலைப்புக்குத் தடை விதித்தார். இத் தடையானது 1955 ல் தான் நீக்கப்பட்டது. இருந்தாலும் கூட மருத்துவ மனைகளில் பெண்களிற்கான கருக்கலைப்பு மற்றும் அறுவை சிகிச்சை பெறுவது போன்ற நிலைமைகள் படு பயங்கரமானதாகவே இருந்தன. தற்போதுள்ள ரஷ்யக்கூட்டரசில் பெண்களிற்கான கருக்கலைப்பு சட்டபூர்வமானது. இருப்பினும் இலவசமாக இதைச் செய்துகொள்ள இன்னும்தான் அங்கு வழியில்லை. இருந்தாலும் கூட அனாதை விடுதிகளிற்கு வரும் குழந்தைகள் எண்ணிக்கை தற்போது குறைந்து வருகிறது என்பதே இங்கு மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் எனச் சொல்லப்படுகிறது. அது மட்டுமல்ல அங்குள்ள பெண்கள் வெளிவேலை, குடும்பம் போன்றவற்றிற்காக நாளாந்தம் 15 மணிநேரம் கடுமையாக உழைக்கிறார்களாம்.

ஜேர்மனி பொன் (Bonn) நகரில்


யாழ் ரவல்ஸ்
YARL TRAVELS
Köln - Str 79, 53111 Bonn.

உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்
பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்
சிறீலங்கா, இந்தியா, சிங்கப்பூர், கனடா
ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.

தொலைபேசி இலக்கம்: 0228/9652885 – தொலைநகல்: 0228/9652895

GE-Pub.

# புதிய நூற்றாண்டின்
# மாபெரும்
# தமிழர் விளையாட்டு விழா




**பிரசித்தி பெற்ற Dulwich கல்லூரியின் இயற்கை எழில்மிகு மைதானத்தில்** (பிரித்தானிய காவல்துறையினரின் பாதுகாப்புடன்) **5வது வருடமாக நடைபெற உள்ளது.**

*புதிய நூற்றாண்டில் சிறப்பாக தாராளமான அளவில், விதம் விதமான தரமான சுவைமிகு தமிழீழ உணவுவகைகள்....*

33க்கு மேற்பட்ட தமிழீழ பழைய மாணவர் சங்கங்கள் கலந்துகொள்ளும் துடுப்பெடுத்தாட்டம், வலைப்பந்தாட்ட போட்டிகள்..... முதன் முறையாக அறிமுகப்படுத்தப்படும்.

சிறுவர்களுக்கான நீச்சல் போட்டிகள் - வயது (6 -14)

பெரியவர்களுக்கான கரப்பந்தாட்டப்போட்டி (போதிய அளவு விண்ணப்பம் கிடைத்தால் மட்டும்)

சிறுவர்களுக்கான (TETHERED BALLOON) பறப்புகள்

SAM THE SNAKE (28 Foot Long Land Train) + JUNGLE TERRAIN + HUGE BOUNCY CASTLE


தமிழீழ வாழ்க்கை வடிவங்களைச் சித்தரிக்கும் கண்காட்சிகள்

நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு பரிசு - Brand New BMW 316 i SE Compact Car with many extras கண்கவர் வாணவேடிக்கைகள் அனைத்தும் பாரிய அளவில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. மண்ணின் நினைவுகளையும், உணர்வுகளையும் பகிர்ந்திட திரண்டுவாரீர்! கூடிக்களிப்போம்!!

நுழைவு £3 (10 வயதுக்குட்பட்டோர் இலவசம்)

வாகனத்தரிப்பு வசதிகள் போதிய அளவில் உண்டு. கட்டணம் £3/ நுழைவு

இவ்வருட தமிழர் விளையாட்டு விழாவில் கலந்துகொள்ளும் மக்களின் பாதுகாப்பையும், அசம்பாவிதங்கள் எதுவுமின்றி நிகழ்வு நடைபெறுவதையும் முக்கிய கவனத்தில் எடுத்து, பிரித்தானிய காவல்துறையினராலும் (POLICE) ஐக்கிய தமிழர் அமைப்பின் பாதுகாப்புப் பிரிவு பணியாளர்களாலும் (UTO SECURITY) விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, ஆகையால் இவ் வருட நிகழ்வில் கலந்துகொள்ளும் பொதுமக்கள் காவல்துறையினரால் சோதனைக்குட்படுத்தப் படுவதுடன், வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்படும் என்பதையும் அறியத்தருகிறோம். நிகழ்வில் கலந்துகொள்ளும் மக்களின் நலன் கருதியும், நிகழ்வு சிறப்பாக நிறைவேறும் பொருட்டும் மேற்கொள்ளப்படும் இவ் விசேட பாதுகாப்பு ஒழுங்குகளுக்கு அனைவரையும் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.




மேலதிக விபரங்களுக்கு: ஐக்கிய தமிழர் அமைப்பு (UTO)
Tel: 020 - 7403 4554, 0956 - 314 370, 0956 - 329 660)

Pub. Gra.

# கலைந்த சொற்கள் எண்: 54

கீழ் உள்ளவற்றில் 172 சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர் கோட்டிலும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் என இருக்கும். இச்சொற்களை கண்டுபிடித்து கோடிடவும். சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

இவ் அட்டவணையில் பல பழமொழிகள் கலைந்திருக்கின்றன. அவற்றில் 3 பழமொழிகளைக் கண்டு பிடித்து எழுதி அனுப்ப வேண்டும்.

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம் | ம் | ச | ம் | வ | ம | ல் | லா | க | ம் | ரா | டு | ண் | தா | த் | பு |
| வ | ட | அ | க | ம் | ம | தி | ப் | பு | த | ன் | பு | ப் | ரி | ம | கை |
| ந | வ | ட் | ட | ம் | மி | பு | க | ப | த் | தி | ய | ம் | பை | ரை | ரை |
| ன் | உ | ல | க | ம் | து | ண | னி | வு | உ | தி | வ | ந் | த | து | னை |
| ம | வா | க | ம் | ம | ன | ர் | வு | லி | பி | று | க | ண | த் | ந் | சி |
| தி | க் | ன | னை | பு | ம் | வு | லி | மெ | ள | உ | வா | ழ் | கு | ரி | ப |
| பு | ப் | ர | த | ம் | ரி | டு | யி | லி | த் | டு | வா | ல் | த | ப | வி |
| ப் | சொ | ர் | ப | ப | ண் | ல் | தி | த | த | ப் | பி | த் | த | ல் | ட |
| னை | பு | ம் | டு | உ | ப | சொ | ம | ல் | ள் | பு | பு | ட | ரி | ரு | ல் |
| மு | த | ம் | ம் | ய | னி | ன் | அ | ந் | ளு | ளா | ங் | பு | ப் | வி | த |
| க | ர | ன | ர | ன | ன | வ | வ | வ | த | க | மை | து | பு | கு | ர் |
| டு | மு | ன் | ன | வ | ன் | சொ | ர் | லா | ல் | க | ட | த் | தி | சி | ள |
| ங் | பு | மு | ன் | த | பி | பி | ம் | லூ | ம | ன | தி | ல் | து | ன் | த |
| கா | ப் | மொ | னை | ம | ன் | த | ரி | ப | த | மா | த | பை | ப் | ன | சி |
| வ | ழி | ப் | பு | ம் | ல | ம | நி | வ | ன் | ன | ன் | சி | வ | து | ன் |
| ல் | க | பு | ப் | தி | ம | ட | ம் | ர | ய | து | ம | ந் | த | ம் | ன |
| ம் | வ | ம் | ப் | யோ | நி | ண் | ம | ன் | ம | ரு | த | து | ன | னை | ம் |
| ம் | க | ர | ப | ற | ர் | யோ | தி | கு | த | ன் | ன | ந் | ம் | ர் | னை |
| ந | ப | ந | ப | ம் | பி | ல் | கே | னெ | ல் | ன் | வு | ர | வ | வி | வி |
| ம் | ப | ம் | வி | வை | கு | க் | ட | வ | த | டி | ம் | ற | ரு | ற | டு |
| தி | ம் | ப | க | ல | வ | ன் | ன் | ட் | கூ | ம் | கு | தி | பு | கு | க |
| ம் | ப | க | ர | ச | ல் | னெ | ப | ர | க | தி | க் | ப் | த் | ற் | ஞ் |
| பீ | ட | ம் | ஞ் | வ | ஞ் | ச | ம் | ர | தி | த் | ரி | த | ப | ற | ந |
| ம் | இ | ல் | த | சு | பே | வ | க | ம | ல் | ம | சி | னை | வ | ம் | பு |
| வ | ன | ர் | வ | ரு | இ | தா | க் | லு | லை | ணி | ச | வ | ள | ர | க |
| பா | ம் | மீ | தை | ள் | க | க் | து | த் | ழ் | வா | ச | ம் | ம் | கா | ழ் |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கட்டம் | இருவர் | கடகம் | துக்கம் | பவளம் | வம்சம் | கம்மல் | தம்புரா | பகலவன் | உத்தமன் | தள்ளாமை |
| வாடுதல் | மன்னவன் | அன்னியம் | புத்தரிசி | மனதில் | மைத்துனன் | திகழ்தல் | கல்லூரி | முன்னவன் | பின்னம் | துயரம் |
| நிம்மதி | சின்னது | நற்புறவு | குறவர் | கற்பனை | பரகதி | வன்னெஞ்சு | வஞ்சகம் | திருவினை | புறத்தி | மதிப்பு |
| நம்பகம் | தம்பதி | வலம்புரி | நகம் | மெலிதல் | உடுப்பு | மந்தகதி | புத்திமான் | கடத்தி | தவிப்பு | கல்லார் |
| சின்னன் | புதுமனை | வன்மொழி | தமயன் | நிமலம் | தன்மம் | மந்தம் | புருவம் | தன்மனை | மரிப்பு | குப்பம் |
| தரப்பு | தரித்திரம் | தனல் | பேசுதல் | தன்னது | சினப்பை | நவம் | தனவான் | வட்டம் | உளமெலிவு | தள்ளுதல் |
| தப்பித்தல் | மதியிலி | தரிப்பு | தடங்கல் | கனமானது | பின்னனி | புணர்வு | வரம்பு | தனயன் | துன்பம் | தகுதியோர் |
| மதிகேடன் | தனவந்தன் | வந்தது | நிமலன் | திண்மம் | வதனம் | சின்னம் | குற்றம் | கம்பன் | கரகம் | கட்டல் |
| சிரிக்கும் | கடுவினை | தருமன் | வஞ்சம் | இடபம் | நன்மதி | குரல் | கம்பம் | நரம்பு | பரவல் | விம்பம் |
| வடக்கு | கும்பம் | பிறப்பு | வழிப்பு | கழிப்பு | கடுங்காவல் | வன்சொல் | முன்னம் | மிதுனம் | தருதல் | வாழ்த்துரை |
| தந்தம் | வந்தது | பரிந்துரை | குணவதி | பத்தியம் | தளர்தல் | கதம்பம் | உடும்பு | முனைப்பு | புக்ககம் | மரிப்பு |
| மல்லாகம் | மதிப்பு | உத்தம் | பாவம் | நவம் | அகம் | தாமரை | புதன் | இனம் | மீனம் | சிவம் |
| புறம் | காரம் | வாசம் | தில்லை | உலகம் | புதிது | புதுமை | உறுதி | அவல் | வரன் | சிந்து |
| பரல் | விறகு | வம்பு | கமல் | வரவு | குடல் | கூதல் | சலவை | கடம் | பீடம் | கபம் |
| நகம் | மடம் | அவன் | அவர் | தகுதி | விடல் | மெலிவு | பரிவு | முரன் | கமம் | புதர் |
| உண்டு | கனிவு | வாசனை | புகழ் | கள்ளி | புத்தாண்டு | வாழ்த்துக்கள். | | | | |

பழமொழிகள்: 1. ------------------------------------------------

2. ------------------------------------------------

3. ------------------------------------------------

விடைகள் 55 வது கலைந்த சொற்களில்.


பெயர்: ................................................................................................

முகவரி: ................................................................................................

................................................................................................

பிறந்த நாள்: .................................... சந்தாதாரராயின் சந்தா எண்: ....................................

## கலைந்த சொற்கள் எண்–53 விடைகள்



ஈழமுரசின் சென்ற எண் கலைந்தசொற்கள் பகுதிக்கு 170 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள். அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர்களின் விபரங்கள் வருமாறு.

1) செல்வி கௌசிகா சுகுணவசந்தி
93000 Bobigny.
France.

2) வேணுகாயினி அச்சலிங்கம்
94200 Ivry /s Seine,
France.

3) அ.செல்வராஜா
44145 Dortmund,
Germany.

4) T. ராஜி
Eastham,
London E6 3Be.

5) திருமதி சுஜாதா சுதாகரன்
69100 Villeurbanne
France.

LUNE
இவர்களுக்கு Lune International நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

கலைந்த சொற்கள் எண்-54 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்- 55ம், 01 - 07 ஜூன் 2000 ஈழமுரசில் வெளிவரும்.

தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா

கலைந்த சொற்கள் எண்-54 இற்கான விடைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: 26.05.2000
(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

கலைந்த சொற்கள்
Eelamurasu
22, Rue Perdonnet,
75010 Paris, France.

# சிங்கத்தை புலி வெற்றி கொள்கிறது..!

ஈழத்தமிழர் சிந்தும் கண்ணீருக்கும் செந்நீருக்கும் விலையாக 'சுதந்திர தமிழீழம்' உதயமாகும் காலத்தின் கட்டாய நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.

உலகில் எந்தவொரு இனத்து மக்களும் அன்னையின் மடியில் பாலுடன் சேர்த்து அருந்தி தங்கள் ஊனோடும் உணர்வோடும் உயிரோடும் கலந்து வளர்ந்த தாய் மொழியை இழந்து, முகவரியற்ற இனமாக மானம் அழிந்து உயிர் வாழ விரும்புவது இல்லை.

ஈழத்தமிழர்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே அடிமைகளாக ஆக்கப்பட்டதால் மானத்துடன் உயிர் வாழும் உரிமைக்காக ஆயுதம் ஏந்திப் போரிடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்பதே ஈழ விடுதலைப்போரின் அடிப்படை.

இலங்கை 1948-ல் சுதந்திரமடைந்தபோதுகூட இங்கிலாந்தின் 6-ஆம் ஜார்ஜ் மன்னரை ஆட்சித்தலைவராக ஏற்றுக்கொண்டுதான் சுதந்திரம் பெற்றது. அதன்பிறகு கடந்த 50 ஆண்டுகால வரலாற்றில் புத்த மதத்தை அரச மதமாகவும், சிங்களத்தை ஆட்சி மொழியாகவும் நிலை நாட்டிய சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ்மொழியை ஒதுக்கி சிங்களத்தைத் திணித்து தமிழர்களின் தாயக மண்ணில் சிங்களர்களைக் குடியமர்த்தி, தமிழினத்தையே அழிவின் விளிம்புக்குத் தள்ளி இலங்கைத் தீவைச் சிங்களத் தீவாக மாற்றி வந்தனர்.

இதனாலேயே தங்களின் தாயகமான இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் வாழ்ந்து வரும் ஈழத் தமிழர்கள் தங்கள் மொழியையும் இனத்தையும் அழிவிலிருந்து காத்து, இழந்துபோன தங்கள் சுதந்திரத்தை வென்றெடுக்க ஆயுதம் ஏந்திப் போரிடத்தொடங்கினர்.

உலகில் பல நாடுகளில் உள்ள கொரில்லா போர் படைகளில், விடுதலைப்புலிகளின் போர்த்திறனுக்கும், தந்திர, உபாய நடவடிக்கைகளுக்கும் ஈடாக வேறு எந்தவொரு அமைப்பும் இல்லை என்று இந்திய இராணுவத் தளபதி ஒருவரே சொல்லும் அளவுக்கு இந்தப் படையினர் தரைப்போரிலும் கடற்போரிலும் தனித்திறமை பெற்று வியக்க வைத்தனர்.

தமிழீழ விடுதலைக்காக போர்க்களங்களில் போரிட்டு, தற்கொலைப் படைப் பிரிவுகளாகவும் மனித வெடிகுண்டுகளாகவும் சிங்கள இராணுவ முகாம்களில் புகுந்து தாக்குதல் தொடுத்து, எதிரிகளை நடுங்க வைத்தனர். இதன் விளைவாக சிங்களப் படைவீரர்கள் பல்லாயிரம் பேர் தங்கள் இராணுவ உடுப்புகளைக் களைந்து வீசிவிட்டு இராணுவத்தை விட்டே ஓட்டம் பிடிக்கும் மனத்தளர்ச்சிக்கு ஆளானார்கள்.

இலங்கை அதிபர்களிலேயே 'நரிமூளை' கொண்டவர் என்று கருதப்பட்டவரான ஜெயவர்த்தனே தன் ஆட்சிக் காலத்தில் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு 1987-ல் இந்திய இராணுவத்தை 'அமைதிப்படையாக' வரவழைத்து புலிகளின் பலத்தை ஒடுக்குவதற்கு அவர்களைப் பயன்படுத்தினார்.

யாழ்ப்பாணம் போர்முனையில் இன்று சிங்கள இராணுவம் புலிகளிடம் அடைந்திருக்கும் மோசமான தோல்விக்கு அதிபர் சந்திரிகாவும், அவரது குடும்ப ஆட்சியும்தான் காரணம்.

சந்திரிகாவின் தந்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயகே இலங்கைத் தீவின் 3வது பிரதமராகப் பதவிக்கு வந்தவர். ஆங்கிலத்தின் இடத்தில் சிங்களத்தை ஒரே ஆட்சிமொழியாக ஆக்கியவர். 1959-ல் இவர் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் 1960-ல் இவர் மனைவி திருமதி பண்டாரநாயகா பிரதமரானார். சிறிமாவோ ஆட்சியும் தமிழர்களின் உரிமைகளைப் பறிக்கும் ஆட்சியாகவே அமைந்தது. ஆட்சிப் பொறுப்பில் இவர் சர்வாதிகாரியாக நடந்துகொண்டு செய்த மக்கள் விரோதச் செயல்களினால் மக்களின் ஒட்டுமொத்த வெறுப்பைச் சம்பாதித்துக்கொண்டார். இதனால் 1977-ல் ஜெயவர்த்தனேயிடம் ஆட்சியைப் பறிகொடுக்க நேரிட்டது.

திருமதி பண்டார நாயகா மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டு தேர்தலில் நிற்பதற்கும் ஜெயவர்த்தனே தடை விதித்ததால், தேர்தல் கனவை மறந்து தன் வாரிசாக மகள் சந்திரிகாவை தயார்படுத்தினார்.

இலங்கையின் பிரபல நடிகராக விளங்கி எம்.ஜி.ஆர் ஐப் போல ஆட்சியைப் பிடிக்கும் ஆசையில் பின்னாளில் அரசியலில் புகுந்த விஜயகுமார ரணதுங்காவை, சந்திரிகா 1978 -ல் மணந்ததால் அரசியலில் தன் தாயார் இழந்த 'தமிழர்களின் ஆதரவைத் திரட்டி' தேர்தலில் வெற்றிபெற புதிய வியூகங்களை வகுத்தார்.

ஒருமுறை சென்னைக்குத் தன் கணவர் ரணதுங்காவுடன் வந்து, தமிழ்ப் போராளிக் குழுக்களின் தலைவர்களை நேரில் சந்தித்துப் பேசி தமிழர் பிரச்சினையில் தன்க்கு அக்கறை இருப்பதாக விளம்பரப்படுத்திக் கொண்டார்.

எதிர்பாராதவிதமாக விஜயகுமார ரணதுங்கா சிங்களத் தீவிரவாத இயக்கமான ஜே.வி.பி. வன்முறையாளரால் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டதால் அனுதாப அலையுடன் அதன்பிறகு நடந்த தேர்தலில் சந்திரிகா தமிழர்களின் அபிமானத்தைப் பெற்ற வேட்பாளராகப் போட்டியிட்டார். சந்திரிகா அதிபராக வந்தால் ஈழத்தில் உள்நாட்டுப் போரை முடிவுக்குக்கொண்டு வந்து தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவார் என்ற நம்பிக்கை தமிழ் சமுதாயத்தினரிடம் உருவானது.

ஆனால் ஆட்சிக்கு வந்த பிறகு ஈழத் தமிழர்களுக்கு உரிமைகளை வழங்காமல் சமரசத்திட்டம், பேச்சுவார்த்தை என்று கபடநாடகம் ஆடி இராணுவ நடவடிக்கை மூலம் விடுதலைப்புலிகளை ஒழித்துவிடலாம் என்று கனவு கண்டார்.

ஈழப் போரில் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைப் பிடிவாதமாகத் தங்கள் வசம் வைத்திராமல் வாபஸ் பெற்று வவுனியாக் காடுகளில் முகாம் அமைத்து, கொரில்லாப் போர் முறையில் இராணுவத்தை வெல்வதற்கு வியூகம் வகுத்தனர். வவுனியா நகர், யாழ்ப்பாணம் நகர் போன்ற பல நகரங்கள் இராணுவத்தின் வசம் இருந்தன. ஆனால் யாழ்ப்பாணத்தைச் சென்றடையும் நெடுங்சாலை அமைந்த பகுதிகள் புலிகளின் வசம் இருந்ததால் இராணுவத்தின் நடமாட்டம் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டு இருந்தது.

இந்த நெடுஞ்சாலைப் பகுதியை முழுவதுமாகப் புலிகளிடம் இருந்து கைப்பற்றி விடுவது என்று சந்திரிகாவின் தாய்மாமாவும் துணை இராணுவ மந்திரியுமான ரத்வத்தே 'ஜெயசிக்ரு' என்ற பெயரில் புதிய போர் நடவடிக்கையைத் தொடங்கினார்.

'ஜெயசிக்ரு' என்ற சிங்களச் சொல்லுக்கு 'வெற்றி உறுதி' என்று அர்த்தம். புலிகளை ஜெயித்து அவர்களை காட்டுக்குள் முடக்கி வைத்துவிட்டால் பிறகு 4500 சதுர மைல் பரப்பளவுள்ள அடர்ந்த வவுனியாக் காடுகளில் பெரும்பகுதிகளை அழித்து புலிகளை எங்கும் போய் பதுங்க விடாமல் அவர்களை ஒழித்துக் கட்டுவது என்பது ரத்வத்தேயின் 'கனவாக' இருந்தது.

ஆனால் விடுதலைப் புலிகள் 'ஓயாத அலைகள்' என்னும் பெயரில் போர் வியூகம் வகுத்து சிங்கள இராணுவத்தின் முயற்சிகளை முறியடித்து அண்மையில் யானை இறவு இராணுவ முகாமைக் கைப்பற்றினர். போரில் 1000 இராணுவத்தினர் பலியாகவும் மீதமுள்ள இராணுவத்தினர் யாழ்ப்பாணம் பகுதிகளுக்கு ஓடித் தப்பினார்கள். சந்திரிகா அரசுக்குக் கிடைத்த அதிர்ச்சிகரமான தோல்வி இது.

சிங்கள இராணுவக் கோட்டையாக கருதப்பட்ட 'யானை இறவு' முகாம் யாழ்ப்பாணத் தீபகற்பப் பகுதியின் நுழைவு வாயிலாக விளங்குகிறது. இந்த முகாமைக் கைப்பற்றிய பின்னர் இயக்கச்சி, பளை ஆகிய இடங்களில் இருந்த இராணுவ முகாம்களையும் கைப்பற்றி நாகர்கோயில் என்ற இடத்திலிருந்து முன்னேறி பருத்தித்துறை 'துறைமுகத்தைக் கைப்பற்ற புலிகள் போரில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறையின் வீழ்ச்சி சிங்கள இராணுவத்துக்கு உணவு, ஆயுத சப்ளைக்கு பயன்பட்டு வரும் ஒரே தளமான பலாலி விமானத் தளத்தின் வீழ்ச்சிக்கும் வழிவகுத்து யாழ்ப்பாணம் புலிகள் வசம் வருவது உறுதியாகிறது.

யாழ்ப்பாணத்தில் சிக்கிக்கொண்டிருக்கும் 35,000 சிங்கள இராணுவ வீரர்கள் புலிகளிடம் சிக்குவதைத் தவிர வேறு வழியில்லை என்ற சூழ்நிலை உருவான பிறகே பதட்டமடைந்திருக்கும் அதிபர் சந்திரிகா, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளிடம் சிங்கள இராணுவ வீரர்களை மீட்க உதவுமாறு அவசர உதவி கோரி வருகிறார்.

இப்போது உள்ள சூழ்நிலையில் போரில் புதிய வியூகங்களை வகுத்து யாழ்ப்பாணத்தில் படைகளை நிலைநிறுத்திக்கொள்ள வழியே இல்லை. போரை திசைமாற்றும் அளவுக்கு எந்த நாட்டின் உதவியும் சந்திரிகா அரசுக்கு வந்து சேரும் சூழ்நிலையும் உடனடியாக இல்லை.

ஆயினும் யாழ்ப்பாண தீபகற்பத்தில் வாழும் 4 1/2 இலட்சம் தமிழ் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகாத வகையில் புலிகள் போரில் வியூகம் வகுத்து உள்ளனர். உலக வரைபடத்தில் தமிழீழம் தனிநாடாக இடம்பெறும் இறுதிக் கட்டத்தைப் போர் நெருங்கிவிட்டது.

இதுவரை போரில் 12, 000க்கும் மேற்பட்ட வீரர்களைக் களப்பலி கொடுத்திருக்கும் விடுதலைப்புலி இயக்கத்தினர் இனி சுதந்திர தமிழீழம் தவிர வேறு எந்த தீர்வுக்கும் இறங்கி வருவதற்கான வாய்ப்பும் தென்படவில்லை.

இலங்கைத் தீவின் பூர்வீக வரலாற்றைப் பார்த்தால் யாழ்ப்பாணம், கண்டி, அநுராதபுரம் நகரங்கள் ஒரு காலத்தில் தமிழ் மன்னர்களின் ஆட்சியில் இருந்தவைதான். அநுராதபுரத்தை கி.மு. 101 ஆம் ஆண்டில் எல்லாளன் என்ற தமிழ் மன்னர் ஆட்சிபுரிந்தார். இவரை துட்ட கைமுனு என்ற சிங்கள அரசன் வென்று அந்த நகரை சிங்களவர் ஆட்சிக்கு உட்படுத்தினான். எல்லாளனின் பெயரால்தான் 'ஈழம்' உருவானது. கண்டியில் தமிழ் மன்னரை போர்த்துக்கீசியர் வென்று 1505 முதல் 1658 வரை ஆட்சி புரிந்தனர். 1958-ல் போர்த்துக்கீசரை டச்சுக்காரர்களும் அவர்களை இங்கிலாந்து படையினரும் வென்ற பின்னர் தமிழர் ஆட்சி இலங்கைத் தீவில் முடிவுக்கு வந்து இங்கிலாந்தின் காலனி ஆட்சி தொடங்கியது.

சிங்களவர்கள் தங்களை வட இந்தியாவிலிருந்து வந்த ஆரிய வம்சத்தினர் என்று கூறிக்கொள்கின்றனர். 'சின்கா' என்ற சமஸ்கிருத சொல்லுக்கு 'சிங்கம்' என்று பொருள். 'சின்களர்' பின்னர் 'சிங்களர்' ஆனார்கள். தங்

(தொடர்ச்சி 31-ம் பக்கம்)

# சந்தித்தவேளை

இரு வேடம் என்றால் ஆள்மாறட்டம் கட்டாயம் இருக்கும் என்ற வழமையான எதிர்பார்ப்பு மாறாமல் வந்துள்ள இன்னொரு படம் சந்தித்தவேளை. வேலை தேடியலையும் கார்த்திக், திருமணம் செய்து கொண்டால் மகன் நன்றாக வருவார் என்ற காரணத்திற்காக ரோஜாவைத் திருமணம் செய்து வைக்கின்றனர் பெற்றோர். வேலை தேடிச் செல்லும் கார்த்திக்கை தொடருந்தினுள் சந்திக்கிறார், இன்னொரு பணக்காரரான கார்த்திக். இவர் கார் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றின் முதலாளியாக வருகின்றார். இவருக்கு மனைவியாக கௌசல்யா நடிக்கின்றார். தனது ஊதாரித்தனத்தினால் அந்த நிறுவனத்தைக் கண்காணிக்காமல் நஷ்டத்தில் செல்ல வைத்துவிடும் கார்த்திக், இந்நிலையில் நோயினால் தான் இறக்கப்போவதை அறிந்துகொண்டு வீட்டை விட்டு வெளியேறுகிறார். தனது குடும்பத்தின் மீது பாசம்கொண்ட காரணமாக தன்னைப்போல இருக்கும் மற்றக் கார்த்திக்கை தனது வீட்டிற்கு அனுப்பிவைக்கிறார். அங்கு செல்லும் கார்த்திக் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த அவர்களது நிறுவனத்தை முன்னுக்குக் கொண்டுவரக்



கடுமையாக உழைக்கின்றார். இதற்கிடையில், பணக்காரக் கார்த்திக் இறந்துபோக அவரது உடலை உயிரோடு இருக்கும் கார்த்திக்கின் பெற்றோரிடம் ஒப்படைக்க, தனது மகன்தான் இறந்துவிட்டதாகக் கருதி அதிர்ச்சியில் தாயாரும் இறந்துபோக கணவன் இருந்தும் ரோஜா விதவைக் கோலம் கொள்கிறார். அதன் பின்னர் எப்படி இருவரும் இணைகிறார்கள் என்பதே மீதிக்கதை.



கார்த்திக் தனது வழமையான 'டாட்.. டாட்' என்ற வார்த்தைகளை கைவிட்டு சற்று யதார்த்தமாக நடித்துள்ளார். வேலை கேட்டு வரும் தன் மனைவியை விதவைக் கோலத்தில் காணும்போதும் அதிர்ச்சியுடன் பின்தொடர்வதும், தான் உயிரோடு இருப்பதை ரோஜா நம்ப மறுக்கும்போது அதனைப் புரியவைக்க கார்த்திக் முயற்சிப்பதிலும் நடிப்பு நன்றாக அமைத்துள்ளது. வேலைதேடி அலையும் விவேக், வேலைதேடி அலையும் இன்றைய இளைஞர்களின் நிலையை நகைச்சுவையோடு வழங்கியுள்ளார். தனி மனிதர்களைக் கேலி செய்யாத விவேக்கின் இந் நகைச்சுவைகள் ரசிக்கும்படியாக அமைத்திருந்தன. மற்றும் நாசர் தெருக்கூத்து நடாத்தும் நடிகனாக ஓரிரு காட்சிகளில் வந்துபோகிறார். மணிவண்ணன், தலைவாசல் விஜய், சுஜாதா மற்றும் பலரும் வந்துபோகின்றனர். கண்ணெதிரே தோன்றினாள் படத்தினை எழுதி, இயக்கிய ரவிச்சந்திரன் இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனத்தை எழுதி இக்கியுள்ளார். ஜெயனன் வின்சென்டின் ஒளிப்பதிவில் தேவா இசையமைத்துள்ளார்.

சந்தித்தவேளை ஒருமுறை சந்திக்கலாம்!

– *செந்தூரன்*


# சுவிஸ் வாழ் தமிழ் மக்களே!

சிறீலங்காவில் இருந்து உங்களுக்குத் தேவையான ஆவணங்கள் சம்பந்தமான அலுவல்களைச் செய்ய, பெற்றுத்தர உறுதியான முகவர் சேவை இங்கும்!

* பிறப்பு / இறப்பு பதிவு ஆவணங்களை பெற்றுத்தர...
* திருமணப் பதிவு, திருமணமாகாத சான்றுப் பத்திரம்
* அடையாள அட்டை தொலைந்த / புதிதாக எடுக்க...
* உறவினர்களை அழைப்பதற்கான சிறிலங்காவில் சுவிஸ் தூதரக ஆவண ஏற்பாடுகள் (இலங்கையில்)
* கடவுச்சீட்டு பெறத் தேவையான ஒழுங்குகள்
* ஆவணங்கள் மொழிபெயர்த்தும் தரப்படும்.

மற்றும் இவை சம்பந்தமான பலசேவைகளை (விரும்பினால் சுவிஸ் தூதரக உறுதிச்சான்றுடன்) வழங்க காத்திருக்கின்றோம்

* தொடர்புக்கு (சுவிஸ்) 076-5450938 - ராம்

*திங்கள் - வெள்ளிக்கிழமை* 04pm - 10pm
*சனி ஞாயிறு 24 மணி நேரமும்*

Pub. sw

# நோர்வேயில் தேவ ஊழியர் பாஸ்டர் ஜெயம் சாரங்கபாணி


கலந்து சிறப்பிக்கும்

# விடுதலைக் கூட்டங்கள்

*விடுதலை கொடுக்கும் தெய்வம் இயேசு கிறிஸ்து உலகத்தில் உங்களுக்கு உண்டாகும் சாபங்கள், வியாதிகள், விடமுடியாத தீயபழக்கங்கள் (போதை வஸ்த்துக்கள்) மன்நோய்கள் ஆகியவற்றில் இருந்து விடுதலை கொடுக்கிறார்.*

**நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்**

*இவர் இன்றைய இலங்கையினை சமாதானமற்ற நிலையில், நாட்டின் சமாதானத்திற்கும், மக்களின் சுபீட்சமான வாழ்விற்கும் ஒரேவழி தெய்வம்தானென வசனத்தோடும், வல்லமையோடும் நிரூபிக்கும் தேவ ஊழியன்.*



**உங்கள் பிரச்சினை எதுவாயிருந்தாலும் நம் தெய்வத்திடம் பதில் உண்டு.**

**ஒஸ்லோவில்: ஒஸ்லோ தமிழ் கிறிஸ்தவ சபை.**
காலம்: 19/5 வெள்ளி மாலை 6 மணி.
20/5 சனி காலை 10 மணி.
20/5 சனி மாலை 6 மணி.
21/5 ஞாயிறு காலை 11 மணி.

இடம்: **`SARON' GRORUDVEIEN - 38**
**Grorud T - bane stasjonen & buss stasjonen** இலிருந்து பேருந்து இலக்கம் 79 மூலம் 'sagstuveien' என்ற முதலாவது பேருந்து தரிப்பில் இறங்கவும்.

**பேர்கனில்: ஜீவ வசன கிறிஸ்தவ சபை.**
காலம்: 25/5 வியாழன் மாலை 6.30 மணி.
26/5 வெள்ளி மாலை 6.30 மணி.
27/5 சனி மாலை 6.30 மணி.
28/5 ஞாயிறு மதியம் 2.00 மணி.

இடம்: **TABERNAKLET**
**Marken -27**
பிரதான புகையிரத நிலையத்திற்கு முன்பாக அமைந்துள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு: 22252412 (Oslo) & 55343621 (Bergen)
Pastor: Ruben Thavithu & Pastor: Sam Yogi
OTCC. Oslo LWCA Bergen

## வாருங்கள், ஆசீர்வாதமும் விடுதலையும் பெற்றுச் செல்லுங்கள்.

Pub.Nor



**மாய மந்திரம், சூன்யம், நாகதோஷம், மற்றும் வேறு வகையான தோஷங்களையும், பேய் பிசாசு போன்ற துர்ச்சக்திகளை பூசைகள் மூலமாக நீக்குபவர்.**

**பிரச்சினைகளா? உறவு முறைகளில் குழப்பமா? காதல், திருமண விசயங்களா? வேலை, வியாபாரம் குறித்த வினாக்களா? மற்றும் உங்கள் வருங்காலத்தைப் பற்றி அறிந்துகொள்ளத் தொடர்பு கொள்ளுங்கள்**

# ஜோதிடர் கோவிந்தா



**உண்மையான கணிப்புகள்**

1. அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் மற்றும் செனதார் பிராங் நாதன் பரக்கின் வெற்றியைக் கணித்துச் சொன்னேன்.
   *- 16.12.1988-நியூஸ் இந்தியா-நியூயோர்க் நாளிதழ்*
2. சோவியத் யூனியனிலுள்ள ஆர்மீனியாவின் நிலநடுக்கத்தை முன்பே கணித்தேன்.
   *- 27.09.1990 தி மலாய் மையில் - மலேசிய நாளிதழ்*
3. மலேசியாவில் 1990 ஒக்டோபர் பொதுத் தேர்தலில் தேசிய முன்னணி ஆட்சிக்கு வரும் என்று திண்ணமாக உரைத்தேன்.
   *- 25.09.1990 தமிழ்நேசன் - மலேசிய நாளிதழ்*
4. வளைகுடாபோர் ஜனவரி 16.91ல் வெடிக்கும் என்று முன்பே கணித்தேன்.
   *- டிசெம்பர் 90. டி ஸ்டார் - மலேசிய நாளிதழ்*
5. உலக அரசியல் அரங்கில் அரசியல்வாதிகள் கோள்களின் சஞ்சாரத்தால் பல்வேறு நெருக்கடிகளை மேற்கொள்ளக் கூடும் என்று கணித்தேன்.
   *- 10.09.1991 மலேசிய நண்பன் - மலேசிய நாளிதழ்.*
6. தமிழக முதல்வர் ஜெயலலிதா குறித்தும் கணித்துச் சொன்னேன்.
   *- 1992 ஒகஸ்ட் 14ம் திகதிய மலேசிய நண்பன் - மலேசிய நாளிதழ்*
7. சிறீலங்காவின் முன்னாள் அதிபர் பிரேமதாசாவின் அழைப்பிற்கிணங்க கொழும்பு சென்று அவருக்குக் கணித்துச் சொன்னேன்.
   *- நியூஸ் இந்தியா டைம்ஸ்-09.09.1994 - நியூயோர்க் நாளிதழ்.*

ஜோதிடர் கோவிந்தாவைத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**96, The Broadway,**
**Southall Middlesex,**
**London UB1 1QF**
**Tel: 0208-5711999**


Pub.Lon285

# உலகத்தின் மிகச்சிறிய கைத்துப்பாக்கி

## ஒரு தமிழரின் 'கின்னஸ்' சாதனை

புகலிடத்தில் நமது இளம் தலைமுறை வியத்தகு சாதனைகளை படைத்துக் கொண்டிருக்கின்றது. அந்த சாதனை வரிசைகளில் இன்னொருவராக வந்து இணைந்துகொள்கிறார் குணசிங்கம் சாரங்கன் என்ற 23 வயது இளைஞர். யாழ். சங்கானையை தனது சொந்த இடமாகக்கொண்ட சாரங்கன், 1987ல் புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டிற்கு வந்து சேர்ந்தவர். இங்கு அவர் மேற்கொண்ட கடுமையான முயற்சிகளால், இன்று அவரது பெயர் கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்யப்படும் அளவிற்கு அவரைக் கொண்டுவந்துள்ளன. ஈழத் தமிழர்கள் பல்வேறு சாதனைகளின் மூலம் கின்னஸ் புத்தகங்களில் தங்களது பெயர்களை பதிவு செய்துள்ளனர். ஆனால், அவற்றில் இருந்து மாறுபட்டு முதற்தடவையாக தொழில்நுட்பத்தில் ஒரு சாதனையைப் படைத்துள்ளார் இவ் இளைஞர்.


ஒரு சாதாரண கைத்துப்பாக்கியின் அளவு, அதனது தொழில்நுட்பங்கள் பற்றி உங்கள் அனைவரும் ஓரளவு தெரிந்திருக்கலாம். ஆனால் இவர் தயாரித்துள்ள இக் கைத்தப்பாக்கி(பிஸ்ரல்) சாதாரண ஒரு கைத்துப்பாக்கியில் இருக்கும் இயக்கங்கள் அத்தனையையும் கொண்டுள்ள உலகின் மிகச்சிறிய ஒரு கைத்துப்பாக்கியாகும். 2.8 சென்ரி மீற்றர் நீளமும்,



2.3 சென்ரி மீற்றர் உயரமும் கொண்ட இத்துப்பாக்கி, உலகிலேயே மிகச்சிறியதும், இயங்கக்கூடிய நிலையிலும் தயாரிக்கப்பட்டது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இப் புதிய சிறிய ரக கைத்துப்பாக்கியில் 30 பாகங்கள் (மகசினுடன் சேர்த்து 35 பகுதிகள்) பொருத்தப்பட்டுள்ளன. இவை பகுதி பகுதியாகக் கழற்றிப் பூட்டும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. 2001ம் ஆண்டில் வெளிவரும் உலக கின்னஸ் புத்தகத்தில், வெளிவரவிருக்கும் இப் புதிய சாதனையாளரை நாம் சந்தித்தபோது, தான் எவ்வாறு இந்த வெற்றியை சாதித்தார் என்பதை ஈழமுரசின் வாசகர்களோடு பகிர்ந்துகொள்கின்றார்.

'எனது 16 வயதில் முதன் முதல் ஒரு கைத்துப்பாக்கி செய்வதற்கு முயற்சி செய்தனான். ஒரு நாள் முழுவதும் முயற்சி செய்தும் முடிக்கமுடியவில்லை. ஒரு கிழமை சென்றாலும் முடிக்க முடியாது என்று நினைத்து அதனை கைவிட்டுவிட்டேன். பிறகு 17 வயதிலை 'ரிவோல்வர்' ஒன்றைச் செய்வதற்கு முயற்சி செய்தேன். அதனை செய்வது இலகுவாக இருந்தபடியால், அதனையும் அரைவாசியுடன் விட்டுவிட்டேன். நானே என்னுடைய சொந்த கற்பனையில் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என்று முயற்சி செய்தேன். அதனது வெளிப்பாடுதான் இந்தச் சிறிய கைத்துப்பாக்கி. இதனை நான் தயாரிப்பதற்கு எனது நண்பர் ஒருவரும் ஊக்கம் தந்தார். இந்நிலையில் இதனை இரும்பில் தயாரிப்பது என முடிவு செய்தபோது, இரும்பில் செய்வது சட்டரீதியாக சில பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதால் அதனை கைவிட்டு, பவுணில் செய்வதற்கு முடிவு செய்தேன். நகைத் தொழில் பற்றி நான்கு ஆண்டுகள் பிரெஞ்சு தொழில்முறைக் கல்லூரியில் கற்றிருந்ததால் எனக்கு அதன்மூலமாகச் செய்வது மிகவும் சுலபமாக தெரிந்தது. ஆனால் அதனை செய்ய ஆரம்பித்த பின்னர்தான் அதிலிருக்கும் கஷ்டங்கள் எனக்குப் புரிய ஆரம்பித்தன.

இத் துப்பாக்கியில் பொருத்தப்பட்டிருக்கும் சில சில பகுதிகளை சொல்லலாம். ஆனால் அவற்றை செய்வதென்பது மிக மிக கடினமான காரியம். இதன் உட்பகுதிகளில் பொருத்தப்பட்டிருக்கும் பகுதிகள் எல்லாம், மிக மிகச் சிறிதானவையாக இருக்கும். ஒன்று தவறிக் கீழே விழுந்தால் அதனை தேடி எடுப்பதென்பதும் மிகவும் கஷ்டம். அப்படியான ஒரு நிலையிலை ஒரு வருடமாக, கிட்டத்தட்ட 96ல் தொடங்கி 97ம் ஆண்டில் பெப்ரவரியில்தான், இத் துப்பாக்கியை செய்து முடித்தனான். இதனைவிட குறைந்த பாகங்களுடனும் செய்யலாம். ஆனால் அது இன்னும் மிக மிகக் கடினமானதாக இருக்கும். இதனை கின்னஸ் புத்தகத்திலை பதியவேண்டும் என்பதற்காக செய்வில்லை. ஒரு பொழுதுபோக்கான முயற்சியாகத்தான் இதனை மேற்கொண்டனான். செய்து முடித்த பிறகு நான் படித்துக் கொண்டிருந்த (நகைத் தயாரிப்பு) கல்லூரிக்கு கொண்டுசென்று காட்டிய போது, அங்குள்ள ஆசிரியர்கள் இதனை கின்னஸ் புத்தகத்திற்கு அனுப்பினால் வாய்ப்புக் கிடைக்கலாம் என்று உற்சாகப்படுத்தினார்கள். கடந்தவருடம் இலண்டனில் உள்ள கின்னஸ் தலைமைப் பணியகத்திற்கு சென்று இப்படியொன்று தயாரித்திருப்பதைப் பற்றிக் கூறினேன். அவர்கள் அதனைக் கேட்டுவிட்டு இப்படியான ஒன்று சாத்தியப்படாது, எதற்கு கொண்டுவந்து காட்டுமாறு கூறினார்கள். அதன் பின்னர் அதனை கொண்டு சென்று காட்டியபோது அவர்க்ள் மிகவும் வியந்துபோனார்கள். அதனைப் பார்த்துவிட்டு




அவர்கள் இதனை கின்னஸ் புத்தகத்தில் பதியலாம் எனக்கூறி அதற்கான சான்றிதழ் பத்திரத்தையும் வழங்கினார்கள்' எனக் கூறுகின்றார். தனது அடுத்த முயற்சி பற்றி 'தற்போதில்லை' எனக்கூறும் சாரங்கன், அடுத்த முயற்சிகளுக்கான 'திட்டங்களில்' ஈடுபட்டுள்ளதாகவும் கூறுகின்றார்.

நாம், 'மிக விரைவில் விடியலைச் சந்திக்கப்போகும் எமது தேசத்திற்கு பொறியிலாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், வடிவமைப்பளர்கள் என நிறைய அறிவியலாளர்கள் தேவை' என்றபோது, 'நிச்சயமாக எனது பங்களிப்பு தாய்நாட்டிற்கு இருக்கும்' எனக்கூறும் சாரங்கனின் முயற்சியை, ஈழமுரசு பாராட்டுவதோடு, அவரது முயற்சிகள் மேலும் தொடர்வதற்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றது.

**இப் புதிய சிறிய ரக கைத்துப்பாக்கியில் 30 பாகங்கள் (மகசினுடன் சேர்த்து 35 பகுதிகள்) பொருத்தப்பட்டுள்ளன. இவை பகுதி பகுதியாகக் கழற்றிப் பூட்டும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.**




GUINNESS WORLD RECORDS

CERTIFICATE

IN 1997, GOLDSMITH GUNASINGHAM SARANGAN FROM JAFFNA, SRI LANKA, FASHIONED A HANDGUN FROM 22 CARAT GOLD MEASURING A WORLD RECORD 2.8 CM LONG AND 2.3 CM HIGH

Keeper of the Records
GUINNESS WORLD RECORDS LTD


டென்மார்க்கில் இருந்து முதல் முறையாக வெளியாகும் TeleCard

**Universal Tele Card**

எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் இன்னும் ஏராளமான நாடுகளுக்கும் அதிக நேரங்களுடன் வெளிவருகிறது Universal Tele Card என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள் DKS-NÆRKØB ஸ்தாபனத்தினர்.

மொத்தமாகவும், சில்லறையாகவும் கொள்வனவு செய்யவிரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
Korskaervej - 104, 7000 Fredericia-DK
Tlf: 75915804 - 75915805 - Fax: 75915842

எம்மிடம் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு டென்மார்க் நாட்டின் அங்கீகாரத்துடன்
★ பற்றுச்சீட்டு வழங்கப்படும்.
★ அத்துடன் UNIVERSAL Tele Card தொடர்புகளுக்கு ஏற்படும் இடையூறுகளை உடனுக்குடன் கவனிக்க இதற்கான தொழில்நுட்ப அலுவலகம் பரடோ நகரில் காத்திருக்கிறது என்பதை உத்தரவாதப்படுத்துகிறார்கள் DKS நியர்குயிப் ஸ்தாபனத்தார்.




Pub

# வாரம் ஒரு விடயம்

## மார்க்சிசம்

கார்ல்மாக்ஸ் என்ற ஜேர்மனிய யூதரால் வகுக்கப்பட்டதே மார்க்சிசம் ஆகும். மார்க்சிசமானது ஒரு வரலாற்றுத் தத்துவத்தையும், புரட்சியான திருத்தங்களையும் உள்ளடக்கிய ஒரு பொதுவுடமைக் கொள்கைத் திட்டமாகும்.

**வரலாறு பற்றிய தத்துவம்:**

மார்க்சிசத்தின் வரலாறு பற்றிய தத்துவம் கூறுவது இதுதான். முதலாளித்துவ முறையில் அமைந்துள்ள பொருளாதார, சமூக, அரசியல் அமைப்புக்களெல்லாம் காலப்போக்கில் தேய்ந்து தேய்ந்து மறைந்துவிடும் முதலாளித்துவக் கொள்கையிலேயே அதன் அழிவிற்கான காரணங்கள் அல்லது வித்துக்கள் அடங்கியுள்ளன.

உலக வரலாற்றின் நிகழ்ச்சிகள் எல்லாம் பொருட்களை உற்பத்தி செய்தல், பங்கீடு செய்தல் ஆகிய பொருளாதாரச் செயல்களினாலேயே உருவாக்கப்பட்டுள்ளன. தனி மனிதர்களாலோ வேறெந்தக் காரணியினாலோ மனித வரலாறு உருவாக்கப்படவில்லை. பேரரசுகளின் தோற்றங்கள், வீழ்ச்சிகள், சமய நெறிகளின் தோற்றம், வளர்ச்சி, புதிய நாடுகளின் கண்டுபிடிப்பு, புதிய அறிவியல்கள் கையாளப்படுதல், புதிய தொழில் முறைகள், போர்கள், உடன்படிக்கைகள் முதலியனவெல்லாம் பொருளாதார நோக்கங்களையே அடிப்படையாக உடையன என்பது மார்க்சிச தத்துவத்தில் அடங்கியுள்ள விடயமாகும். அதுமட்டுமல்ல, அதன் வியாக்கியானங்கள் மேலும் தொடர்ந்து செல்கின்றன.

மூலதன வசதி உடையவர்களே தொழில்களை நடாத்துவதிலும், வர்த்தகம் செய்வதிலும், நிதி வசதிகளைத் திரட்டிக்கொள்வதிலும், பாராளுமன்ற தேர்தல்களில் போட்டியிடுவதிலும் வெற்றி பெறுதலிலும் அமைச்சரவைகளை அமைத்து நாட்டை ஆளுதலிலும் பங்குபெற்று முன்னணியில் நிற்கின்றார்கள். அவர்களுக்கு இவ்வாறான உயர்ச்சியைத் தந்தது, 'தொழிலாளர்களின் உழைப்பிலிருந்து அவர்கள் எடுத்துக்கொண்ட ஊதியமே' எனவும் மார்க்சின் தத்துவம் குறிப்பிடுகின்றது. தொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய ஊதியத்தை முதலாளிகள் எடுத்துக்கொள்வதற்குரிய காரணம் மூலதனமானது தனியுரிமையாக ஒரு சிலர் பெற்றிருப்பதேயாகும். இவ்வாறான முதலாளித்துவ வகுப்பிற்காக மூலதனமற்ற தங்களுடைய உழைப்புத் திறன் ஒன்றையே நம்பியிருக்கும் தொழிலாளர்கள், கடுமையாக உழைத்தும் அவர்கள் தரும் கூலி குறைவானதே என்பதைச் சுட்டிக்காட்டும் மார்க்ஸ், எனினும் இவ்வாறான சுரண்டல்முறை நெடுங்காலத்திற்கு நடைபெறாது எனவும் எதிர்வு கூறுகிறார். சிறிய முதலாளி வகுப்பிற்கெதிராக பெரிய தொழிலாளர் வகுப்பு எழுந்து புரட்சி செய்து, தங்களைப் பயன்படுத்தும் முதலாளி வகுப்பை அடியோடு ஒழித்துவிடும். இவ்வாறான தொழிலாளர் புரட்சி தவிர்க்க இயலாதது எனவும் இவ்வாறான முடிவில்தான் மனித வரலாறு உருவாகிறது எனவும் மார்க்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

**புதிய சமூக - பொருளாதார -அரசியல் அமைப்புக்களின் தோற்றம்**

முதலாளிகளின் வகுப்பு தொழிலாளர் வகுப்பினால் செயற்புரட்சியின் வாயிலாக ஒழிக்கப்பட்ட பின்னர் தொழிலாளர் வகுப்பு வேறுபாடற்ற ஒரு புதிய சமூகத்தை உருவாக்குவதற்கு முதற்படியாக தங்களுடைய தலைவர்களுடைய தனியரசாட்சியை நிறுவவேண்டும். அத்தகைய தொழிலாளர் வகுப்பின் தனியரசு ஆட்சியில் சமநிலைக் கருத்துக்கள் நடைமுறையில்கொண்டுவரப்படும். அந்த சமநிலை ஆட்சியாளர் முதலாளிகள் வசமுள்ள நிலங்கள், தொழிற்சாலைகள் மற்றும் அவர்களின் செல்வ மூல வளங்களை எடுத்து, சமூகம் முழுவதற்கும் அரச நிர்வாக மேற்பார்வையில் செயற்படும் உடமையாக ஆக்குவார். இந்நிலைமையால் நாட்டின் செல்வநிலை ஒரு சிலர் கையில் இருந்த நிலை மாறி, நாடு முழுவதும் உடமையாகிவிடும் என்று மார்க்ஸ் குறிப்பிடுகின்றார்.

முதலாளிகளின் உடமைகள் நாட்டுடமை ஆக்கப்பட்டதும் முதலாளிகள் வகுப்பு மறைந்து சமூகம் என்பது தொழிலாளர்களை மட்டுமே உடையதாக இருக்கும் பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வு சிறிதுமின்றி முழுமையான சமத்துவநிலை அச் சமூகத்தில் தோன்றும். இவ்வாறான வலுவான சூழ்நிலையில் சமூகத்தில் யாவரும் உழைத்தே உண்ணுதல் வேண்டும் என்ற கட்டுப்பாடும் இருக்கும் எனவும் மார்க்சிசம் குறிப்பிடுகின்றது. இந்த ஆட்சி, சர்வாதிகார ஆட்சிபோலத் தோன்றினாலும் உண்மையில் ஆட்சியாளரின் ஆட்சி நாட்டின் ஒரே வகுப்பான தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த ஒருவரால் அவ்வகுப்பின் சார்பாக, அதன் நலனுக்காக நடத்தப்படுவதால் அது மக்களுக்குப் பொறுப்பான மக்கள் ஆட்சியையே இதில் முழுமையான அளவில் பொருளாதார சமத்துவம் நிலவும் எனவும் மாக்சிசம் வலியுறுத்துகிறது.

*(மறுவாரம் மார்க்சிசம் செயற்படுதலும் அதன் மதிப்பீடும்பற்றிப் பார்க்கலாம்.)*

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

**தமிழ் அச்சகம்**

(மக்கள் கடை அருகில்)

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500–க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

**திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணி வரை**

**59, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42**

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரிந்தான் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்

# கடந்த நூற்றாண்டு கண்ட இரு பெரும் போர்கள்

## ஐந்து கோடி மக்களைப் பலி கொண்ட இரண்டாம் உலகப்போர் (1939 - 1945)

### மார்சல் திட்டமும் - ரஷ்ய எதிர்ப்பும்

ஜேர்மனியின் சர்வாதிகாரியான ஹிட்லர், இத்தாலியின் சர்வாதிகாரியான முசோலினி, ஜப்பானிய மன்னரான ஹிரோகிட்டோ ஆகியோரின் உலகாளும் பேராசையினால் விளைந்த இரண்டாம் உலகப்போர் உலகினையே பெரும் இன்னல்களுக்கு உள்ளாக்கியது. போர் முடிவடைந்ததும் மக்கள் மனதில் நிம்மதிப் பெருமூச்சுத் தோன்றினாலும் போரின் விளைவுகள் அவர்களைக் கலக்கமடைய வைத்தன. 1939ம் ஆண்டுமுதல் 1944ம் ஆண்டுவரை நடைபெற்ற இப்போர் ஏறக்குறைய அனைத்து நாடுகளின் பொருளாதாரத்தினையும் வெகுவாகச் சீர்குலைத்துவிட்டது. ஜேர்மனியின் பொருளாதாரம் மிக வீழ்ச்சியடைந்த அதேவேளை ஏனைய ஐரோப்பிய நாடுகளின் தொழிற்சாலைகள், கட்டடங்கள், சாலைகள், பாலங்கள் அனைத்தும் ஜேர்மனியின் குண்டுவீச்சிற்கு இலக்காகியும் அழிக்கப்பட்டிருந்தன. போரின் இறுதிக் கட்டத்தில் அமெரிக்கா தலையிட்டாலும் அந்நாட்டைப் பொறுத்தவரை 'பேர்ள்' துறைமுக இழப்பினைத் தவிர வேறு எப்பகுதியும் போர்க்களமாக மாறியிருக்கவில்லை. எனவே போரினால் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய பொருளாதாரங்களைச் சீரமைக்கும் பாரிய பொறுப்பினை அமெரிக்கா ஏற்றுக்கொண்டது. இத்தகைய பொறுப்புத்தான் மார்சல் திட்டம் என்னும் வடிவத்தினைப் பெற்றது.

ஜோர்ச் மாசல் என்பவர் அமெரிக்காவின் தளபதியாக இருந்தவர். அவரே இத்திட்டத்தினை வடிவமைத்ததனால் அவரது பெயர்கொண்டே இத்திட்டம் அழைக்கப்பட்டது.

மார்சல் தனது திட்டம்பற்றிய கருத்தினை முதல்முதலாக 1947ம் ஆண்டு அமெரிக்காவில் ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் நடந்த சிறப்புக் கூட்டமொன்றில் வெளியிட்டார். இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த பின்னர் ஐரோப்பாவைக் கடுமையான குளிர் தாக்கத்தொடங்கியது. 'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த' கதையாக ஐரோப்பிய நிலைமை ஆகிவிட்டது. போரின் கொடூரத்தினால் பெரும் அழிவுகளைச் சந்தித்த ஐரோப்பாவினைக் கடும் குளிரும் தன் பங்கிற்கு வதைத்தது. ஐரோப்பிய நாடுகளும் வேளாண்மையும் இக்குளிரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டதால், நாடுகளில் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடத் தொடங்கியது. இவ்வாறாக சீர்குலைந்துவிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்கா அவ்வப்போது உணவுப் பொருட்களையும் வேறுசில உதவிகளையும் அழித்து வந்தது. ஆனால் ஐரோப்பாவின் பொருளாதார முன்னேற்றத்தில் தனது எதிர்காலமும் இருக்கும் என்பதை உணர்ந்துகொண்ட அமெரிக்கா தனது உதவியை நெறிப்படுத்தி ஒரு கொள்கைக்குள் வகுக்கவேண்டுமெனக் கருதியது. அமெரிக்காவின் இந்தக் கொள்கைப்படி மார்சல் திட்டத்தினை வகுத்தார்.

மார்சல் திட்டம் பின்வரும் கூறுகளை அடக்கியிருந்தது. எல்லா ஐரோப்பிய நாடுகளையும் தனது குடையின் கீழ் கொண்டுவரவேண்டும் என்ற அமெரிக்காவின் திட்டத்திற்கேற்ப இக்கூறுகள் வகுக்கப்பட்டன.

1. அமெரிக்க உதவியைப் பெறவிரும்பும் நாடுகள் பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை வகுத்துக்கொள்ளவேண்டும்.
2. தங்களின் திட்டங்களையும் தங்களுடைய நிதி நிர்வாகத்தையும் சீர்ப்படுத்துவதற்காக அமெரிக்காவோடு ஒத்துழைக்கவேண்டும் என்ற கூறுகளை மார்சல் திட்டம் கொண்டிருந்தது.

போரில் நலிவடைந்த நாடுகள் மார்சல் திட்டத்தை ஏற்றுக்கொள்ள ஆர்வம் காட்டின. கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், பிரான்ஸ், கனடா, பிரித்தானியா ஆகிய நாடுகளும் இத் திட்டத்தை உடனடியாகவே ஏற்றுக்கொண்டன. ஆனால் ரஷ்யா மார்சல் திட்டம் தொடர்பாக மௌனமே சாதித்தது. எனினும் ரஷ்யாவின் ஆளுகைக்கு உட்பட்ட செக்கோசிலோவாக்கியாவும், போலந்தும் மார்சல் திட்டத்தை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தது ரஷ்யாவிற்கு எரிச்சலையூட்டியதால், அது திடீரென இத்திட்டத்தை எதிர்ப்பதாக அறிவித்தது மட்டுமின்றி, தன் ஆளுகைக்கு உட்பட்ட பிற பொதுவுடமை நாடுகளை மார்சல் திட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கவில்லை.

மார்சல் திட்டமானது ஐரோப்பா முழுவதையும் அடிமைப்படுத்தக்கூடிய அமெரிக்காவின் ஏகாதிபத்தியக்கொள்கை ஆதலால் இத்திட்டத்தில் ரஷ்யா பங்கெடுத்துக்கொள்ள மாட்டாதென ரஷ்ய அமைச்சரான 'மாலடோ' வெளிப்படையாகவே அறிவித்தும்கொண்டார். மாலடோவின் இவ் அறிவிப்பைத் தொடர்ந்து ஐரோப்பா, கிழக்கு - மேற்கு எனப் பிரிவடைந்து செல்வதற்கான அறிகுறிகளும் தோன்றின.

ரஷ்யா எதிர்த்தபோதிலும் 1948ம் ஆண்டு ஜூலை மாதம் பாரிஸ் நகரில் மார்சல் திட்டம்பற்றி நடைபெற்ற கூட்டத்தில் 16 ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். ரஷ்யாவின் ஆளுகைக்குட்பட்ட 8 நாடுகள் இதில் கலந்துகொள்ளவில்லை. இக்கூட்டத்தில் மார்சல் திட்டம் விவாதத்திற்கு விடப்பட்டது. மூன்று அம்சம்கொண்ட அறிக்கை ஒன்றும் தயாரிக்கப்பட்டது. அவ் அறிக்கையில் அமெரிக்கா, 164 மில்லியன் டொலர் முதல் 224 மில்லியன் டொலர் வரையிலான நிதி உதவியை பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு 5 ஆண்டுகளுக்கு வழங்கவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிரான்ஸ், இங்கிலாந்து உட்பட்ட மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மார்சல் திட்டத்திற்கு பொதுமக்களின் முழுமையான ஆதரவு கிடைத்ததால், அமெரிக்கா ரஷ்யாவின் எதிர்ப்பையும் மீறி செயலில் இறங்கியது. 1947ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ம் திகதி அப்போது அமெரிக்க அதிபராக இருந்த ட்ரூமன், மார்சல் திட்டத்தைச் செயற்படுத்துவதற்குரிய தமது அறிக்கைகளை அமெரிக்க காங்கிரசிற்கு அனுப்பினார். அமெரிக்க காங்கிரசிலும் மார்சல் திட்டத்திற்கு ஆதரவே கிடைத்தது. பிரான்ஸ், இத்தாலி, ஒஸ்திரியா ஆகிய நாடுகளுக்கு இரு ஆண்டுகளில் இடைக்கால உதவியாக 52 மில்லியன் டொலர் உதவி வழங்கவும் அமெரிக்க காங்கிரஸ் முடிவு செய்தது. பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் அவற்றின் மீட்சித் திட்டங்களுக்காக அமெரிக்கக் காங்கிரசால் நிதி உதவி ஒதுக்கப்பட்டது. மேற்கு ஐரோப்பிய நாடுகள் மார்சல் திட்டத்தில் முழுமையாகப் பங்கேற்று பொருளாதார மறுமலர்ச்சியை அடைந்தன. குறிப்பாக பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, பிரித்தானியா ஆகிய நாடுகளில் மிக விரைவான பொருளாதார மீட்சி ஏற்பட்டது. எனினும் ரஷ்ய அமைச்சர் தெரிவித்தது போல அமெரிக்க ஏகாதிபத்தியக் கொள்கை மேற்கு ஐரோப்பாவில் காலூன்ற முயன்றதும் உண்மைதான். ஏனெனில் மேற்கு ஐரோப்பாவில் பரவத்தொடங்கிய பொதுவுடமைச் சக்திகளை மார்சல் திட்டம் மறையும்படி செய்துவிட்டது. இது அமெரிக்காவிற்கு ஒருவகையில் கிடைத்த வெற்றிதான்.

**- சி.பி.**

## அகலிட நிகழ்வுகள்

# தமிழ்மணிப் புலவர் தேர்வு

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க ஐரோப்பிய ஒன்றியம் நடாத்தும் 'தமிழ் மணிப்புலவர்' பட்டத்தேர்வு புத்தாயிரம் ஆண்டில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 31ம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு தேர்வாளர்கள் கேட்கப்படுகின்றனர்.

சென்னை மாணவர் மன்றம், மலேசியா தமிழ் இலக்கிய கழகம் ஆகியவை இணைந்து, உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க ஐரோப்பிய ஒன்றியம் ஐரோப்பா ரீதியில் இப் பட்டத்தேர்வை நடாத்தி வருகின்றது. ஐரோப்பா வாழ் தமிழ் ஆர்வலர்களின் தமிழ் ஆற்றலை வளர்ப்பதற்காக இத்தேர்வு நடாத்தப்பட்டுவருகின்றது.

தமிழ் மணிப்புலவர் 3ம் ஆண்டிற்கான பட்டத்தேர்வு விண்ணப்பங்களைத் தேர்வாளர்கள் மேற்படி திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கவேண்டும்.

விண்ணப்பங்களை முத்திரை ஒட்டிய மடல் உறையுடன் அனுப்பிவைக்கவேண்டும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

கே.ரி. கணேசலிங்கம்
Rieger Str -26
48431 Rheine, Germany
Tel: & Fax: 05971 – 14258

# மலேசியாவில் நடைபெற்ற 'தமிழீழப் போராட்டத்தில் நமது பங்கு'

மலேசியத் தமிழ்நெறிக் கழகமும், உலகத் தமிழர் நிவாரண நிதியமும் இணைந்து 'தமிழீழப் போராட்டத்தில் நமது பங்கு' எனும் நிகழ்வினை மலேசியாவின் பினாங்கு மாநிலத்தில் முதன் முறையாக 25.03.2000 அன்று நடத்தியது.

தமிழீழ விடுதலைப் போரில் விதையாகிப் போன மாவீரர்களுக்கும், மறைந்த பொதுமக்களுக்குமான அமைதி வணக்கத்துடன் நிகழ்வு எழுச்சியாகத் தொடங்கியது. மலேசியத் தமிழ் நெறிக் கழகத்தின் தேசியப் பொருளர் மு.தமிழ்வாணன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து தலைமைச் சிறப்புரை ஆற்றினார் மலேசியத் தமிழ்நெறிக் கழகத்தின் தேசியத் தலைவர் இரா.திருமாவளவன் அவர்கள். அவர் தம் உரை தமிழீழ விடுதலை வரலாற்றையும் அதனை வழிநடத்திச் செல்லும் உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் மேதகு. வே.பிரபாகரன் அவர்களின் போர் திறனையும் வீர தீரங்களையும் விளக்குவதாக அமைந்தது.



சிறிய இடைவேளைக்குப் பிறகு செல்வி வீர பூங்குழலி பேசினார். அது தமிழீழ பெண்களின் வாழ்க்கை வரலாற்றினையும் களத்திலே பெண்கள் புரியும் சாதனைகளைப் பற்றியதாய் இருந்தது.

தொடர்ந்து சிறப்புரையாற்றினார் மலேசியத் தமிழ்நெறிக் கழகத்தின் தேசியப் பொதுச் செயலர் திரு.பழ. வீரன் அவர்கள். அவரது உரை தமிழீழ போராட்ட இக்கால சூழல் பற்றியும், மொழி, இன நிலைகளை மறந்து வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழர்களைப் பற்றியதுமாய் இருந்தது.


உலகத் தமிழர் நிவாரண நிதியத்தின் வடமலேசியாவின் பொறுப்பாளர் மு. தமிழரசன் பொறுப்புரையாற்றினார். உலகத் தமிழர் நிவாரண நிதியத்தின் பணிகளை விளக்கினார். அதோடு நம்மால் ஆன உதவிகளை ஈழத் தமிழருக்கு கண்டிப்பாகச் செய்தல் வேண்டும். அது நமது கடமையும் ஆகும் என அறிவுறுத்தினார்.

இடை இடையே பாடலுடன் கூடிய நகைச்சுவையுடன் ஈழப் போர்க் களச் செய்திகளைத் தொகுத்துக் கூறிக்கொண்டிருந்தார். நிகழ்வுத் தொகுப்பாளராகப் பணியாற்றிய மு. தமிழ்வாணன் அவர்கள்.

இறுதியாக நிகழ்வு ஏற்பாட்டாளர் திரு.கார்மேகம் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவுற்றது. கடந்த நிகழ்வுகளை விட அதிக அளவில் மக்கள் மனமுவந்து நன்கொடைகளை வழங்கியது மேலும் நிகழ்வினைச் சிறப்புச் செய்தது குறிப்பிடத்தக்கது.

## கிடைக்கப் பெற்றோம் 'எனது மக்களை வாழவிடுங்கள்'

எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார் எழுதிவெளியிட்ட 'எனது மக்களை வாழவிடுங்கள்' என்ற நூல் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஏற்கனவே வெளியாகியிருந்தது. இதன் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு இம்முறை ஜெனிவாவில் அமைதி பேரணி நடைபெற்றபொழுது வெளியிட்டு வைக்கப்பட்டது. பிரெஞ்சு மொழிபேசும் மக்களுக்கு எமது நாட்டின் பிரச்சினைகளை எடுத்துக்கூற சிறந்த புத்தகமாக இது வெளிவந்துள்ளது. நீதியான சமாதானம், அமைதியான வாழ்வு போன்றவற்றை வலியுறுத்தும் இந்நூல் எமது போராட்டம் பற்றிய தவறான கருத்து உள்ள வெளிநாட்டவர்க்கும், எமது பிரச்சினைகள் பற்றி தெரியாதவர்களுக்கும் மிகவும் பயன்படும். இந்நூலை வாங்கவிரும்புபவர்கள் கீழ்வரும் முகவரிக்கு 11 சுவிஸ் பிராங்குகளை தபால் கட்டளை மூலம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.





**I.F.T**
**38, Rue du Zurich**
**1201 Geneva**


**Tamil Association**
**C.P. 102**
**1705 Fribourg.**

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

**11.05.2000**







**தோற்றம்: 07.11.1981**
**மார்கிறேற் இலையிங்**
(Margreat Laing)

**தோற்றம்: 02.07.1980**
**டுஷானா கீதபொன்கலன்**
(Dushana Keethapongalan)

*அன்பும் பண்பும் ஒன்றான எங்கள் அன்பான டுஷானா! உன் அர்த்தம் நிறைந்த அன்பு வார்த்தையையும், அடக்கமான புன் சிரிப்பையும், எப்போதம்மா இனி நாம் காண்போம்.*

*துள்ளித் திரிந்த பள்ளித்தோழி மார்கிறேற்றையும் (Maggie) கடவுள் கொண்ட அன்பினால் காலனை அனுப்பி உங்களிருவரையும் இணைபிரியாது அழைத்துவிட்டான்.*

*வசந்தகாலம் வரும்போதும், வழியால் நாம் செல்லும்போதும், உங்கள் உருவம் கண்முன்னே களைகட்டிவந்து எங்கள் ஜீவனை வாட்டுதம்மா! எம்முன்னே நீ இனிமேல் எழுந்துவரமாட்டாயா? உங்களைச் சந்திப்போம் என யேசுகிறிஸ்துநாதர் கூறிய வார்த்தைகளை நம்பியபடியே காத்திருக்கின்றோம்.*

முகவரி: கிறிஸ்ரோஸ்ரம் இராசநாயகம்
'ஜெராட் கீதபொன்கலன் (ராசக்கோன்)
றோசபெல் ஜெயராணி கீதபொன்கலன், ஜேர்மனி.
*Tél: 07150 - 81950*

உங்கள் பிரிவால் துடிக்கும்
Almut, Oliver und Johannes Laing.
பப்பா, மம்மி, டிலினி, டினேஷ், ஜேபி.

Pub.Ger

# ஜோஹான் கூட்டன்பர்க்

## உலக வரலாற்றில் பதிவானவர்கள்


**உலக வரலாற்றில் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரசித்தி பெற்ற பலரது விபரங்கள் இத் தொடரில் வெளிவருகின்றன.**



நவீன அச்சுக் கலையைக் கண்டுபிடித்தவர் ஜோஹான் கூட்டன்பர்க் ஆவார். இயங்கக் கூடிய எழுத்துருவையும் *(Movable Type)* அச்சு எந்திரத்தையும் பயன்படுத்தி அச்சிடும் முறையை முதலில் கண்டுபிடித்தவர் இவர். இவரது முறையைக் கொண்டு எழுத்து வடிவிலான ஏராளமான நூல்களை விரைவாகவும், துல்லியமாகவும் அச்சடிக்க முடிந்தது.

எந்த ஒரு புத்தமைப்பும் தனியொரு மனிதனின் மூளையிலிருந்து முற்றிலுமாக உதிப்பதில்லை. அச்சுக் கலையும் அதற்கு விதி விலக்கன்று. அச்சுப்பாள அச்சு முறையைப் போன்றே அதே தத்துவத்தின்படி செயற்படுகின்ற முத்திரை அச்சுக்களும், முத்திரை வளையங்களும் பண்டைக் காலம் முதற்கொண்டே அச்சடிக்கப் பயன்படுத்தப்பட்டு வந்தன. கூட்டன்பர்க்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சீனாவில் அச்சுப்பாள அச்சுமுறை கையாளப்பட்டு வந்தது. உண்மையில், கி.பி. 868 இல் அச்சிடப்பட்ட அச்சுப் புத்தகம் ஒன்று சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கூட்டன்பர்க்குக்கு முன்பு, ஐரோப்பாவில் கூட இந்தவகை அச்சு முறையை அறிந்திருந்தனர். ஒரு நூலின் பல அச்சுப் படிகளை எடுப்பதற்கு அச்சுப்பாள அச்சு முறையினால் முடிகிறது. எனினும், சீனாவில் 11-ம் நூற்றாண்டின் மத்தியவாக்கில் இயங்கக்கூடிய் எழுத்துரு கண்டுபிடிக்கப்பட்டது. இதைக் கண்டுபிடித்தவர் பி-ஷெங் என்பவர். இவர் தயாரித்த எழுத்துரு மண்ணாலானது. இந்த எழுத்துரு, நீடித்து உழைக்கக்கூடியதன்று. எனினும், இந்த எழுத்துருவில் மற்ற சீனர்களும், கொரியர்களும் பல சீர்திருத்தங்களைச் செய்தார்கள். கூட்டன்பர்க்குக்கு நீண்ட காலத்திற்கு முன்பே கொரியர்கள் உலோக எழுத்துருவைப் பயன்படுத்தி வந்தார்கள். பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே, அச்சு எழுத்துருக்களைத் தயாரிக்கும் ஒரு வார்ப்படச்சாலைக்கு கொரிய அரசு ஆதரவளித்து வந்தது. எனினும், பி-ஷெங்கை ஒரு செல்வாக்குமிக்க மனிதராகக் கருதுவது தவறாகும். முதலாவதாக, இயங்கக்கூடிய எழுத்துருக்களைத் தயாரிக்கும் முறையை சீனாவிலிருந்து ஐரோப்பா கற்றுக் கொள்ளவில்லை. தானே கண்டுபிடித்தது. இரண்டாவதாக, இயங்கக்கூடிய எழுத்துகளைப் பயன்படுத்தி அச்சிடும் முறை சீனாவில் கூட அண்மைக் காலம் வரையில் பரவலாகப் பயன்படுத்தப்படவில்லை. மேலை நாட்டிலிருந்துதான் இந்த நவீன அச்சு முறையைச் சீனர்கள் கற்றுக் கொண்டார்கள்.

நவீன அச்சுமுறையில் நான்கு முக்கியமான பகுதிகள் அடங்கியுள்ளன. முதலாவது, இயங்கக் கூடிய எழுத்துரு. இந்த எழுத்துருக்கள் ஒரு குறிப்பிட்ட நடைமுறைப்படி அடுக்கப்பட்டு, ஒரு நிலையில் பொருத்தப்படுகின்றன. இரண்டாவது, அச்சு எந்திரம், மூன்றாவது, பொருத்தமான அச்சு மை. நான்காவது, அச்சிடுவதற்கேற்ற காகிதம் போன்ற பொருத்தமான அச்சிடுபொருள். பல ஆண்டுகளுக்கு முன்னரே சீனாவில் சாய் லுன் என்பவர் காகிதத்தைக் கண்டுபிடித்திருந்தார். காகிதத்தைப் பயன்படுத்தும் முறை, கூட்டன்பர்க் காலத்திற்கு முன்பே மேலை நாடுகளுக்குப் பரவியிருந்தது. அச்சு முறையின் நான்கு பகுதிகளிலும், கூட்டன்பர்க்குக்கு முன்பே பல மேம்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எனினும், அந் நான்கு பகுதிகளிலும் மிக முக்கியமான சீர்திருந்தங்களைக் கூட்டன்பர்க் செய்தார். எடுத்துக்காட்டாக, எழுத்துருக்களைத் தயாரிப்பதற்குப் பொருத்தமானதொரு உலோகக் கலைவையை அவர் கண்டுபிடித்திருந்தார். எழுத்துருப் பாளங்களைத் துல்லியமாகவும், சரி நுட்பமாகவும் வார்ப்பதற்கான வார்ப்படத்தை அவர் உருவாக்கினார். எண்ணெயை அடிப்படையாகக்கொண்ட அச்சிடுவதற்குப் பொருத்தமான அச்சு எந்திரத்தையும் தயாரித்தார்.



கூட்டன்பர்க்கின் தனிக் கண்டுபிடிப்புகள் அல்லது சீர்திருத்தங்களில் எதனையும்விட அச்சுக் கலைக்கு அவர் ஒட்டுமொத்தமாக ஆற்றிய தொண்டுதான் மிகப் பெரியது. அவர், அச்சுக் கலையின் அனைத்துக் கூறுகளையும் ஒருங்கிணைத்து, அதனைப் பயன் திறன்மிக்க படைப்பாக அமைப்பு முறையாக உருவாக்கினார். அதற்காகவே அவர் பெருமைக்குரியவராகிறார். முந்தைய புத்தமைப்புகள் அனைத்தையும் போலன்றி அச்சு முறை என்பது அச்சுப் படிகளை ஏராளமாக எடுக்கும் ஒரு செய்முறை தனியொரு வில்லையும் அம்பையும்விட, தனியொரு சுழல் துப்பாக்கி அதிக ஆற்றல் வாய்ந்த ஆயுதமாகும். தனியொரு அச்சுப் புத்தகத்தின் மூலம், தனியொரு கையெழுத்துப் புத்தகத்தினால் உண்டாகும் அதே விளைவுதான் விளையும். ஒரு நூலின் பல படிகளை அச்சிடுவதால் ஏற்படும் நன்மைகள் ஏராளம். கூட்டன்பர்க் உருவாக்கியது தனியொரு எந்திரமன்று; தனியொரு சாதனமும் அன்று; தொடர்ச்சியான சீர்திருத்தங்கள் மட்டுமல்ல; ஒரு முழுமையான உற்பத்திச் செய்முறையை அவர் கண்டுபிடித்தார்.

கூட்டன்பர்க் வாழ்க்கை பற்றிக் கிடைக்கும் தகவல்கள் மிகக் குறைவு. ஜேர்மனியிலுள்ள மெயின்ஸ் என்ற நகரில் அவர் 1400 இல் பிறந்ததாகக் கூறுவர். 15ஆம் நூற்றாண்டின் மத்தியில் அவர் அச்சுக் கலைக்குத் தமது தொண்டுகளை ஆற்றினார். 'கூட்டன்பர்க்கின் விவிலியம்' *(Guttenberg's Bible)* எனப் புகழ் பெற்ற இவரது தலைசிறந்த நூல் 1554-ம் ஆண்டு வாக்கில் அச்சிடப்பட்டது. அவர் கண்டுபிடித்த சாதனத்தினாலேயே அவரது நூல்கள் அச்சிடப்பட்ட போதிலும், அவர் எழுதிய நூல்களில் ஒன்றுகூட 'கூட்டன்பர்க் விவிலியம்' உட்பட அவருடைய பெயர் இல்லை. அவர் வாணிகத்தில் திறமை வாய்ந்தவராகத் தோன்றவில்லை. அதனால், தமது கண்டுபிடிப்பைக்கொண்டு பணம் சம்பாதித்ததாகவும் தெரியவில்லை. அவர் மீது பல வழக்குகளும் தொடரப்பட்டன. அவற்றுள் ஒரு வழக்கின் விளைவாக, இவர் தமது அச்சு எந்திரத்தை இழக்க நேரிட்டது. கூட்டன்பர்க் 1468-ம் ஆண்டு மெயின்ஸ் நகரில் காலமானார்.

கூட்டன்பர்க்குக்குப் பிந்திய காலத்தில் சீனா, ஐரோப்பா இரண்டின் முன்னேற்றத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, உலக வரலாற்றில் கூட்டன்பர்க்கின் சாதனை எத்துணை பாதிப்பை ஏற்படுத்தியது என்பது தெளிவாகும். கூட்டன்பர்க்கின் தோற்றத்திற்கு முன்புவரை சீனாவும், ஐரோப்பாவும் தொழில் நுட்பத் துறையில் சரி நிகராகவே முன்னேறியிருந்தன. ஆனால், நவீன, அச்சுக் கலையைக் கூட்டன்பர்க் கண்டுபிடித்த பின்பு ஐரோப்பா மிகத் துரிதமாக முன்னேறியது. கூட்டன்பர்க் நவீன அச்சுக்கலையைக் கண்டுபிடித்த பின்பு நெடுங்காலம் வரையில் சீனாவில் பழைய அச்சுப்பாள அச்சுமுறையே தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது. அத்துடன் அதன் முன்னேற்றம் மிக மெதுவாகவே நடந்தது. சீனா இவ்வாறு பின் தங்கியதற்கு நவீன அச்சுக் கலையின் கண்டுபிடிப்பு ஒன்றை மட்டுமே காரணமாகக் கூற முடியாது. எனினும், அது ஒரு முக்கிய காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்களில் மூவர் மட்டுமே கூட்டன்பர்க்குக்கு முந்திய 500 ஆண்டுகளில் வாழ்ந்தவர்கள் என்பதும், 67 பேர் அவருக்குப் பிந்தைய 500 ஆண்டுகளில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. நவீன காலத்தில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்துவதில் கூட்டன்பர்கின் கண்டுபிடிப்பு மிகப் பெரிய பங்கினை -உயிரோட்டமான பங்கினை - வகித்திருக்கிறது என்பதை இது குறிக்கிறது.

அலெக்சாண்டர் கிரஹாம் பெல் வாழ்ந்திராவிட்டாலுங் கூட வரலாற்றில் அதே கால அளவின்போது தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் என்பது உறுதி. வேறு பல கண்டுபிடிப்புகள் குறித்து இதையே கூறலாம். ஆனால், கூட்டன்பர்க் தோன்றியிருக்கா விட்டால், நவீன அச்சு முறையின் கண்டுபிடிப்பு பல தலைமுறைகள் தாமதப்பட்டிருக்கும்.

**எழுத்துருக்களைத் தயாரிப்பதற்குப் பொருத்தமானதொரு உலோகக் கலைவையை அவர் கண்டுபிடித்திருந்தார். எழுத்துருப் பாளங்களைத் துல்லியமாகவும், சரி நுட்பமாகவும் வார்ப்பதற்கான வார்ப்படத்தை அவர் உருவாக்கினார்.**

NÆRKØB -DKS Video

Danmark பதரேஸ்சியா மாநகரில் (Nærkøb) நியர்குய்ப் DKSVideo ஸ்தாபனத்தாரின் மற்றும் இரு சேவைகள்

இடமாற்றம் 01.09.99 முதல் NÆRKØB ரவல்ஸ் கு, Mony Exchence

புதிய முகவரி

NÆRKØB ரவல்ஸ் 5
Vestcenter, Venvsvej-10, 7000 Fredericia, Danmark.
தொலைபேசி: 75915840 -75915841 / Fax: 75915842

Nærkøb Travels®

Nærkøb Travels புதிய நவீன படுக்கை வசதிகள் கொண்ட பஸ்சேவை - வாரம் 3 நாட்கள்

| | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark - London- | 540Kr | 890Kr |
| Danmark - Paris | 358Kr | 574Kr |
| Danmark - Hambvrg | 205Kr | 327Kr |

இலையுதிர் கால மலிவுப் பயணச்சீட்டுகள் October கடைசிவரை பாரிஸ் சென்று அதே பஸ்சில் திரும்பிவர 398 Kr மட்டுமே
பிரான்ஸ் நாட்டில் இருக்கும் டிஸ்னிலான்ட் (Disny Land Paris) சென்று திரும்பிவர 6.78 Kr மட்டுமே
2 வயதிற்குமேல் 12 வயதுக்குட்பட்டவருக்கு 598 Kr மட்டுமே
உடன் தொடர்புகொண்டு ஆசனங்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள்: 75915840 - 75915004
Fax 75915842 Fax 75915806

Nærkøb Money Transfer

15 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த இடத்துக்கும் கொடுக்கவோ/ பெற்றுக்கொள்ளவோ முடியும்.
இந்த Money Exchange அரச அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள்.

இவ்வாரம் முதல் Okotober 30 திகதி வரை
மலிவான விமானப் பயணச்சீட்டுக்கள்.
Copenhagen - Colombo - 3,200 Kr மட்டும் (Tax 165 Kr)
Copenhagen - Colombo - India (திருவனந்தபுரத்திற்கு) - 3800 Kr + Tax 185 kr

# காற்று நம் காதிடம் ஓதியது

காலத்தைப் பதிவுசெய்து ஞாபோரன் எழுதுவது

**மண்ணளைந்த கைகள் தான்**
**மண் வாசனை அறியும்**
**விண்ணளந்த பட்டம் தான்**
**விண் கூவும்.**

*விண்ணளந்த பட்டமாய் விண் கூவிய வெற்றியாய், மண்ணளைந்த வாழ்வாய், மண்வாசனை முகர்ந்த மகிழ்வாய், கண்கள் பொங்க, உள்ளம் களிப்புக்கொள்ள, காதுகள் குளிர காற்று வந்து சேதி சொல்லிற்று – என் தோழி சொன்னாள் தன் மகிழ்வை இப்படியாகப் பறைந்தாள்.*

**காற்றா இந்தச் சேதிதனை – நம் காதிடம் ஓதியது ?**
**நேற்றா இந்த வெற்றிட நிகழ்வு – நம்**
**நாட்டில் நிகழ்ந்தது ?**
**ஊற்றா இந்த உணர்வுப் பெருக்கை**
**உள்ளத்தில் ஊட்டியது ?**
**தோற்றா வீழ்ந்தோம் – இல்லையே**
**துவளா வெற்றி கண்டோம்.**

*காற்றா இந்த வெற்றிச் செய்திதனைச் சுமந்து வந்தது? நேற்றிரா கண்மூட மறுத்தபோதும் நினைத்ததில்லை. கனவுகள் தொடர்ந்து நின்று கவலை தந்தபோதும் உணர்ந்ததில்லை.*

விடியலில் கண் விழித்தபோதும் விளங்கவில்லை.

மதியமதில் வெய்யில் சுட்டபோதும் புரியவில்லை, காற்றா இந்தக் கனத்த செய்திதனைச் சுமந்து வந்தது?

*ஒரு கணம் – ஒரேயொரு கணம் அது நம்மைத் திடுக்குற.. வைத்தது.*

ஒரு கணம் இரத்தம் உறைந்ததுபோல, ஒரு கணம் இதயம் துடிக்க மறந்தது போல, ஒரு கணம் இமைகள் மூட மறுத்தது போல, ஒரு கணம் இயக்கமே நின்று விட்டாற்போல.

*காற்றா இந்த வெற்றிச் செய்திதனைச் சுமந்து வந்தது?*

தமிழர் நாம் தோற்கோம் என்றது காற்று. தமிழ் ஒரு போதும் தோற்காதென்றது காற்று.

ஈழம் இதோ என்றது காற்று. இனி ஏது துயர் என்றது காற்று.

*தமிழர்க்குத் தடை செய்யும் நெடுங்குன்றம் தானாய் தகரும் என்றது காற்று*

நெடுங்குன்றம் என்ன, பெரும் படையே சிதறிவிடும். தூளாகி விடும் என்றது காற்று. இனி எமது ஆட்சி - தமிழரின் ஆட்சி - தமிழின் ஆட்சி.

*ஓம், காற்றே இந்த வெற்றிக் கதையையும் நம் காதிடம் ஓதியது.*

நாம் திரும்பிப் பார்க்கிறோம் - நீண்டநாளை பின்னோக்குகிறோம் - அந்த நாட்களில் - ஆனையிறவில் மிதந்த நாட்கள் - 1990 வரை - ஆனையிறவினூடாகச் செய்த பயணங்கள் - நீண்ட நாட்களை நாம் நினைவூட்டுகிறோம்.

*அப்போது ஆனையிறவு என்றால் அதற்கு இருக்கக் கூடிய அர்த்தம் – உப்பளம் உள்ள ஊர் – அவ்வளவுதான். பளிங்குக் குன்றுகளாக உப்புக்குவியல்–*

தொடருந்தில் பயணம் செய்கிறபோது போகிறபோது பார்க்கிற புதினங்களில் ஆனையிறவும் ஒன்று.

சாவகச்சேரியிலிருந்து பளை வரை தார் வீதியும் தண்டவாளத்துடன் சேர்ந்து வரும் - பரந்தனென்றால் இரசாயனத் தொழிற்சாலை பார்க்கத் தெரியும் - கிளிநொச்சி தொடங்க குரங்குகள் கொப்புலுப்பும் - மாங்குளத்தில் மயில் பார்க்கலாம் - புளியங்குளத்தில் குளம் பார்க்கலாம் - வவுனியா தாண்ட வரும் பயம். எங்கள் நாடு இது இல்லை எனும் ஏக்கம் வரும்.

*எனினும், கொட்டில் வீடுகள் காண்போம் – பெண்களின் குறுக்குக் கட்டுக்கள் காண்போம் – நீளக் கூந்தலும், நிமிர்ந்த நடையும் காண்போம் – எனினும் வழி நெடுகிலும் வறுமையின் வாழ்வைக் காண்போம்.*

பாவமே அவர்கள் என்று பரிதாபப் பட்டோம் - பசித்திருக்கும் வேளை என்ன உண்பார்கள் என்று ஏங்கினோம் - யாவரும் மனிதரே - அவரது வாழ்வும் வயிறும் ஒன்றே - இன்று இரங்கினோம் - வயிறு பசித்தது - வாழ்வு துடித்தது. இந்த வாழ்வு இவர்களுக்கு வாய்த்தது என்று பச்சாதாபப்பட்டோம்.

*இன்னும் ஏங்கவும், இன்னும் இரங்கவும், இன்னும் பரிதாபப்படவும், இன்னும் பாவமே என்று அழவுமான நேரம் வந்தது. அந்த இரக்கம் நெஞ்சில் சுமையாய் ஏறி இருக்கிறது. அந்த ஏக்கம் நிலையாய்ப்போகும் வாழ்வு வரித்தது.*

அது ஒரு புறம் இருக்கட்டும் - நாம் ஆனையிறவு பற்றியல்லவா கதைத்தோம் - பளிங்குக் குன்றுகளாக உப்புக் குவியல் - நாம் பார்த்து இரசித்த காலம். பிறகு, பிறகு..... பிறகு என்ன நடந்தது?

*1980 கள் – அதற்குப் பிற்பாடான காலங்கள் – எம் மூர்க் கவிஞர் **தா. இராமலிங்கம்** அவர்களின் கவிதை இப்படியாக இருக்கின்றது–*

**குடாநாட்டில் இப்போது**
**கொளுத்துது கோடை வெயில்**
**ஆனையிறவு உப்பளத்தில்**
**உப்புக் குவியல்கள்**
**பளிங்குக் குன்றுகள்**
**சரித்திரம் காணாத**
**சாவிளைச்சல்..! சாவிளைச்சல்.**
**அய்யோ வாடிவீடே... நீ**
**வதை கூடம் ஆனாயே**
**விடுதியென இனி உன்னை**
**யார் நம்பி வருவார்கள் ?**
**கதறல் அலறல் எல்லாம்**
**காற்றில் பதிந்து**
**கடல் கடந்து கேட்கிறது**
**அய்யோ வாடி வீடே நீ**
**வதை கூடம் ஆனாயே.**

*வதைகூடம் ஆன வாழ்வு நம் தேசம் முழுவதும் வாய்த்தது. பதை பதைத்துத் திரிந்த வாழ்க்கை நம் சீவியமே ஆனது. உதைபட்டோம் – மிதிபட்டோம் –ஒரு நேரம் நிம்மதியின்றி தவியாய்த் தவித்தோம்.*

அந்த நாட்கள் அதற்குள் மறக்குமா? சென்றன காலங்கள். சிரித்தா சென்றது?

செத்து செத்துத் தவித்தல்லவா வாழ்ந்தோம் -

வாழ்ந்தோம் எனலாமா? வதைபட்டோம் அல்லவா? என் அம்மாவைக்கேள் - உன் அம்மாவைக் கேள் - தம் புதல்வர் தப்பி வருவார் என்றா நம்பினர்?

*வழிமேல் விழி வைத்த அம்மாக்கள் – வாழ்வின் மேல் விதி விழுந்த அம்மாக்கள் – வழியெங்கும் வதைகூடம் – வெளியே புறப்பட்டவன் விதியே என்ற வாழ்க்கை – எந்த நாளை நினைக்க? எந்த நாளை மறக்க? தொலைந்துபோவோர் எத்தனை? காணாமல் போனோர் எத்தனை!*

*சொல்லாமல் போன புதல்வர் எத்தனை! இல்லாமலே ஆனோர் இவ்வளவா? எவ்வளவு?*

நம் நாடே வயலாய் ஆனது - விளைந்த பயிர்கள் யாவும் அறுபட்டன. முற்றிய கதிர்கள் யாவும் நெரிபட்டன. கலை தள்ள முன்னரே குருத்துக்கள் சிதைபட்டன. பயிர் விளைய முன்னரே பதறப் பதறக் கொலைபட்டன.

*ஆயிரத்தெட்டு வதைமுகாம்கள் – அதில் ஆனையிறவும் ஒரு முகாம் – தமிழ் இளைஞர் தடுத்து வைக்கப்பட்டனர் – தாக்கி அழிக்கப்பட்டனர். தடைமுகாமில் தாய்மாரின் நீண்ட வரிசை நின்றது. நீர் நிரம்பிய கண்கள், நினைத்த போது பொங்கிவரும் கண்ணீர் – ஏக்கம் நிறைந்த மனது – ஏன் என்று கேட்கமுடியாப் பொழுது.*

உப்புக்காற்று உடல் தழுவியது - உள்ளத்தில் நிறைந்த நெருப்புக் குவியல் - பத்துமாதம் சுமந்த வயிறு பரிதவித்தது - **வாயடைத்துப்போனது – வராது ஒரு சொல் என்றது – பேய் அரசு செய்தது – பிணம் தின்றது வாழ்வு** - என் அம்மாவிடம் கேள் - உன் அம்மாவிடம் கேள் - வதைமுகாம்களில் வாடி நின்ற எல்லா அம்மாக்களிடமும் கேள் - வரலாறு நெடுகிலும் துயர் படர்ந்த கதை கூறுவார் - வரலாறு நெடுகிலும் குருதி படிந்த கதை கூறுவார்.

*நித்திரை இல்லா இரவுகள் இவர்களுக்கு விதிக்கப்பட்டது – பசியில்லா வயிறுகள் இவர்களுக்கென வைக்கப்பட்டது. ஒழுக இனி ஒரு துளி நீரின்றி அத்தனையும் கொட்டப்பட்டது. வடிய இனியொரு துயரின்றி அத்தனையும் ஊற்றப்பட்டது* – ஒருநாளல்ல; இரு நாளலல்ல; எல்லா நாட்களும் இதுவே வாழ்வென்று எழுதப்பட்டது - ஒருவர்க்கல்ல; இருவர்க்கல்ல - எல்லோருக்கும் இதுவே விதியென்று வரையப்பட்டது. இனி ஏது செய்வோம் என்று ஏங்கி அழுவதற்கான நாள் விதிக்கப்பட்டது.

*இப்போ நாள் மாற்றி எழுதப்பட்டது. விதியே என்ற வாழ்க்கை விரைந்தோடிவிட்டது. வாழ்வைத் தீர்மானிப்பவர்கள் நாங்கள் எனும் வகைக்கு நாள் வந்துவிட்டது.*

நாளை நாம் கையில் எடுத்தோம் - வாழ்வை நம் வாசலுக்குக் கொணர்ந்தோம் - இறைவனால்தான் இது இயலும் என்றதை திருத்தி எழுதினோம் - மனிதரால் செய்யத்தக்கது மகத்தானது என்னும் புதுச் செய்தி சொன்னோம்.

*காற்று எம் காதில் ஓதிய செய்தி கேட்டாயா? வெற்றி என்று வீர முழக்கமிட்டதை அறிந்தாயா? நாளை நமதே –இந்த நாடும் நமதே என்பதைப் புரிந்தாயா?*

உலகெங்கும் ஓங்கி ஒலிக்கப்படும் செய்தி தெரிந்ததா? ஒடுக்கப்படும் மக்கள் ஒரு நாளைக்கு உலகாள எழுவார்கள் என்ற விசயம் புரிந்ததா?

*சென்றன துன்பங்கள் – இனி வந்தன இன்பங்கள் – சென்றன தோல்விகள் –இனி வந்தன வெற்றிகள் – என்றன காலங்கள் எம்மிடை தோன்றின.*

இனி வெற்றி ஒருபோதும் தோற்கா வெற்றி-


இனி வாழ்வு ஒருபோதும் துவளா வாழ்வு -

இனி நாங்கள் எப்போதும் வென்றிட்ட மாந்தர் -


இனி விடுதலை! ஒருபோதும் தோற்றுப் போகாது சுதந்திரம்.


ரோயல் ஜுவலரி
Royal Jewelry
உங்கள் நகைத் தேவைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பூர்த்திசெய்துகொள்ள நீங்கள் நாடவேண்டியது
287, High Street, East Ham, Manor Park, London E12 6SL
Tel: 020 8472 5500 - Fax: 020 8472 5687

# டைசனின் அறைகூவலை லூயிஸ் ஏற்றுக்கொள்வாரா?




உலக குத்துச்சண்டை அரங்கில் தற்போதைய 'ஹெவி வெயிட் சம்பியன்' லெனக்ஸ் லுயிஸ். கடந்த வருடம் ஹோலி பீல்டை தோற்கடித்து முதல்முறை சம்பியனான இவர், சமீபத்தில் நடந்த போட்டி ஒன்றில் மைக்கல் கிராண்டைத் தோற்கடித்து பட்டத்தைத் தொடர்ந்து தக்கவைத்திருக்கிறார். இந்நிலையில் முன்னாள் ஹெவி வெயிட் சம்பியன் மைக்டைசன் மீண்டும் வெற்றி



களைப் பெற்று வருகிறார். இதனால் டைசனைப் பற்றி லூயிசிடம் கேட்டபோது அவர் டைசனை அலட்சியம் செய்து பதில் கொடுத்தார்.

இதையறிந்த டைசன் ஆவேசமாக, 'லூயிஸ் சாதாரண ஆட்களுடன் மோதிவிட்டு ஹெவி வெயிட் சம்பியன் என்று பெருமையடித்துக்கொள்கிறார். அவருக்கு தைரியம் இருந்தால் என்னுடன் நேருக்கு நேர் மோதட்டும். குத்துச்சண்டைக் களத்தில்தான் என்றில்லை சாதாரண தெருவில் கூட அவரை என்னால் தோற்கடிக்க முடியும். என்னிடம் மோத வேண்டும் என்று ஆசைப்பட்டால் எந்த நேரமும் நான் தயாராக இருக்கிறேன். அவர்தான் தைரியமாக இதுபற்றி முடிவு செய்யவேண்டும்' என லூயிசிடம் அறைகூவல் விடுத்தார். டைசனின் இவ் அறைகூவலை லூயிஸ் ஏற்றுக்கொள்வாரா? என்பது விரைவில் தெரிந்துவிடும்.

# மார்ட்டினா நவரத்திலோவாவையும் ஆசை விட்டுவைக்கவில்லை

இருபதாம் நூற்றாண்டின் கடைசிக்காலக் கட்டங்களில் இணையற்ற டென்னிஸ் நட்சத்திரமாகப் பிரகாசித்தவர் மார்ட்டினா நவரத்திலோவா. இந்த நட்சத்திரம் டென்னிஸ் விளையாட்டுக்கு முழுக்குப்போட்டு 5 வருடங்களுக்கு மேலாகின்றது. போனவர் போகவேண்டியது தானே! ஆனால் ஆசை யாரைத்தான் விட்டுவைத்தது. 43 வயதாகிய நிலையிலும் டென்னிஸ் உலகே வியக்கும் வண்ணம் மறுபடி விளையாடவருகின்றார் மார்ட்டினா. இந்தமாத இறுதியில் ஆரம்பிக்கும் பிரெஞ்சு ஓப்பன் போட்டியில் இரட்டையர் பிரிவில் தனது அதிரடி சாகசத்தை மறுபடியும் படைப்பதற்காக தென்னாபிரிக்காவின் மரியான் டி ஸ்வாட்டை சோடி சேர்த்துள்ளார் மார்ட்டினா. பிரெஞ்சுக் போட்டியின் முன்னோட்டத்தை வைத்து அடுத்த மாத கடைசியில் ஆரம்பிக்கும் பிரசித்திபெற்ற விம்பிள்டன் போட்டியிலும் இச்சோடி ஆட உள்ளது.



மார்ட்டினா நவரத்திலோவாவின் மீள்வருகை புரியாத புதிராக இருப்பினும் சாதனை ஒன்றைப் படைப்பதற்காகவே இந்த மீள்வருகை என டென்னிஸ் வட்டாரத்தில் பரவலாகப் பேசப்படுகின்றது. புகழ்பெற்ற டென்னிஸ் வீராங்கனை பில்லி ஜீன் கிங், விம்பிள்டனில் மட்டும் 20 கிராண்ட் பட்டங்களை வென்று சாதனையாக திகழ்கிறார். நெடுங்காலம் ஆகியும் இவரின் இந்த சாதனையை இதுவரை யாரும் எட்டிவிடவில்லை.

இச்சாதனையைத் தொட மார்ட்டினா நவரத்திலோவாவுக்கு மட்டுமே தற்போதைக்கு இயலும் என்பதால், இவர் மீள்வருகை செய்திருக்கலாம். 9 விம்பிள்டன் பட்டங்களுடன் 19 கிராண்ட் பட்டங்களை வைத்திருக்கும் மார்ட்டினா, 2 பட்டங்களை மட்டும் வென்றால் சாதனைக்குரியவராகிவிடுவார்.

அமெரிக்க பிரஜையாகிவிட்ட மார்ட்டினாவுக்கு உண்மையான தாயகம் செக்கோஸ்லோவாக்கியா. அங்குள்ள பிராக் நகரில் பிறந்த மார்ட்டினா, மலைச்சறுக்கு விளையாட்டின் பயிற்சியாளரான தந்தையின் அரவணைப்பில் இயல்பாகவே விளையாட்டில் ஆர்வம் கொண்டார். வளர வளர டென்னிசில் பளிச்சிட்டு, 1972 முதல் 1975 வரை செக்கின் தேசிய சம்பியனாகத் திகழ்ந்தார்.

1973-இல் ஜூனியர் விம்பிள்டன் பட்டத்தை வென்று சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்தார். அன்றிலிருந்து சர்வதேசப் போட்டிகளில் பெருமளவில் தன்னை வெளிப்படுத்த நினைத்த மார்ட்டினாவுக்கு, செக் டென்னிஸ் சம்மேளனம் எதிர்பார்த்த ஆதரவும் உதவியும் கொடுக்கவில்லை. இதன் பிரதிபலிப்பே 1975ம் ஆண்டு மார்ட்டினா அமெரிக்காவுக்கு குடியேறியதாகும். அந்தச் சமயத்தில் முன்னணி வீராங்கனையாக இருந்த கிரிஸ் எவர்ட்டுடன் சேர்ந்து முதலில் விம்பிள்டன் இரட்டையர் பட்டத்தை வென்றார். தொடர்ந்து விம்பிள்டனில் மட்டுமன்றி மற்றைய கிராண்ட் போட்டிகளிலும் வெற்றிவாகை சூடி இறுதியில் கிரிஸ் எவர்ட்டையே மிஞ்சிக்கொண்டார். 331 வாரங்கள் முதலிடத்தைத் தனதாக்கிய மார்ட்டினா (உலக சாதனை ஸ்ரெபி கிராப்பின் 374 வாரங்கள்) கிராண்ட் போட்டிகளில் மட்டும் இவர் வென்ற பட்டங்கள் 56. டென்னிஸ் வாழ்க்கையில் இவர் வென்ற ஒற்றையர் பட்டங்கள் 167. மொத்தத்தில் வென்ற ஆட்டங்கள் 1438. தோற்றவை 212. இவற்றையெல்லாம் தவிர நாடுகளுக்கிடையில் நடைபெறும் பெடரேஷன் கோப்பையை இருநாடுகளுக்கு வாங்கிக் கொடுத்த பெருமை மார்ட்டினா நவரத்திலோவாவுக்கே சாரும்.

1975-இல் செக்கோஸ்லாவாக்கியாவுக்கும் 1982இல் அமெரிக்காவுக்கும் கோப்பை கிடைத்த அணிகளில் மார்ட்டினா விளையாடியுள்ளார்.

# பிரிந்த நாடுகள் மோதிக்கொண்ட இறுதியாட்டம்


கடந்த நூற்றாண்டின் இறுதியில் கிழக்கு ஐரோப்பாவில் நடைபெற்ற பெருமாறுதல்களுக்கிடையில் செக்கோஸ்லாவாக்கியா நாடு செக்குடியரசாகவும், ஸ்லோவாக்கியாவாகவும் சமாதான முறையில் இருவேறு தேசங்களாகப் பிரிந்துசென்றன. பிரிந்துபோன இவ்விருநாடுகளுமே 14.05.2000 ரஷ்யாவில் நடைபெற்ற உலகக்கிண்ண ஐஸ்ஹொக்கி இறுதியாட்டத்தில் சந்தித்துக்கொண்டன.

ஆட்டம் ஆரம்பித்ததும் அதிர்ஸ்டம் செக் பக்கம் சாய்ந்துவிட்டதுபோல் மள்மளவென 3 கோல்களைப்போட்டு ஸ்லோவாக்கியாவை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இந்த அதிர்ச்சியிலிருந்து விடுவதற்கு 28 நிமிடங்கள் பொறுத்திருந்த ஸ்லோவாக்கியா, தன் பங்கிற்கு ஒரு கோலைப்போட்டது. பின்பு 44 ஆவது நிமிடத்தில் செக் மேலும் ஒரு கோல்போட்டு தன்நிலையைத் திடப்படுத்தியது. இருந்தாலும் ஆட்டம் முடியும், தறுவாயில் 56 ஆவது நிமிடத்தில் ஸ்லோவாக்கியா தனது இரண்டாவது கோல் போட்ட அடுத்த கணத்தில், 58 ஆவது நிமிடத்திலும் மேலும் ஒரு கோலைப்போட 4:3 என ஆட்டம் பெரும் விறுவிறுப்புக்குள் நுழைந்தது. இன்னொரு கோலை ஸ்லோவாக்கியா போட்டுவிட்டு சமநிலைப் படுத்திவிடலாம் என்றமாதிரி ஆட்டம் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியபோது செக் தன் வெற்றியை உறுதியாக்கிவிட்ட மாதிரி 59-ஆவது நிமிடத்தில் தனது 5-ஆவது கோலைப் போட்டுக்கொண்டது. 12, 350 பார்வையாளர்கள் பார்த்து ரசித்த இவ்விறுதியாட்டத்தில் செக் 5:3 என வென்றது. அடுத்து நடைபெறப்போகும் ஐஸ்ஹொக்கி போட்டிகளின் விபரம்:

2001 — ஜேர்மனி
2002 — சுவீடன்
2003 — செக்குடியரசு
2004 — பின்லாந்து.

# தனது சாதனையை மீண்டும் முறியடித்தார்

சிட்னியில் நடைபெற்றுவரும் அவுஸ்திரேலிய தேசிய நீச்சல் சம்பியன் போட்டிகளின் 400 மீற்றர் ஃபிறீ ஸ்ரையில் போட்டியில் இயன் தோர்பே புதிய உலக சாதனை படைத்துள்ளார். 17 வயதான தோர்பே தனது முன்னைய சாதனையான 3 நிமிடம் 41.83 விநாடிகளை, 3 நிமிடம் 41.33 விநாடிகளாகக் குறைத்திருக்கிறார். அண்மைக்காலமாக நீச்சலில் சாதனைகள் புரிந்துவரும் தோர்பே, எதிர்வரும் சிட்னி ஒலிம்பிக்கில் அவுஸ்திரேலியாவின் தங்கப்பதக்க பட்டியலுக்கு வலுச்சேர்ப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.



இதனிடையே 24 மணித்தியாலத்தில் 200 மீற்றர் 'ஃபிறிஸ்ரையில்' போட்டியிலும் தோர்பே சாதனை படைத்துள்ளார். இதுவும் தனது முன்னைய சாதனையை விட 0.31 விநாடிகள் குறைவாக 1 நிமிடம் 45.69 விநாடிகளில் பெற்றதாகும்.

# கார் ஓட்டப் பந்தய வீரன் மரணம்

இங்கிலாந்து நாட்டில் குடும்ப பாரம்பரியம் என்பது அரசில் இருந்து குடிகள் வரை ஊறிவிட்ட ஒன்று. விளையாட்டில்கூட இந்தப் பாரம்பரியப் பேணல் பற்றிக்கொண்டுவிட்டது. கார்ப் பந்தய வீரர்கள் லிபெட்டி, இவரின் மகன் ரிச்சட் பெட்டி, இவரின் மகன் கைல்பெட்டி, சம்பியன்களாக மூன்று பரம்பரை கண்டவர்கள். இவர்களின் வழியில் நான்காவது பரம்பரையாக கைல் பெட்டியின் மகன் அதம்பெட்டியும் கார் பந்தய வீரனாக முளைத்துக்கொண்டார். 19 வயதான அதம்பெட்டி, பயிற்சியின்போது தனது காரை தடுப்புச் சுவரில் மோதி விபத்துக்குள்ளானார். சம்பவ இடத்திலிருந்து இவரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபோதும் தலையில் ஏற்பட்ட பலத்த காயத்தால் மரணம் தவிர்க்க முடியாததாகிவிட்டது. இதனால் பெட்டி வம்சத்தின் பெருமைகளும் மரணத்திற்குச் சென்றுவிடுமோ?

தொகுப்பு: பொன். தாமோதரம்

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## வெறிச்சோடி...:

கள் வெளியேறியதையடுத்து யாழ். வைத்தியசாலையும் வெறிச்சோடிக் காணப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதே வேளை யாழ்நகரப்பகுதியும் தற்போது பொதுமக்களின் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிப் போயுள்ளதாக தெரியவருகிறது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## சந்திரிகாவின்...

டன் விவாதித்ததுடன், அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு விளக்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடுமையான சமர் நடப்பதென்பதை இக் கூட்டத்தில் ஒத்துக்கொண்ட சந்திரிகா, வழமைபோலவே பாதுகாப்புப் படையினர் விடுதலைப் புலிகளை முறியடித்து வருவதாகவும் கூறியுள்ளார். இக் கூட்டத்தில் கொழும்புத் தமிழ்க் குழுக்களும் கலந்துகொண்டன.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் புலிகளின் முற்றுகைக்குள் சிக்கியுள்ள 40,000 படையினரின் நிலைமை குறித்து ஆராய்வதற்காக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்திரிகாவிடம் சந்தர்ப்பம் கோரியுள்ளார்.

இதற்காக அவர் சந்திரிகாவிற்கு அனுப்பிய தொலைநகலில் இச் சந்திப்பு உடனடியாக நடைபெற நேரத்தை ஒதுக்குமாறு கோரியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(23-ம் பக்கத் தொடர்ச்சி)

## சிங்கத்தை...

கள் பூர்வீகத்தைக் குறிக்கும் வகையில் இலங்கை சிங்கள அரசு தேசியக் கொடியில் சிங்கத்தின் உருவத்தைப் பொறித்து இருக்கிறது. இந்த கொடியைத் தவிர, இலங்கைத் தீவு உயிருள்ள சிங்கங்கள் வாழும் நாடு அல்ல.

தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் சிவப்புநிற கொடியில் புலியின் முகம் பொறித்து உள்ளனர். 'புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்' என்பது இவர்களின் தாரக மந்திரம், சிங்கள சிங்கத்தை தமிழ்ப்புலி வென்ற இன்றைய போர்க்கள காட்சிதான் நாளைய வரலாறு ஆகப்போகிறது.

இந்திய அரசு கூறுவது போல இலங்கையில் சிறுபான்மையினரான தமிழ் மக்களின் உரிமைகள் முழு அளவில் மதிக்கப்படும் விதத்தில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு அமைய வேண்டுமெனில், தமிழர்கள் சிங்களர்களுக்கு அடிமைப்படாமல் நாட்டின் 2-ம் தர பிரஜையாக ஒடுக்கப்படாமல் சிங்களருடன் சம அந்தஸ்துடன் வாழ வேண்டுமெனில், அது சுதந்திர தமிழ் ஈழத்தில் தான் நிகழ முடியும் என்பது கடந்த கால அனுபவங்கள் கூறும் தீர்ப்பு. 'தமிழ் வாழ்க! தமிழ் ஈழம் மலர்க' என்று ஈழத் தமிழர்களை உலகம் வாழ்த்தும் நாள் விரைவில் வரட்டும்!

*நன்றி: தேவி*


## நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் ஹொந், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன சேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.



நித்தி:
0148050214 / 0613342518
0607348051 / 0148385825

Pub Fr


## கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ ?

அந்த 26 உயிர்களுக்காய் உங்களிடம் கையேந்தி நின்றோம்.
கடிதங்கள் வரைந்தோம்
முடிந்தவரை போராடினோம்.

இனிபோது செய்வோம்?


இம்மூவருக்கும் நாள் குறிக்கும்வரை பார்த்திருப்போமா?
கடைசி முயற்சியாய் இந்தியக் குடியரசுத் தலைவரின் மனச்சாட்சியை அசைக்க முயல்வோம்.
கருணைமனுவிற்கு வலிமை சேர்க்க
கடிதங்கள் எழுதுவோம், மகஜர்கள் அனுப்புவோம் இந்த அப்பாவிகளின் உயிர்களை மீட்டுத்தாருங்கள் என்று இந்திய மனச்சாட்சியிடம் மன்றாடுவோம்.

அன்பான தமிழ் மக்களே,
நின்று நிதானிக்க நேரமில்லை.
மூன்று உயிர்களுக்காய் விரைந்து பணிசெய்வோம்.

மனுக்கள் அனுப்பவேண்டிய முகவரி:

**Mr. K.R. Narayanan**
*President of India*
Office of The President
Rashtrapati Bhavan
New Delmi - 110 004, Indida
Telegrams - President, Newdelhi, India
Faxes -+91 11 301 7290

## மரண அறிவித்தல்



இறப்பு:
07.05.2000

## இராமலிங்கம் முத்தையா

(சித்தங்கேணி)

அராலியைப் பிறப்பிடமாகவும், சித்தங்கேணி, கீரிமலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் முத்தையா 07.05.2000 அன்று ஞாயிற்றுக்கிழமை சித்தங்கேணியில் காலமானார். இவர் காலம் சென்ற இராமலிங்கம், காலம்சென்ற செல்லம்மா ஆகியோரின் மகனும், சிவசம்பு, அன்னம்மா ஆகியோரின் மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், சின்னத்துரை (இலங்கை), நாகேஸ்வரி (இலங்கை) ஆகியோரின் சகோதரனும், காலம் சென்ற லீலாவதி, கதிரவேலு (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும், ராஜரட்ணம் (சுவிஸ்) செல்வரத்தினம் (சுவிஸ்) ஈஸ்வரி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராஜமலர், பாமினி (சுவிஸ்), இராஜேந்திரம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சதீஸ் (சுவிஸ்), யுவன்யா, வாசுகி, சுமன், மதன், வினோத் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரிகைகள் 08.05.2000 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று, விலாவெளி மயானத்தில் அன்னாரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
இராஜரட்ணம் (சுவிஸ்)
தொலைபேசி இல: 014813207
செல்வரத்தினம் (சுவிஸ்)
தொலைபேசி இல: 032 6855380



## LUNE TELECOM

CARTES TELEPHONIQUES PREPAYEES
Service commerciale: 01 53 26 76 70 / 06 13 05 60 59




| PAYS | 150 U (Min) | 75 U (Min) |
|---|---|---|
| SRILANKA | 38 | 19 |
| INDE | 36 | 18 |
| CHINE | 52 | 26 |
| PAKISTAN | 33 | 16 |
| BANGLADESH | 33 | 16 |
| SINGAPORE | 66 | 33 |
| TAIWAN | 65 | 32 |
| THAILANDE | 33 | 16 |
| JAPAN | 81 | 40 |
| INDONESIE | 35 | 17 |
| HONGKONG | 55 | 27 |
| HUNGARY | 42 | 21 |
| MALAISIE | 56 | 28 |
| FRANCE | 100 | 50 |

AMD K6-II 500Mhz 3D
Carte Mère GIGABYTE ALI
SDRAM 64Mo 100 Mhz
Disque Dur 10Go MAXTOR
Carte Video 8Mo AGP S3 3D
Carte Son 64 Bits PCI ALS 4000V
Lecteur CD-ROM 48x SAMSUNG
Lecteur Disquette 1.44 Mo
Modem Interne 56 Kbps
Boitier Moyen Tour ATX 250W
Clavier 103 Touches PS/2
Souris PS/2
HP 160W PMPO
Ecran 15' Huyndai




3 Ans Garantie
1 an Pièces

LUNE
Lune INFORMATIQUE
5, Rue Perdonnet, 75010 Paris
Tel. & Fax: 01 53 26 76 70
Metro: Gare du Nord / Lachapelle

Pentium III 600Mhz
Carte Mère QDI 440 BX
SDRAM 64Mo 100 Mhz
Disque Dur 10Go MAXTOR
Carte Video 32Mo AGP TNT2 3D
Carte Son 64 Bits PCI ALS 4000V
Lecteur CD-ROM 48x SAMSUNG
Lecteur Disquette 1.44 Mo
Modem Interne 56 Kbps
Boitier Moyen Tour ATX 250W
Clavier 108 Touches PS/2
Souris PS/2
HP 160W PMPO
Ecran 15' Huyndai




தங்க மாளிகை ஜுவெல்லர்ஸ்

திங்கள் தவிர்ந்த வாரத்தில் ஒவ்வொரு நாட்களும் காலை 10.30 மணிமுதல் மாலை 6.30 மணிவரை திறந்திருக்கும்

மங்கையர்க்கொரு மாளிகை தங்க மாளிகை

Thanga Maligai Jewellers

Amalia House

276, Lewisham High Street,
London,
SE13 6JZ.

Tel: 020 8690 3686
Fax: 020 8690 4157

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

# பாகிஸ்தானுடன் சிங்களவர்கள் கை கோர்த்தாலும் இந்தியாவிற்கு அரணாக ஈழம் இருக்கும் - வைகோ

(15.05.00)

எதிர் காலத்தில் தமிழீழம் அமையும். இது வரலாற்றின் கட்டாயம். அப்படி அமையும் ஈழம் இந்தியாவிற்கு நட்பாகவும், சகோதர நாடாகவும் இருக்கும். சிங்கள எல்லைப்பகுதி அதைத் தாண்டித்தான் அமைந்துள்ளது. இந்தியாவிற்கு எதிராக பாகிஸ்தானுடன் சிங்களவர்கள் கை கோர்த்தாலும் இரண்டுக்கும் இடையில் இந்தியாவிற்கு ஒரு அரணாக தமிழீழம் இருக்கும் என ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளியன்று தமிழகப் பத்திரிகையொன்றுக்கு பேட்டிளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் போர்க்களத்தில் நிற்கின்ற ஈழத்தமிழர்களுக்கு உதவவேண்டும் என்பதுதான் எனது உணர்வு. அவ்வாறு உதவினால் இலங்கையின் ஒருமைப்பாட்டை இந்தியா குலைக்கிறது என்று புகார் வரும். அதனால்த்தான் இதில் இந்தியா தலையிடுவதில்லை என முடிவு செய்தது எனத் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று மதுரையில் நடைபெற்ற திருமணவிழா ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில், கடந்த 17 ஆண்டுகளாக சிங்களவர்கள் ஈழத்தமிழர்களை படுத்திய கொடுமைக்கு அளவே இல்லை. அப்போதெல்லாம் எதுவும் கூறாமல் இருந்துவிட்டு விடுதலைப் புலிகளின் கை ஓங்கிநிற்கும் இவ்வேளையில், சிங்கள அரசு இந்திய அரசிடம் உதவி கேட்கிறது. பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆயுதங்களைக் கொடுத்து தமிழர்களை அழிக்க துணை நிற்கிறது. வாஜ்பாய் இதுபோன்ற காரியங்களைச் செய்யமாட்டார். இந்நேரம் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தால் மறைமுகமாக இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கியிருக்கும். நான் ஏன் வாஜ்பாயை பிரதமராக்க முயற்சி செய்தேன் என்பது தமிழர்களுக்கு இப்போது விளங்கியிருக்கும். ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு அளிப்பதால் இந்திய ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஊறு விளைவிக்க அனுமதிக்கமாட்டோம். தனி ஈழம் உருவானாலும் இலங்கை அரசு ஈழத்தமிழர்களுக்கு பல்வேறு வகையில் தண்டனைகளை உருவாக்கும். ஈழத்தமிழர்களுக்கு தமிழர்கள் என்ற முறையில் உணர்வுபூர்வமான ஆதரவு அளிக்க வேண்டும் என தனது உரையில் தெரிவித்தார்.

## வன்னிக்கான மருந்துத்தடை குறித்து இந்தியப் பிரதமருக்கு மகஜர்

(15.05.00)

வன்னிப்பகுதி மீது சிறீலங்கா அரசு மேற்கொண்டுவரும் உணவு மற்றும் மருந்துத்தடைகளினால் அங்குள்ள மக்கள் பெரும் நெருக்கடிகளை தொடர்ந்து சந்தித்து வருவது தெரிந்ததே. இந்நிலையில் சிறீலங்கா அரசின் இத் தடையினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி, கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் இந்தியப்பிரதமர் வாஜ்பாயிக்கு அவசர மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறீலங்கா அரசின் இத் தடைகளினால் பல வைத்தியசாலைகள் மருந்தின்றி மூடப்படும் நிலைக்கு உள்ளாகியுள்ளதாகவும் அம் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், சிறீலங்கா வான்படையின் தாக்குதல்களும், எறிகணைத் தாக்குதல்களும் இடம்பெற்று வரும் இவ்வேளையில் காயமடைகின்ற பொதுமக்கள் உரிய வைத்திய வசதிகளைப் பெறமுடியாது மரணமடைய வேண்டிய அபாய நிலைமை குறித்தும், மருந்து தட்டுப்பாட்டினால் சிறுவர்கள், குழந்தைகள் பாதிக்கப்படுவது குறித்தும் அம் மனுவில் குறிப்பிடப்பிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## உயர் பாதுகாப்பு வலையத்தினுள் தாக்குதல்

சிறீலங்காப் படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள மிகவும் உயர் பாதுகாப்புக்களைக் கொண்ட மன்னார் நகரப்பகுதியில் விடுதலைப் புலிகள் நடாத்திய கிளைமோர்த் தாக்குதலில் ஐந்து சிறீலங்கா இராணுவப் பொலிசார் படுகாயமடைந்துள்ளனர். கடந்த வியாழனன்று காலை 10.30 மணியளவில் இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இத் தாக்குதலில் காயமடைந்தவர்களில் மூவரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தாக்குதலையடுத்து அப்பகுதியை சுற்றிவளைத்த இராணுவத்தினரும் பொலிசாரும் பொதுமக்களை தாக்கியதுடன் ஒருவரை கைது செய்துகொண்டு சென்றுள்ளனர்.

## வன்னியில் விமானத் தாக்குதல் நடத்தப்போவதாக சிறீலங்கா அறிவிப்பு

(15.05.00)

வன்னிப் பகுதி மீது விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்போவதாக சிறீலங்கா அறிவித்துள்ளது. சிறீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டு வருகின்ற 'வானம்பாடி' எனும் ஒலிபரப்பில் இதுபற்றிய அறிவித்தல்களை இன்று தொடர்ந்து அறிவித்து வருகின்றது. புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடாத்தப்போவதாக சிறீலங்கா இந்த அறிவிப்பை விடுத்துள்ள போதிலும், தமிழ் மக்கள் மீதே இத்தாக்குதல் இடம்பெற உள்ளதாக பல சர்வதேச நிறுவனங்கள் அதிர்ச்சி தெரிவித்துள்ளன. சிறீலங்கா அரசினால் உணவு மற்றும் மருத்துவத் தடைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்நிலையில் இவ்வாறான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டால் வன்னியில் பெரும் உயிர் அழிவுகளை இது ஏற்படுத்தும் என அவ் அமைப்புக்கள் மேலும் அச்சம் தெரிவித்துள்ளன.

இதேவேளை, புலிகளின் குரல் வானொலியின் இன்றைய இரவுச் செய்தி ஒலிபரப்பில், 'வன்னிப் பெருநிலப்பரப்பு மீது விமான குண்டுத் தாக்குதல்களை தான் நடத்தப்போவதாக சிறீலங்கா அரசாங்கம் பெரும் ஊடகவியல் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றது' என்று குற்றம் சாட்டியுள்ளது.

## வெறிச்சோடிய யாழ். வைத்தியசாலை

(15.05.00)

யாழ். போதனா வைத்திய சாலையில் ஆபத்து நிலையில் இல்லாத நோயாளர்கள் 80 வீதமானோர் அவர்களின் வீடுகளுக்குப் பாதுகாப்புக் காரணங்களுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். ஆபத்தான நிலையில் உள்ள நோயாளர்கள் மானிப்பாய் மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இங்கு தங்க வைக்கப்பட்டிருந்த நோயாளர்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

K.R.S. ENTERPRISES
கே.ஆர்.எஸ். என்ரபிறைசெஸ்
537 High Road,
Wembley
Middlesey, HA0 2DJ,
Tel: 0181- 9024590
நிர்வாகி: G.சதீஸ்
Pub

★ Leela அரிசிமா - 89P ல் இருந்து
★ Kingfish- 2.59 ல் இருந்து
★ நீலக்கால் [துப்பரவு செய்த] நண்டு £3.89 ல் இருந்து
★ 20 Kg Broken Basmath £7.99 இலிருந்து
★ CD 2.99 இல் இருந்து - ★ Audio 99 இல் இருந்து
★ நல்லெண்ணை £3.49; 1/2 போத்தல் £1.79
★ அனைத்துத் தொலைபேசி அட்டைகளும் 10% விலைக் கழிவில்
£20 இற்கு மேல் கொள்வனவு செய்தால் 1 Kg லீலா அரிசிமா இலவசம்!
லீலாவின் அனைத்துத் தயாரிப்புக்களும் மலிவு விலையில்!!